

# நீ அந்த நிலவு..!

ஜெய்சக்தி



1

நல்லவேளை இன்னும் நேரமிருந்தது.

ராம்பிரசாத் அவசரம்அவசரமாக தோளில் பையை மாட்டிக்கொண்டு கிளம்பினான்.

"ஏம்ப்பா... இன்னும் பைக் ரெடியாகலையா?" என்று கேட்டார் அவனது தாய் ராஜேஸ்வரி.

"ஆமாம்மா... பைக் ரெடியாயிடுச்சு. எனக்குப் போய் எடுத்துட்டு வர்றதுக்கு நேரமில்லை. முடிஞ்சா இன்னைக்கு ஈவினிங் வரும்பொழுது எடுத்துட்டு வந்துடறேன்" என்று சொல்லிவிட்டு கிளம்பினான்.

காலைநேர பரபரப்பில் நடந்து செல்வது நன்றாக இருந்தாலும் கூட நேரப்பிரச்னை காரணமாக அவன் பைக்கில் தான் செல்வது வழக்கம்.

பள்ளி, கல்லூரி நாட்களில் நின்று நிதானமாக சுற்றுப்புறத்தை ரசித்துச் செல்வது பழக்கமாக இருந்தது. ஆனால் இப்பொழுதோ அரக்கப்பரக்க ஓடுவதே வாழ்க்கை என்று ஆகிவிட்டது.

இருந்தாலும் இந்த ஒரு வாரமாக பஸ்சில் செல்வது ஒரு மாறுபட்ட அனுபவமாக இருந்தது.

அதற்காக அவன் ஒரு தந்திரத்தைக் கடைபிடித்தான். தான் செல்லவேண்டிய நேரத்துக்கு முன்பு ஒரு பஸ்சைப் பிடித்தால் நிதானமாக போக முடிவதோடு எல்லாவற்றையும் ஆறஅமர ரசிக்க முடிகிறது என்றெண்ணிக் அப்படியே செய்தான்.

பஸ் நிறுத்தத்திற்கு வந்தபொழுது அவனையும் அறியாமல் அவனது கண்கள் அந்த பெண்ணைத் தேடின.

அதோ வருகிறாள்!

ஒருவாரமாக வந்ததில் நேற்றுதான் அவனைப் பார்த்து மெல்ல புன்னகை செய்தாள். இதில் வித்தியாசமான விஷயம் என்னவென்றால் அவர்களுடைய பஸ் ஸ்டாப் உள்ளடங்கி இருந்தது. அநேகமாக அந்த நேரத்துக்கு பஸ் ஏறுபவர்கள் ஒரு ஐந்தாறு பேர் தான்.

அதிலும் இரண்டு பெண்கள் இருந்தார்கள். ஒரு பெண் கொஞ்சம் வயதானவர். அவர் வந்தவுடனே அந்த பஸ்நிறுத்தத்தில் உள்ள இருக்கையில் சட்டென்று அமர்ந்து கொள்வார்.

அந்தப் பெண் தான் தோளில் போட்டிருக்கிற ஹேண்ட் பேக்கைத் தடவிக் கொண்டே நின்று கொண்டிருப்பாள்.

நான்கு நாட்களுக்கு முன்பாக யாரோ ஒரு இளைஞன் வந்து நின்று கொண்டிருந்தான்.

அவனுடைய பார்வை ஒருவிதமாக இருந்ததாலோ என்னவோ அந்தப் பெண் சட்டென்று இவன் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். இவன் அதைக் கண்டுகொள்ளவில்லை. ஆனால் கவனித்துக் கொண்டான்.

எதற்காக அந்தப் பெண் வந்து நிற்கிறாள் என்பதை புரிந்து கொண்டதைப் போல மெல்ல அவளைப் பார்த்துப் புன்னகைத்தான்.

அவளும் புன்னகைத்தாள். இரண்டு பேரும் பரிச்சயமானவர்கள் போல இருக்கிறது என்று எண்ணிக் கொண்ட அந்த இளைஞன், வாலைச் சுருட்டிக் கொண்டு அந்தப்பக்கமாகப்போய் நின்றுவிட்டான்.

ஏதோ பழகிக்கொண்டவர்கள் போல தோற்றம் காட்டிக்கொண்டு அருகருகே நின்றாலும் அந்தப் பெண்ணும் சட்டென்று பேசிவிடவில்லை. இவனும் சட்டென்று பேசிவிடவில்லை. வழக்கம்போல வந்தவுடன் அருகே நிற்பதும் சற்றே புன்னகைப்பதுமாக ஒரு நாடகம் இரண்டு மூன்று நாட்களாக நடந்து கொண்டிருந்தது.

இன்றைக்கும் அந்தப் பெண் வருவதை எதிர்நோக்க ஆரம்பித்தான். உடனே மனசுக்குள்ளாக தன் தலையைத் தானே குட்டிக் கொள்வதைப் போல ஒரு கற்பனை செய்துகொண்டான்.

'தேவையா உனக்கு? இன்னைக்கு சாயங்காலம் பைக் கிடைச்சு துன்னா... நாளையில இருந்து இந்தப்பக்கமே வரப்போறதில்லை. இதுக்குள்ள எதுக்குப்பா... உனக்கு ஃபிரண்ட்ஷிப்?' என்று அவன் மனம் கேட்டது.

அப்பொழுது இன்னொரு மனது, 'பேச்சு பாரு... பைக் ரெடியாகி மூன்று நாளாச்சு... உன்னோட மெக்கானிக் ஃபோன் பண்ணியாச்சு. ஏன் இன்னும் போய் எடுக்காம இருக்கே. ஒருவேளை அதற்கு இந்தப் பெண்தான் காரணமோ...' என்று சொன்னது.

ஆஹா... என்று வாய்விட்டுச் சிரிக்க வேண்டும் போலிருந்தது.

சினிமாக்களைப் பார்த்துப்பார்த்து... கதைப் புத்தகங்களைப் படித்துப்படித்து... நமக்கும்கூட இப்படி கற்பனை ஓடுகிறது போல இருக்கிறது என்று எண்ணிப் புன்னகைத்துக் கொண்டான்.

சட்டென்று அந்தப் பெண், பக்கத்தில் வந்து நின்றவள் ஏதோ சொல்லி யிருக்கிறாள். தலையை உதறிக் கொண்டு திரும்பி அந்தப் பெண்ணைப்



பார்த்து, "ம்... என்ன சொன்னீங்க?" என்று கேட்டான்.

"ஐ ஆம்... எழிலி" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

"ஓ! எழிலி... நல்ல பெயர்" என்று அவன் பாராட்டினான்.

பிறகு, புன்னகைத்துக் கொண்டே, "ஐ ஆம் ராம்பிரசாத்" என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

"அப்படியா..." என்று கேட்டுவிட்டு, மறுபடியும் அமைதியாக நின்றார்கள்.

'இன்றைக்கு பெயரைக் கேட்டோமே அதுவே போதும்' என்று எழிலி அதற்கு மேல் பேசவில்லை.

'நான்தான் பேசிவிட்டேனே...' என்பது போல அவன் பேசாமல் நின்று கொண்டான்.

ராம்பிரசாத்துக்கு மேற்கொண்டு என்னபேசுவது என்று தெரியவில்லை.

அலுவலகத்தில் எத்தனையோ பெண்களிடம் பழகுகிறான். ஆனால் திடீரென பஸ்நிறுத்தத்தில் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவள்... அவளிடம் எதைப் பேசுவது? அரசியலா, சினிமாவா, சொந்த விஷயமா? என்று அவனுக்குப் பிடிபடவில்லை.

அமைதியாக நின்று கொண்டான்.

'நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்? என்று கேட்கலாமா... ஒருவேளை அநாகரீகமாக இருக்குமோ... அப்படிச் சொல்லவேண்டுமானால் அவள் சொல்லியிருப்பாள்... ஏதோ பஸ் ஸ்டாண்டில் இரண்டு காலிப்பசங்க வந்து நிற்கிறார்கள். அதற்குப் பாதுகாப்பாக தன்னருகில் வந்து நின்று கொள்கிறாள். அந்த மட்டிலும் நிறுத்திக் கொள்வது நல்லது' என்று தோன்றவும் அமைதியாக நின்று கொண்டான்.

அன்றைக்கென்று பஸ் விரைவாக வந்து விட்டது. பஸ்சில் ஏறியதும் ஜன்னல் ஓர இருக்கை ஒன்று கிடைக்கவும் அமர்ந்து கொண்டான். திரும்பிப் பார்த்தான். அந்தப்பெண், தன் இருக்கைக்கு நேர்பின்னால் அமர்ந்திருப்பது தெரியவும் புன்னகைத்து விட்டு அமர்ந்து கொண்டான்.

பஸ் ஓடியது. அன்றைய நாளும் கூடத்தான்... !

"பிழிஞ்சுடறாங்கப்பா..." என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் ராம்பிரசாத்.

"என்ன பிழிஞ்சாங்க... சாத்துக்குடி ஜூஸா? ஆப்பிள் ஜூஸா?" என்று கேட்டுச் சிரித்தாள் ரமணி.

“அதெல்லாம் நிறையப் பிழிஞ்சு குடுத்துடுவாங்க... கேட்டா... கம்பெனியில அங்கங்கே ஃப்ரூட்ஸ் வச்சுருப்பாங்க, தெரியுமா? ஜூஸ் வேணும்னா... கேட்டாக் குடுப்பாங்க... ஃகாபி, டீ எல்லாம் குடுப்பாங்க. எதுக்குத் தெரியுமா, எல்லாத்தையும் குடுத்துட்டு எங்களப் பிழிஞ்சுடுவாங்க... சாறு பிழிஞ்சுடுவாங்க” என்றான் ராம்பிரசாத்.

ரமணி சிரித்தாள்.

“ஏண்டி... எங்களைப் பிழியறாங்கன்னு சொன்னா உனக்கு சிரிப்பா இருக்கா... ?” என்று கேட்டான் ராம்பிரசாத், பொய் கோபத்துடன்.

ரமணி உடனே முகம்மாறி, “அய்யய்யோ... அப்படியில்லைண்ணா... நீ சொன்னவிதம் நல்லா இருந்துச்சு,. அதுக்காகச் சிரித்தேன்” என்றாள்.

“இருண்ணா... காஃபி போட்டு வச்சுருக்கேன். கொண்டு வர்றேன்” என்று போனாள்.

“முன்னாடியே போட்டு வச்சுட்டியா, சூடு ஆறியிருக்காது?”

“எனக்குத் தெரியுமில்ல... நீ எப்ப வருவேன்னு. அதனால் ஃபில்டர்ல போட்டு வச்சுருக்கேன். உடனே போட்டுத் தர்றேன்” என்று சூடான காஃபியும் அவள் கையால் சுட்ட நெய் முறுக்குமாக கொண்டு வந்து வைத்தாள்.

அந்த நேரத்துக்கு அது இதமாக இருந்தது. அவன் காஃபியை ரசித்து ருசித்துக் குடித்தான்.

அப்படி காஃபியை ரசித்து ருசித்துக் குடித்துக் கொண்டிருக்கும் பொழுதே அவன் மனத்தில் கடந்த ஐந்தாறு நாட்களாக சந்தித்த பெண்ணின் நினைவு வந்தது.

இன்றைக்குப் போய் பைக்கை எடுக்கவேண்டும். லைட்டாக ஏதாவது கொறித்துவிட்டு கிளம்பி விடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

இன்னொரு மனது, ‘வேண்டாம்டா... ராம்பிரசாத். நாளைக்கு எடுத்துக் கலாம். இன்றைக்கு ஒருநாள் மட்டும் அந்தப் பெண்கிட்ட பேசிருவோமே... எங்க வேலை செய்யறா என்று பார்த்துடுவோமே...’ என்றது.

அவன் தங்கை, “அண்ணா! நானும் பாக்கறேன்... ரெண்டு மூணு நாளாக ரொம்ப யோசனையிலேயே இருக்கியே...” என்று கேட்டாள்.

அவன் ஒரு நிமிடம் திணறிவிட்டு, “ஆமாம்மா... ஆபீஸ்ல கொஞ்சம் ஹெவி ஒர்க்... வீட்டுக்குவந்தாலும் அதே நினைப்பா இருக்குது” என்றான்.

“வேண்டாண்ணா... அப்படி ஒரேயடியா முழுகிப் போயிடாதே. அப்புறம் இந்த ஆபீஸை விட்டு இன்னொரு ஆபீஸ் போனா ரொம்பக் கஷ்டமா இருக்கும்”



என்று நடைமுறை உலகைப் புரிந்து கொண்டவள் போல பேசினாள் அவன் தங்கை ரமணி.

“அதென்னமோ அப்படித்தான்” என்றவன், “இப்ப நீ சொல்லு” என்று தன்னுடைய இரண்டு விரல்களையும் நீட்டினான் – ஆள் காட்டி விரலையும் நடுவிரலையும்.

“இரண்டுல ஏதாவது ஒண்ணைத் தொடு” என்று கேட்டான்.

“ஏண்ணா... ?” என்று அவள் சிரிப்போடு பார்க்க...

“இல்லை. இன்னைக்கு கொஞ்சம் டயடா இருக்கு... பைக்கை இன்னைக்கு எடுக்கலாமா, வேண்டாமா? எங்கே தொடு பார்க்கலாம்” என்றான்.

அவள் ஒரு விரலைத் தொட்டாள். உண்மையில் அந்த விரலுக்கு எடுக்கலாம் என்று தான் மனத்தில் குறித்து வைத்திருந்தான்.

விரலைத் தொட்ட தங்கை அவனை நிமிர்ந்து பார்த்து, “என்னண்ணா முடிவு?” என்று கேட்டாள்.

வாயைத் திறந்தவனுடைய வாயில் இருந்து அவனையும் அறியாமல் “நாளைக்கு எடுத்துக்கலாம்னு சொல்லுது” என்று வார்த்தைகள் விழுந்தது.

“இந்தப் பழக்கம் உன்னை இன்னும் விடவே இல்லை” என்று கடகடவென்று சிரித்துக் கொண்டு எழுந்தாள் ரமணி.

“உட்காரும்மா... கொஞ்சநேரம்... எதுக்கு நடந்துகிட்டு இருக்கே. கொஞ்சநேரம் கழிச்சு எடுத்துக் கொண்டு போவியாம்” என்றான் ராம்பிரசாத். தங்கை அமர்ந்து கொண்டாள்.

அப்பொழுது தான் அவன் மனது சொன்னது. ‘நிச்சயமாக அந்தப் பெண் ஏதோ தொல்லை செய்கிறாள். அதனால்தான் நான்கைந்து நாட்களாக நாளைக்கு... நாளைக்கு என்று சொல்லிக் கொண்டு இருக்கிறாய்’ என்று!

கொஞ்சம் திடுக்கிட்டுப்போனான்.

இன்னொரு மனது கேட்டது. ‘என்ன தப்பு? வயசுக்குண்டான ஈர்ப்புதானே. நீ ஆபீஸ்ல எத்தனையோ பெண்களைப் பாக்கறே... வெளியுலகத்துல எத்தனையோ பெண்களைப் பாக்கறே... அவங்ககிட்டே எல்லாம் இல்லாத ஏதோஒண்ணு இந்தப் பொண்ணுகிட்ட இருக்கிறதுனாலதானே உனக்கு அந்தப் பெண்ணைப் பிடிக்குது. பேசிப்பாரு. இதுல என்ன தப்பு’ என்று சொன்னது.

சரி என்று எண்ணிக் கொண்டவன், சகோதரியிடம் சொல்லி விட்டு, “சரிம்மா... நான் போய் பார்க்கிறேன். பைக் ரெடியா இருந்தா எடுத்துட்டு

வர்றேன்'' என்று சொல்லிப் போய் பைக்கை எடுத்துக் கொண்டும் வந்து விட்டான்.

வீட்டின் முன்னாலே இருந்த போர்டிகோவிலே ஒரு பக்கமாக நிறுத்திவிட்டு, தன்னுடைய அறைக்குப் போனான். யோசனையிலே ஆழ்ந்தான்.

அழகாக இருந்தாள்!

சற்று வேகமாக நடந்து வந்தாள். அவள் கைகளை வீசி நடந்து வருகிற விதத்திலேயே ஒரு கம்பீரம் இருந்தது.

ஒருநாள் சுடிதாரில் வந்தாள். ஒரு நாள் புடவையில் வந்தாள். இதுமாதிரியான உடைகளைத்தான் மாற்றிமாற்றி இந்த நான்கைந்து நாட்களாக அணிந்து கொண்டு வந்தாள் என்றாலும் அவள் தேர்ந்தெடுத்த நிறங்களிலெல்லாம் ஒரு ரசனை தெரிந்தது.

சட்டென்று யாரும் நெருங்கி விட முடியாது என்பதற்கான ஒரு தன்னம்பிக்கை தெரிந்தது. முகத்தையும் நடைஉடை பாவனையையும் பார்த்தால் அந்தப் பெண் நல்ல குணமுடையவளாகத் தான் இருப்பாள் போலிருக்கிறது. நல்ல குடும்பத்துப் பெண்ணாகத்தான் இருப்பாள் போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டான்.

'பார்க்கலாம். நாளை கண்டிப்பாக அவளிடத்தில் பேசி விடவேண்டும்' என்று எண்ணிக் கொண்டபொழுதே உள்ளத்தில் ஏனோ... ஒரு மகிழ்ச்சி குப்பென்று பொங்கியது.

இளம் வயதுக்கே உண்டான அந்த ஒரு இனிமையும் வேதனையும் பயமும் நிறைந்த ஒரு உணர்வு அவனைப் பிசைந்து எடுத்தது. 'இது என்னடா வம்பாக இருக்கிறது. நான்கு நாள் பார்த்த பெண்ணிடத்திலே போய் பேசி விடலாமா? அதற்குப் பெயர் பிரியம் அல்லது காதல் என்றாகி விடுமா? இல்லை இது அப்படியே தொடர்ந்து கல்யாணத்தில் முடியுமா?' என்று எண்ணியவன் சட்டென்று கனவில் இருந்து விழித்தவன் போல திடுக்கிட்டான்.

கல்யாணமா? அந்த அளவுக்குப் போயாச்சா... என்று அவனுக்கே அவனைப்பற்றி ஆச்சரியமாக இருந்தது.

அறைவாசல் பக்கம் நிழலாடியது போல இருந்தது. தங்கை ரமணி நின்று கொண்டிருந்தாள்.

"அப்பா, எதுக்கோ கூப்பிடறார்ண்ணா..."

"ஏம்மா... அதுக்கு அங்கிருந்தே குரல் கொடுக்க வேண்டியது தானே?... வந்துருவேன்ல... சரி நீ போம்மா... நான் வர்றேன்."

"சரிண்ணா..." என்று தங்கை நகர்ந்தாள்.



லேசாக காலை விந்தியபடி நடந்துபோகிற தங்கையை பார்த்தான். மனதில் நிறைய கேள்விக்குறிகள் எழுந்தன.

## 2



எழிலி பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்தாள்.

இப்பொழுது கையில் இரண்டு புத்தகங்கள் வேறு இருந்தன.

தோளில் பை தொங்கிக் கொண்டிருந்தது.

அவள் கண்கள் தன்னை அறியாமல் அலைபாய்ந்து கொண்டிருந்தன. ஏனென்றால் வழக்கமான நேரத்துக்கு இன்றைக்கு அந்த ஹீரோ வரவில்லை.

ராம்பிரசாத் ஏன் வரவில்லை... என அவள் மனம் ஊசலாடிக் கொண்டிருந்தது. இரண்டு மூன்று நாட்களாகவே என்ன வேலை செய்து கொண்டிருந்தாலும் அந்த அழகான முகம் வந்து போய்க்கொண்டு இருந்தது.

இதே பகுதியில் இருக்கிறார் என்பது மட்டும் தெரிகிறது. அவரைப் பற்றி வேறொன்றும் தெரியாது. ஆனால் எதை வைத்துக் கொண்டு அவரை நினைக்கிறோம் என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள் எழிலி.

காலையில் டிபன் பாக்ஸில் அன்றைக்குச் செய்திருந்த அரிசி உப்புமாவை எடுத்துப் போட்டுக் கொண்டிருக்கையில், 'ராம்பிரசாத்துக்கு அரிசி உப்புமா பிடிக்குமா, பிடிக்காதா?' என்று அவளுக்குத் தோன்றியது.

குபீரென்று சிரிப்பும் வந்தது. 'அடியேன்'கிறதுக்கு ஆத்துக்காரியைக் காணோம். ஆனால் பிள்ளைக்கு பேரு என்ன வைக்கலாம்னு யோசிச்சானாம் என்ற பழமொழி அவள் காதுகளில மோதியது.

தேவை தான் என்று எண்ணிக் கொண்டு, அரிசி உப்புமாவை எடுத்து டிபன் பாக்ஸில் அடைத்துத் தன்னுடைய தோள் பையில் போட்டுக் கொண்டாள்.

ஏதோ ஒரு பிரைவேட் கம்பெனியில் கிளார்க் மாதிரியான ஒரு வேலையில் இருந்தாள்.

பெரிய கம்பெனி என்பதால் சம்பளமும் நன்றாகவே கொடுத்தார்கள். அதனால் அவளுடைய அப்பாவும் அதைத் தடுக்கவில்லை.

எழிலியின் அப்பா அமிர்தலிங்கம் ஒரு பள்ளிக்கூடத்திலே ஆசிரியராக இருந்தார். அவளுடைய அம்மா வீட்டில் தான் இருந்தார். இரண்டு பேரும் அவளுக்கு ஒரு குறையும் இல்லாமல் தான் வளர்த்தார்கள்.

அளவான சின்ன குடும்பம். அதனால் பிரச்னைகள் ஏதும் இருக்கவில்லை. ஒரே ஒரு விஷயம் தான்... அவள் வீட்டில் அவளுக்குப் பிடிக்காதது. அதிகமாக சொந்தக்காரர்களிடம் நெருங்க மாட்டார்கள்.

அந்த ஒரு விஷயத்தில் அவளது தாயும் தந்தையும் ஒற்றுமையாக இருந்தார்கள். எழிலிக்கு ஏனோ நிறைய சொந்தக்காரர்கள் வந்து போய்க்கொண்டிருந்தால் நன்றாக இருக்கும் என்று தோன்றியது.

அலுவலகத் தோழிகளிடம் தன்னுடைய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வாள். ஒருசில தோழிகள், "அப்படி இருக்கிறதுதாண்டி நல்லது. ரொம்ப நெருங்கிக்காம இருக்கிற வரைக்கும் உறவு நல்லாயிருக்கும். ரொம்ப நெருங்கினோம்னா உறவு கெட்டுப்போயிடும்" என்று சொல்வார்கள்.

இன்னொரு சாரார்ரோ... "போடி... அவசர ஆத்திரம்னா உறவுக் காரங்க தான் கைகொடுப்பாங்க. அவங்களோட என்னைக்கும் நல்லவிதமாக இருந்துக்கோணும்டி..." என்று சொல்வார்கள்.

அவளுக்கு அதில் குழப்பமே மிஞ்சி இருந்தது. அதனால் அந்த மாதிரி விஷயங்களில் அவள் மனதைச் செலுத்திக் கொள்வதில்லை.

சரி. அப்பா அம்மாவினுடைய இயல்பு அப்படித்தான் என்று அவள் தேவைகளைப் பெருக்கிக் கொண்டாள்.

நண்பர்கள் வட்டம் அவளுக்கு அதிகம். அந்த விஷயத்தில் அவளுடைய தந்தை தலையிடுவதுமில்லை... குறை சொல்வதுமில்லை... ஏன், அவள் ஆண்களிடம் பழகுவதில்லை. பெண்களிடம்தான் பழகுகிறாள் என்பதால் ஒருவேளை பாதுகாப்பாக உணர்ந்தார் போலும்!

என்னென்னவோ சிந்தனைகள் ஓடிக்கொண்டிருக்க... அரிசி உப்புமாவை எடுத்துக் கொண்டு வந்தவள், இங்கே பஸ் ஸ்டாண்டில் காத்துக் கொண்டிருந்தாள்.

அப்பொழுது தான் அவள் அதைக் கண்டாள்.

சற்று தூரத்திலே இருந்த ஒரு மரத்தடியிலே பைக்கோடு நின்று கொண்டிருந்தான் ராம்பிரசாத்.

எழிலி சற்றும் தயங்காமல் அவனை நோக்கி நடந்தாள்.

இவள் வருவதைப் பார்த்தவுடனே என்னமோ... அவன் திடீரென குனிந்து டயரில் ஏதோ நேர்ந்துவிட்டாற் போல நடித்தான்.

எழிலிக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் அந்த நாடகத்தையே அவளும் தொடர்ந்து, "என்னாச்சு சார்...?" என்று கேட்டாள்.



"ஒண்ணுமில்லைங்க. ஒரு வாரமாக பைக் ரிப்பேர்ங்க. அதனால தான் பஸ்சில வந்தேன். நேற்று ஈவினிங் தான் எடுத்துட்டு வந்தேன். என்னாச்சுன்னு தெரியலை. மறுபடியும் டயர்ல ஏதோ ப்ராப்ளம் போலிருக்கு..." என்றான்.

"ஓ! நீங்க ரெகுலரா பைக்கில போறவரா... சார். அதனாலதான் முதல்லேயெல்லாம் இங்கே பாத்தது இல்லையோ..." என்றாள்.

"ஆமாம் மேடம். ரெகுலராக பைக்கிலதான் போறது... என்னாச்சு... உங்களுக்கு இன்னும் பஸ் வர்லையா... ?" என்று கேட்டான்.

"எனக்கொண்ணும் ப்ராப்ளம் இல்ல. ஆக்சுவலா நான் அடுத்த பஸ்ல போக வேண்டியவ... இருந்தாலும் வீட்ல இருந்து என்ன பண்றோம். கொஞ்சம் முன்னாடியே போயிடலாம்னு சீக்கிரம் போவேன். பஸ் ஸ்டாண்டில் இருந்து ஆபீஸ்க்கு கொஞ்சம் இறங்கி நடக்கணும். இந்த பஸ்ல போனா கொஞ்சம் ரிலாக்ஸ்டாப் போய்க்கலாம்" என்றாள்.

அவன் வாய் அகலப் புன்னகைத்தான்.

"ஏன் சார் சிரிக்கிறீங்க. ஏதும் தப்பாச் சொல்லிட்டேனா... ?" என்று கேட்டாள்.

"நானும் அப்படி ஐடியாவில தான் பஸ்ல வருவேன். ஆக்சுவலா அடுத்த பஸ்ல போனாக்கூட கரெக்ட்டா இருக்கும். எதுக்கும் இருக்கட்டுமே அப்படீன்னு தான் முதல் பஸ்ல வர்றது" என்றான்.

இருவரும் புன்னகைத்துக் கொண்டார்கள்.

ஒரே மாதிரியான டேஸ்ட் என்பார்களே... அதுபோல இருவருக்கும் இது ஒத்துப்போகிறதோ... என்ற எண்ணம் ஒரே கணத்தில் இருவருக்கும் தோன்றியது. அவள் சட்டென்று சொன்னாள்.

"நீங்க இன்னைக்கு பஸ் ஸ்டாண்டுக்கு வர்லையா... சார். என்னமோ பஸ் ஸ்டாண்டே காலியாக இருந்த மாதிரி இருந்துச்சு" என்றாள்.

அவளுடைய இந்த வெளிப்படையான பேச்சு அவனை ஈர்த்தது போலும். அவனும் "தினமும் பஸ்ல போயிட்டு... இன்னைக்கு பைக்கில போறதுக்கே பிடிக்கலை. அதான் இந்த வழியா வந்தேன். அதுவும் அண்ணைக்கு ஒரு ஆள் வந்தானே... அவனை மாதிரி யாரும் இருக்காங்களா... என்ன... அப்படீன்னு பார்க்கறதுக்காக வந்தேன்" என்றான்.

"தேங்க் யூ சார்" என்றாள்.

இந்தக்கதை அன்றிலிருந்து கிட்டத்தட்ட ஒரு மாதத்துக்கு நடந்தது. காலையில் அவன் பைக்கை எடுத்துக் கொண்டு வந்து அந்த பஸ் ஸ்டாண்டில காத்திருப்பதும்... அவளும் வந்து பஸ்சுக்காகக் காத்திருப்பதும் அவளை பஸ்

ஏற்றி விட்டு அவன் போவதுமான நாடகம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தது.

ஒருநாளும் என் வண்டியில வாங்க என்று அவனும் அழைக்கவில்லை. அவளும் கேட்கவில்லை. இருந்தும் இரண்டு மூன்று நாட்கள் அவனால் வரமுடியாமல் போய்விட்டது. தவித்துப் போனாள் எழிலி.!

வீட்டில் கூட எங்கே திரும்பினாலும் அவனது முகமே தெரிகிறாற் போல இருந்தது.

தோசை ஊற்றி விட்டு திருப்பிப் போடுவதற்கு கூட நினைவு இல்லாமல் நின்று கொண்டிருந்தாள். தெளிவாக அவளுக்குப் புரிந்து விட்டது – இந்த ராம்பிரசாத், தன்னைப் பாதிக்கிறான் என்று!

அடுத்த நாள் அவள் பஸ் ஸ்டாண்டில் நின்று கொண்டு பார்த்துக் கொண்டிருந்தாள். ராம்பிரசாத்தின் வண்டி... சற்று தூரத்தில் இருந்து மெதுவாக ஸ்லோவாகி தன் அருகில் வருவதைப் பார்த்தவுடன்தான் அவளுக்கு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

“என்னாச்சு, பிரசாத். உடம்பு கிடம்பு சரியில்லாம போச்சோ... தவிச்சுப்போயிட்டேன்” என்றாள்.

“அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல எழிலி. ரெண்டு நாள் ஆபீஸ் விஷயமா வெளியூர் போகவேண்டியதாப் போச்சு. சரி, நான் உங்களுக்கு இன்ஃபார்ம் பண்ணலாமான்னு நினைச்சேன். உங்க செல்போன் நம்பரையும் வாங்கிக்கலை... வீட்டுக்கெல்லாம் கூப்பிட்டா ஏதோ நினைச்சுக்குவாங்களோன்னு தான் நான் கூப்பிடலை...” என்றான்.

“இனிமே அப்படி பண்ணாதீங்க. என் செல்போன் நம்பர் நோட் பண்ணிக்குங்க. கண்டிப்பா கூப்பிட்டுச் சொல்லுங்க” என்றாள்.

அவள் சொன்னவிதத்திலேயே ஒரு உரிமை தெரிந்தது. அவன், அவளை ஆழப் பார்த்தான்.

அப்போது தான் எழிலி, பட்டென்று போட்டு உடைத்தாள்.

“பிரசாத், நாம என்னமோ பேசி பழக ஆரம்பிச்சு ஒரு மாதம் தான் ஆச்சு. நாம நண்பர்களா... இல்லை அதுக்கு மேலேயா...?” என்று கேட்டாள்.

“என்ன சந்தேகம். நண்பர்கள் தான்” என்றான் பிரசாத் நழுவலாக.

“இல்லைங்க பிரசாத். நாம ரெண்டு பேரும் அதுக்கு மேல... அப்படீன்னு தோணுது” என்றாள் எழிலி.

ராம்பிரசாத் ஒன்றும் சொல்லவில்லை.

“நீங்க ஒத்துக்கலையா... ?” என்று கேட்டாள் ஏமாற்றத்துடன்.



அவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

“தெரியலை எழிலி. ஆனால் சட்டென்று முடிவெடுக்க இந்த டைம் போதாதுன்னு நான் நினைக்கிறேன்... இன்னும் கொஞ்ச நாள் பார்க்கலாம். அப்புறம் முடிவெடுக்கலாம்” என்றான்.

எழிலி அவனைக் கோபமாக உறுத்துப் பார்த்தாள்.

“நீங்க என்னவோ முடிவு எடுங்க. ஆனால் நான் துணிவா முடிவெடுத்துட்டேன். வாழ்ந்தால் உங்களோட தான்” என்றாள்.

ராம்பிரசாத் இந்த நேரடித் தாக்குதலை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போய் நின்றான்.

“இல்லை... எழிலி... அவசரப்படாதீங்க. உங்களுக்கு என் ஃபேமிலி... என் பேக்ரவுண்ட் பற்றி எதுவுமே தெரியாது” என்று அவன் சொல்ல ஆரம்பித்தான்...

“எதுவும் தெரியவேண்டாம். ஆனால் இந்த ஒரு மாசக்காலம் உங்க பேச்சுல... பழகினதுல உங்ககிட்ட ஒரு நேர்மை இருக்கு. நீங்க என் கண்ணைப் பார்த்துப் பேசறீங்க. மத்தவங்கள மாதிரி மேல இருந்து கீழ வரைக்கும் அளவெடுக்கறதெல்லாம் இல்ல... இதெல்லாம் போதும், ஒருத்தரைப் பத்தி முடிவெடுக்கறதுக்கு. இன்னொண்ணு தெரியுமா உங்களுக்கு... ?பெண்களுக்குன்னு ஒரு உள்ளுணர்வு இருக்கு. அந்த உள்ளுணர்வு சொல்லுது... நீங்க நல்லவர்ன்னு...” என்றாள்.

“அம்மணி. அப்படியெல்லாம் முடிவு பண்ணாதீங்க. கொஞ்ச நாள் பொறுங்க. நான் இன்னும் எந்த முடிவுக்கும் வரலை” என்றான் ராம்பிரசாத்.

“தேட்ஸ் யுவர் பாயிண்ட்... யுவர் ஹெட்எக். நான் என் முடிவைச் சொல்லிட்டேன். இன்னொண்ணு தெரிஞ்சுக்கோங்க. நீங்க வேண்டாம்னு சொன்னாலும் நான் என்னோட மனசை மாத்திக்க மாட்டேன். தட்ஸ் மை ரைட். என்னோட மனசுக்குள்ள எண்ணங்களை வச்சுக்கிறதையோ... பாதுகாக்கறதையோ உங்களாலும் தடுக்க முடியாது” என்றாள் எழிலி.

உண்மையாகவே இப்படியொரு வெடிப்பை எதிர்பார்க்காத ராம்பிரசாத், திகைத்துப் போனான்.

ஒரு நிமிட மௌனத்துக்குப் பிறகு சொன்னான்.

“எழிலி. உண்மையிலேயே நான் இப்பொழுது கல்யாணம் பண்ற சூழ்நிலையிலேயே இல்லை. ஆனாலும் எம் மனசு தினமும் உங்களைப் பாக்கணும்னு சொல்லுது. எனக்கே என் மனசு தெரியல. நான் இன்னும் ஒரு தெளிவான முடிவுக்கு வர்ல. கொஞ்சம் டைம் குடுங்க” என்றான்.

“டைம் தானே. வேணுங்கற மட்டும் எடுத்துக்கோங்க. ஆனால் டெய்லி

காலையில அட்டெண்டென்ஸ் குடுத்திடுங்க. இப்போதைக்கு நீங்க ஃபிரண்டாவே வாங்க. ஐ டோண் மைண்ட்'' என்றாள்.

"எப்பா... நெத்தியடி அடிக்கிறே..." என்று அவன் சிரித்து விட்டான்.

"ஓகே. எந்த சூழ்நிலையிலும் என்னால எந்த கம்பெல்ஷனும் இருக்காது. யூ அண்டர்ஸ்டாண்ட்... ?" என்றாள்.

அவளுடைய வெளிப்படையான பேச்சும் அவனுக்கு முடிவெடுப்பதற்கான ஒரு இடைவெளி கொடுக்கின்ற ஒரு மனப்பான்மையும் அவனைக் கவர்ந்தது.

"ம்..." என்று சொல்லிக் கொண்டான்.

"ஓகே. அப்பா... என் மனசுல பெரிய பாரம் இருந்தது. இறக்கி வச்சுட்டேன். இனிமே நாம ப்ரண்ட்ஸ். ஸ்டில் யூ டிசைட் – நீங்க ஒரு தீர்மானத்துக்கு வர்றவரைக்கும் ப்ரண்ட்ஸாகவே இருப்போம், ஓகே" என்றாள்.

உடனே, சூழ்நிலையை மாற்றுவதற்காகவோ என்னமோ... ராம்பிரசாத், "ப்ரண்ட்ஸ்ன்னா அட்லீஸ்ட் ஒரு கடி ஜோக்காவது சொல்லவேண்டாமா?" என்றான்.

அவளும் ஏதோ சொல்ல... அவனும் அதற்கு பதிலாக ஏதோ சொல்ல... கிட்டத்தட்ட இரண்டு மூன்று நிமிடங்களுக்கு கலகலப்பாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

"என்ன ஆச்சு... ? பஸ்சைக் காணோம்" என்றாள் எழிலி.

"தெரியலை. வந்துடும்" என்று அவன் சொல்லிக் கொண்டி ருக்கையிலே எழிலி, மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

சற்று தூரத்தில் அமிர்தலிங்கம் நடந்து வந்து கொண்டிருந்தார்.

அமிர்தலிங்கம் அவளை நேராகப் பார்த்தார். அவளும் அப்பாவைப் பார்த்தாள். ஆனால் சரேலென்று எதிர்திசைக்கு போன அப்பா... அவளைக் கண்டுகொள்ளாதவர் போல எதிர் திசையில் நடந்து போனார்.

எழிலிக்கு கொஞ்சம் கலக்கமாகத்தான் இருந்தது.

அவள் முக மாற்றத்தைப் பார்த்த ராம்பிரசாத், "என்ன எழிலி..." என்று கேட்டான்.

அவள் பார்வை அப்பாவைத் தொடர... "ஒன்றுமில்லை" என்று சொல்லி விட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

அன்றைக்கெல்லாம் அப்பாவின் இறுக்கமான முகமே அவளை அலுவலகத்தில் வேலை செய்யவிடாமல் பாடாய்படுத்தியது.





## 3

எப்பொழுது குண்டு வெடிக்கப் போகிறது என்பது அவளுக்குத் தெரியவில்லை.

வந்ததில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கிறாள் எழிலி.

வீட்டில் ஒரு அசாதாரணமான அமைதி நிலவியது.

அப்பா, மாலை நேரத்தில் அமர்ந்து பேப்பர் திருத்துவது போலவே மாணவர்களின் விடைத்தாள் களைத் திருத்திக் கொண்டிருந்தார்.

உள்ளே நுழையும்பொழுது, "வாம்மா..." என்று சொல்லிவிட்டு, அவர் நெருப்புக்கோழிபோல அந்தத் தாள்களுக்குள் முகத்தைப் புதைத்துக் கொள்வார்.

இன்றைக்கு அது நடக்கவில்லை.

அவள் உள்ளே நுழைந்த உடனே நிமிர்ந்து பார்த்து விட்டு, பார்க்காதவர் போல அமர்ந்து விடைத்தாளைத் திருத்திக் கொண்டிருந்தார்.

எழிலிக்கு அதற்கு மேல் பயமாக இருந்தது. எங்கே ஏதாவது கேட்டு விடுவாரோ என்ற பயத்துடன் ஓடிப் போய் தன் அறையில் நுழைந்து கொண்டாள். முகம் கழுவிவிட்டு, உடையை மாற்றிக் கொண்டு சமையல் அறைக்குப் போனாள்.

எப்பொழுதுமே, "என்னடி வந்தாச்சா... ?" என்று வெளியே வருகிற அம்மா அன்றைக்கு வெளியே வரவில்லை.

இவள் தான் சமையல் அறைக்குப் போனாள்.

"என்னம்மா, என்ன டிபன்?" என்றாள், வருவித்துக் கொண்ட உற்சாகத்தோடு.

"டிபன் தானே... பண்ணி வச்சுருக்கேன். அடை... அடை தோசை சுட்டுருக்கேன்" என்றார்.

"இப்பவாம்மா... வேற ஏதாவது லைட்டா சாப்பிடறேனே..." என்றாள்.

"இப்பவே ரெண்டையும் சாப்பிட்டுக்கோ. நைட்டுக்கு சாப்பிட்டா ஹெவியாயிடும்" என்றார் அம்மா.

அந்தக் குரலில் வழக்கமில்லாத வழக்கமாக ஒரு வித்தியாசம் இருந்தது.

"அப்படீன்னா காலையில சாப்பிட்டுக்கறேன். ஃபிரிட்ஜ்ல வச்சுருங்க. இப்ப வேற ஏதாவது தாங்க" என்றாள்.

"வறுத்த பொரி இருக்குது. சாப்பிடறியா... ?" என்றார். எப்பொழுதுமே அவர்கள் வீட்டில் ஏதாவது ஸ்வீட் இருக்கும். "ஸ்வீட் தரட்டுமா? என்றார்.

"சரி, கொடு" என்று வாங்கிக் கொண்டாள்.

வாங்கி அந்த காரப்பொரியை அள்ளி வாயில் போட்டுக் கொண்டாள். சற்று நேரம் கழித்து தேநீரைக் குடித்தாள். வழக்கமாக அந்த ஹால் சோஃபாவிலே அமர்ந்து கொண்டு சாவகாசமாக ரசித்துக் குடிப்பாள். ஆனால் இன்றைக்கு தன்னுடைய அறைக்கு எடுத்துக் கொண்டு போய் விட்டாள்.

அம்மாவின் முகத்தையும் நிமிர்ந்து பார்க்க அவளுக்குப் பயமாக இருந்தது.

சற்று கழித்து அம்மாவே அவளது அறை வாயிலுக்கு வந்தார்.

"ஏம்மா... ஏதாவது கடைக்குப் போகணுமா? என்னவாவது வாங்கித் தரணுமா?" என்று கேட்டாள்.

அவளுக்கென்று ஒரு ஸ்கூட்டி இருந்தது. அலுவலகம் வெகு தொலைவில் இருந்ததால் அவள் ஸ்கூட்டியை எடுத்துச் செல்வதில்லை. வீடுகளிலும் வேறு குழந்தைகள் யாருமில்லாததால் கடைகண்ணிக்குச் சென்று வாங்கி வருவதெல்லாம் அவள் தான்.

"ஆமாடி. லிஸ்ட் போட்டு வைக்கிறேன். போயிட்டு வர்றியா...?" என்றாள்.

எழிலிக்கு விட்டால் போதும் என்றிருந்தது.

"சரிம்மா... நான் போயிட்டு வர்றேன். லிஸ்ட்டைக் குடு..." பையைக் குடு... என்று அவசரப்படுத்தினாள்.

அதைக் காதில் கேட்டவர் போல எழுந்து வந்தார் அமிர்தலிங்கம்.

"இரு கோமளா. கொஞ்ச நேரம் அவள் இருக்கட்டும். அவகிட்டப் பேசணும்" என்றார்.

'ஆஹா... வந்து விட்டது வம்பு' என்று எண்ணிக்கொண்டாள்.

எழிலி அப்பாவைத் திரும்பிப் பார்த்தாள்.

அவள் தன்னை நோட்டமிடுவதைக் கண்ட அமிர்தலிங்கம் முகத்தில் எந்த உணர்வையும் காட்டிக் கொள்ளாமல், "உட்காரும்மா... உங்கிட்டப் பேசணும்" என்றார்.

அவள் நெளிந்து கொண்டே எதிரில் இருந்த சோஃபாவில் அமர்ந்தாள்.

"சரி பேசுங்க. எனக்கு அடுப்பில கொஞ்சம் வேலையிருக்கு..." என்று நகர்ந்தார் மனைவி கோமளா.

"கோமளா இங்கே வா... நீயும் உட்காரு" எனறார்.



"என்னங்க விஷயம்...?" என்று கேட்டுக்கொண்டே கோமளாவும் அமர்ந்தார்.

அவர் அப்படி கேட்பதைப் பார்த்தவுடனே... எழிலிக்கு அப்பா எந்த விஷயத்தையும் அம்மாவிடம் சொல்லவில்லை என்பது புரிந்தது.

"என்னப்பா...?" என்று கேட்டாள்.

"அந்தப் பையன் யாரும்மா...?" என்று கேட்டார் அமிர்தலிங்கம்.

கோமளா திடுக்கிட்டுப் போனார்.

இது மாதிரி கேள்வி வரும் என்று தெரிந்ததாலோ என்னவோ எழிலி தயாராகவே இருந்தாள்.

"ஒரு ஃப்ரெண்டுப்பா..." என்றாள்.

"ஃப்ரெண்டுன்னா... ?" என்றார் அமிர்தலிங்கம்.

"என்னப்பா... இப்படி கேட்கிறீங்க... ஃப்ரெண்டுன்னா... ஃப்ரெண்டு தான்" என்றாள்.

"இங்க பாரும்மா, நான் இன்னைக்கு மட்டும் பாக்கலை... கிட்டத்தட்ட ஒரு மாசமா அப்பப்ப... கண்ணுல பட்டுட்டுத் தான் இருக்கே... நான் எதுவும் கேட்க வேண்டான்னு தான் உங்கிட்ட எதுவும் கேட்கல..." என்றார்.

"தேங்க்ஸ்...ப்பா..." என்றாள் எழிலி.

"விளையாடாதேம்மா... ஒரு மாசமா பஸ் ஸ்டாண்டிலே ஒரு பையன்கிட்ட நின்னு பேசிக்கிட்டு இருந்தீன்னா... அது யாருன்னு எனக்குச் சொல்லி யிருக்கணும்ல்லே?... இல்லை வீட்டுக்காவது கூட்டிட்டு வந்து அறிமுகப் படுத்தி இருக்கணும்" என்று கேட்டார்.

"அப்பா, எனக்கே இந்த ரெண்டு மாசமாத்தான் பழக்கம். ஆனா... பழகின விதத்திலே நல்லவர்னு தெரியுதுப்பா... பேரு ராம்பிரசாத். இங்கதான் அடுத்த தெருவில குடியிருக்காங்க. ஒரே ஒரு சிஸ்டர் போலிருக்கு. இவ்வளவுதான் அவங்க ஃபேமிலி பேக்ரவுண்ட பத்தித் தெரியும்" என்றாள்.

"ரொம்ப சந்தோஷம்மா... ஏதோ அடுத்த தெருவில இருக்காங் கங்கறதையாவது இன்பார்ம் பண்றியே... இப்பவாவது..." என்றார்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

தலையைக் குனிந்து கொண்டாள்.

"எழிலி, இப்போவாவது உண்மையைச் சொல்லலாமா?..." என்றார் அப்பா.

தன்னுடைய பதில்களை வைத்தும் முகபாவத்தை வைத்தும் அப்பா புரிந்து

கொண்டு விட்டார் என்று அவளுக்குப் புரிந்தது.

அவள் நிமிர்ந்து அப்பாவைப் பார்த்தாள்.

"ஏம்மா... ஃப்ரெண்டுங்கறதுக்கு...மேல ஏதாவது எண்ணம் இருக்கா...?" என்று கேட்டார் நேரடியாக.

அவள் நிமிர்ந்து அப்பாவைப் பார்த்தாள். பிறகு தலையைக் குனிந்து கொண்டாள்.

பிறகு திரும்பி அம்மாவைப் பார்த்தாள்.

அவர்கள் இரண்டு பேரும் ஏதோ திகில் படத்திலே சஸ்பென்ஸ் வெளியாகிறபொழுது மூச்சைப் பிடித்துக் கொண்டு அமர்ந்திருப்பார்களே அதுபோல அமர்ந்திருந்தார்கள்.

"எனக்கு அவரைப் பிடிச்சுருக்குப்பா..." என்றாள் எழிலி.

"என்னத்தக் கண்டு பிடிச்சுருக்கு... அவங்க என்ன ஆட்கள்னு தெரியுமா? அவரோட பேக்ரவுண்ட் என்னன்னு தெரியுமா?" என்றெல்லாம் சரமாரியாகக் கேள்வி கேட்டார் கோமளா.

"கோமளா...! நீ பேசாம இரு" என்றார் அப்பா.

"அதெல்லாம் எனக்குத் தெரியாதப்பா... ஆனால் நல்ல ஜாப்ல இருக்காரு. நல்ல மனிதனாக இருக்காரு. நானும் எத்தனையோ பேரைப் பார்த்திருக்கேன். பழகி இருக்கேன். எனக்கு இவரைப் பிடிச்சுருக்கு" என்றாள்.

"ஏம்மா! அங்கே அவருகிட்ட சொல்லி – அவர் சம்மதம் வாங்கிட்டியா... அவரு ஓகே சொல்லியாச்சா?" என்று கேட்டார் அப்பா.

"பழகினவரைக்கும் அவருக்கும் ஆர்வம்தான்னு எனக்குத் தெரியுதப்பா... ஆனா அவர் இன்னும் வாய்விட்டுச் சொல்லலை" என்றாள்.

"நீ வாய்விட்டுச் சொல்லிட்டியா?" என்றார் அமிர்தலிங்கம்.

"இல்லைப்பா..." என்றாள்.

"இங்க பாரும்மா. வாழ்க்கைன்னா விளையாட்டில்லை. அது ஒரு நீண்ட தூரப் பயணம். அதுல ஏற்ற இறக்கங்கள் வரும். இந்த மாதிரி சலனங்கள் வந்து போகும். தெளிவா யோசித்து ஒரு முடிவு எடுத்துக்கோணும்" என்றார்.

அப்பா ஏதோ வியாபாரத்தனமாக பேசுவதாகத் தோன்றியது.

"அப்பா! வாழ்க்கைன்னா... நீண்ட தூர பயணம்தாம்ப்பா... ஆனால் அதே அளவுக்கு அதுல உணர்ச்சிகளும் இருக்கணும்ப்பா... உணர்வுகளும் கலந்ததாகத்தான் ஒரு வாழ்க்கை இருக்கணும்" என்றாள் மகள்.



அமிர்தலிங்கம் புன்னகைத்தார்.

"நல்லாப் பேசறேடா... சில விஷயங்கள் இந்த வயசுல கவர்ச்சி கரமாத் தோணும். சிலது எல்லாம் இல்லைன்னா... வாழ்க்கையே இல்லைங்கற மாதிரி தோணும். ஆனால் பின்னால யோசிச்சுப் பார்க்கும்பொழுது இதுக்காகவா இத்தனை பாடுபட்டோம் என்று தோணக்கூடிய ஒரு நிலைமை உனக்கு வந்துடக்கூடாது. ஜாக்கிரதை" என்றார்.

"அப்பா, ப்ளீஸ்ப்பா... புரிஞ்சுக்கங்க அப்பா. நான் நல்லா அனலைஸ் பண்ணிட்டுத்தான் பேசறேன்" என்றாள்.

"என்னம்மா அனலைஸ் பண்ணியிருக்கே?" என்று கேட்டார் அமிர்தலிங்கம்.

"எனக்கு வாழ்க்கைன்னு ஒண்ணு இருந்தா... அது அவரோட தான் அப்படீன்னு முடிவு பண்ணி வச்சுருக்கேன்ப்பா..." என்றாள்.

அமிர்தலிங்கம் இப்படியொரு பதிலை எதிர்பார்க்கவில்லை. திகைத்துப் போனார்.

"என்னம்மா விளையாடறியா... ரெண்டே மாசம் ஒரு பையனப் பார்த்துப்பழகிட்டு அவங்கூடத்தான் வாழ்க்கையை நடத்துவேன் அப்படீன்னா... என்ன அர்த்தம்?" என்று கேட்டார்.

"அர்த்தமெல்லாம் எனக்குத் தெரியாதப்பா... என் மனசு அப்படித்தான் சொல்லுது. நான் தீர்மானமாக இருக்கிறேன்" என்றாள்.

அமிர்தலிங்கமும் கோமளாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"இதெல்லாம் ஒத்துவராதும்மா... இன்னைக்கோட அந்த ஐடியாவை மாத்திரு. அப்படித்தான் பிடிவாதம் பிடிப்பேன்னா... நீ வேலைக்கே போக வேண்டாம்" என்றார் அமிர்தலிங்கம்.

அவள் அடிபட்டாற்போல அப்பாவைப் பார்த்தாள்.

"ஏம்ப்பா... உணர்வுகள், உணர்வுகள்னு நான் திருப்பித்திருப்பி சொல்றேனேப்பா... தயவுசெய்து அதை நீங்க புரிஞ்சுக்கோங்க. எம்மனசுல பட்டிருச்சு, அவரோட தான் வாழ்க்கை அப்படீன்னு சொன்னதுக்கு அப்புறமும் நீங்க இந்த மாதிரியெல்லாம் சொல்றீங்களே... நீங்க எல்லாம் அந்தக்காலத்து மனிதர்களப்பா... அந்தக் காலத்தில் இருந்து உங்களுக்கு என்னப்பா தெரியும். சம்பாதிக்கணும், சாப்பிடணும். குழந்தை பெத்தாச்சு. வளர்த்தணும்... அதுக்குப் பின்னால இருக்கிற நுணுக்கமான உணர்வுகள் உங்களுக்குத் தெரியுமாப்பா...? காதலோட நளினம் உங்களுக்குத் தெரியமாப்பா...?

எப்பொழுதும் ஸ்டிப்பான ஒரு லைஃப்ல தானே இருக்கீங்க. உங்களைச் சுற்றி எங்காவது காதலைப் பார்த்திருக்கீங்களாப்பா... உறவுக்காரங்ககூட வேண்டாம்னு ஒதுங்கித் தானேப்பா இருக்கீங்க... உங்களுக்கு இது எங்கேப்பா புரியும்'' என்று படபடவென்று தன்னை அறியாமல் பேசி விட்டாள்.

கோமளாவுக்குக் கோபம் பொங்கிக் கொண்டு வந்தது.

"நிறுத்துடி. யாரைப் பார்த்து என்ன பேசிக்கிட்டு இருக்கே...'' என்றார், கோபமாக.

"அம்மா, இது எல்லா சினிமாவிலேயும் பேசற டயலாக். இதையே எங்கிட்டேயும் சொல்லாதீங்க'' என்றாள் எழிலியும் கோபமாக.

"சொல்லிருங்க... இவளுக்கு எல்லாத்தையும் சொல்லிருங்க'' என்றார் கோமளா.

"கோமளா, கோபப்படாதே. கொஞ்சம் பொறுமையாக இரு'' என்றார் அமிர்தலிங்கம்.

"இல்லைங்க. இதுக்கு மேலேயும் மறைச்சு வச்சா அர்த்தமே இல்லை. எல்லாத்தையும் சொல்லிருங்க இவளுக்கு... அப்பத்தான் புரியும்'' என்றார் மறுபடியும் கோமளா.

"என்னத்தப்பா... அம்மா சொல்லச் சொல்றாங்க? சொல்லுங்க'' என்றாள் அவளும் ஆக்ரோஷமாக.

அமிர்தலிங்கம் மகளை அமைதியாகப் பார்த்தார்.

"ஏம்மா, நீ என்ன கேட்டே...? உணர்வுகள்னா என்னன்னு உங்களுக்குப் புரியுமா, காதல்னா என்னன்னு உங்களுக்குப் புரியுமா, உறவுக்காரங்ககூட வேண்டாம்ன்னு சொல்றீங்களே... வர்றதில்லையே... அப்படியெல்லாம் கேட்டியே... இதுக்கெல்லாம் என்ன காரணம் தெரியுமா?'' என்றார்.

அழுத்தமாக அவளை ஒரு நிமிடம் பார்த்தார்.

எழிலிக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அப்பாவை வெறித்துப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள்.

"எங்களுக்குத் தெரிஞ்ச காதலைவிட உனக்குக் காதல் தெரிஞ்சுடுச்சு... ஏம்மா...?'' என்றார் அப்பா.

அவளுக்கு லேசாக ஏதோ புரிகிறாற் போல இருந்தது. அதற்கு அடுத்ததாக அந்த வார்த்தையை அப்பா சொன்னவுடனேயே அவளுக்கு முழுமையாகப் புரிந்து விட்டது.

"எங்களுக்குத்தாம்மா... எல்லா கஷ்டங்களும் தெரியும். எங்களால்தான்



எல்லாத்தையும் விபரமாகச் சொல்ல முடியும். உனக்குப் புரிய வைக்க முடியும்'' என்ற அப்பா, வேதனை கலந்த குரலிலே அடுத்த வாக்கியத்தைச் சொன்னார்.

அதைக் கேட்டவுடனே எழிலி, அப்படியே திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள்.



கண் முன்னாலே ஒரு ஃபைல் உட்கார்ந்து கொண்டிருந்தது.

எழிலியின் மனமோ வேறு எங்கோ இருந்தது. அப்பாவிடம் கொஞ்சம் கடுமையாகத்தான் கேள்விகள் கேட்டு விட்டோம் என்பது அவளுக்கு புரிந்தது. ஆனால் அதற்கு அப்பா சொன்ன பதில் உலகத்தையே புரட்டிப்போட்டாற்போல இருந்தது.

உறவுக்காரங்ககிட்டயே ஒட்ட மாட்டேங்கறீங்க, காதல்... உணர்வுன்னா என்னன்னு தெரியுமா என்றெல்லாம் தான் கேட்டிருக்க வேண்டாமோ என்று இப்பொழுது வருந்தினாள்.

விதியின் விளையாட்டோ என்னமோ அந்த மாதிரி கேள்விகள் அவளே அறியாமல் சரமாரியாகக் கிளம்பி தந்தையை தாக்கிற்று. அந்தக் கேள்விகளை உள்வாங்கிக் கொண்ட அப்பா... சற்று நேரம் மௌனமாக இருந்தார்.

அதற்குப் பிறகு அந்தக் கேள்விகளுக்கு ஒரு விடை சொன்னார்.

"ஏம்மா... என்ன கேள்வி கேட்டே... காதல்னா என்னன்னு தெரியுமா... அப்படீன்னு கேட்டே... இன்னொண்ணு என்ன கேட்டே...? உறவுக்காரங்ககிட்ட ஒட்டமாட்டேங்கறீங்க... அப்படீன்னு கேட்டே. இத்தனை நாள் சொல்லாத ஒரு விஷயத்தை இன்னைக்கு உனக்குச் சொல்றேம்மா... காதலை என்னையும் உன் அம்மாவையும் காட்டிலும் வேறு யாரும் அவ்வளவு உணர்ந்திருக்க முடியுமான்னு தெரியலை... ஏன்னா... மூணு வருஷம் போராடி காதலிச்சுக் கல்யாணம் பண்ணினவங்கம்மா நாங்க...'' என்றார்.

எழிலி சுத்தமாக இதை எதிர்பார்க்கவில்லை.

திகைத்துப் போனாள்.

"அப்பா...! என்ன சொல்றீங்க... ?'' என்று கேட்டாள்.

"ஆமாம்மா... காதலிச்சுக் கல்யாணம் பண்ணினவங்கதான் நாங்க. இன்னொண்ணு தெரியுமா... அப்படி காதலிச்சு கல்யாணம் பண்ணின காரணத்தால்தான் உறவுக்காரங்க... எங்ககிட்ட ஒட்டலை... சொல்லப்போனா

ஆரம்பத்துல எங்ககிட்ட அவங்க ஒட்டலை... அதுக்கப்பறம் நாங்க அளவா வச்சுகிட்டோம்'' என்றார்.

எழிலி மேலும் திகைத்துப் போனாள்.

"காதலுக்கு எதிரி இல்லையம்மா நான்... ஆனா காதலைச் சந்திக்கணும்னா... காதல் கல்யாணத்துக்குப் பிறகு வரும் பிரச்னைகளைச் சந்திக்கணும்னா... அதுக்குப் பெரிய அளவில் நெஞ்சுரம் வேணும். அது என்னென்ன மாதிரி பிரச்னைகளைக் கொண்டு வரும்னு உனக்குத் தெரியாது. எங்களுக்குத் தெரியும்'' என்றார்.

அவள் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

ஒரு நிமிடம் கழித்து ஏதோ சொல்ல வாயெடுக்கையில், அவரே சொன்னார்.

"உடனே நீ கேட்பே... காதல்னா என்னன்னு உங்களுக்குத் தெரியும். அதனால் இன்ஃபேக்ட் நீங்க எங்களுக்கு ஆதரவு கொடுக்கணும்... அப்படீன்னு சொல்லுவே...'' என்றார்.

அதுதான் அவளும் கேட்க நினைத்தது. அதனால் அவள் கப்பென்று வாயை மூடிக் கொண்டாள்.

அமிர்தலிங்கம் சொன்னார். "காதல் என்பது அருமையான உணர்வு தானம்மா... இல்லைன்னு சொல்லலை... ஆனால் நடைமுறை வாழ்க்கைக்கும் காதல் வாழ்க்கைக்கும் நிறைய வித்தியாசங்கள் இருக்கம்மா... காதலிக்கிற காலத்துல கற்பனைகள்தான் இருக்கு. ஆனா நிதர்சனத்துல நிறைய வலி மிகுந்த அனுபவங்கள் இருக்கும்மா... அதையெல்லாம் சந்திக்கிற அளவுக்கு உனக்கு காதல் இருக்கான்னு பார்த்துக்கோ. டைம் எடுத்துக்க. யோசித்து முடிவு பண்ணிக்கோ...'' என்றார்.

அவள் மௌனமாக அமர்ந்திருந்தாள்.

"இத்தனைக்கும் உங்கம்மாவோட ஜாதி... என்னோட ஜாதியில இருந்து வேறொரு உட்பிரிவு தான். ஆனா இருபத்தைந்து வருஷத்துக்கு முன்னாடி ஜாதிப் பித்து மிகுந்ததொரு குடும்ப அமைப்பில் இருந்து நான் வெளியில வந்து இந்த கல்யாணம் செஞ்சதுக்கப்பறம் ஏதோ கொலைக்குற்றம் செஞ்சவன் மாதிரி நடத்தினாங்க. அதுக்கப்பறம் மெதுமெதுவா காலம் மாறிச்சு... பத்து வருஷம் கழிச்சு அவங்க ஒட்டறதுக்குத் தயாராக இருந்தாங்க. ஆனா அந்தக் காலகட்டத்துல பேசின பேச்சுக்கள்... ஏதோ தீண்டத்தகாதவர்கள் மாதிரி எங்களை நடத்துனது... பின்னால சாபங்களை வீசிக்கிட்டது... பேசிக்கிட்டது... இதெல்லாம் எங்களை ரொம்ப காயப்படுத்தி இருந்தது.

அதனால்தான் நாங்க வெட்டிக்கவும் இல்லை. ஒட்டிக்கவும் இல்லை. காலம்



மாறினாலும் அந்த வடு இருக்கத்தானம்மா செய்யும்...'' என்றார் அப்பா.

அந்த வாக்கியத்தை அவள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டியதிருந்தது.

இப்பொழுது அவளுக்குப் புரிந்தது. கல்யாணங்களுக்கெல்லாம் உறவுக்காரங்க வந்து அழைப்பார்கள். அப்பா, கல்யாணங்களுக்குப் போகும்பொழுது கண்டிப்பாக அம்மாவை அழைத்துக் கொண்டு போவார். அவ்வளவு ஏன், எந்த உறவுக்காரர்கள் வந்து எந்த விசேஷத்துக்குக் கூப்பிட்டாலும் அப்பா, அம்மாவை விட்டுவிட்டுச் சென்றதே இல்லை. சரியாக அந்த நேரத்துக்குப் போவார்கள். பரிசுகளைக் கொடுப்பார்கள். ஏதாவது பெயருக்கு சாப்பிட்டுவிட்டு வந்து விடுவார்கள். வீட்டுக்கு வந்துதான் வயிறார சாப்பிடுவார்கள்.

அப்பொழுதெல்லம் இவர்கள் ரொம்ப பந்தா பண்ணுவதாக எண்ணிக் கொள்வாள் எழிலி. "இதுக்கு எதுக்குப்பா கல்யாணத்துக்குப் போறது...'' என்று கேலி கூட செய்வாள்.

"என்னம்மா பண்றது... வந்து கூப்பிட்டுட்டாங்களே...'' என்று அவர் பதில் சொல்லிச் சமாளித்து விடுவார்.

அந்த மாதிரி நடத்தைகளுக்குப் பின்னே ஆழமான வடு இருந்திருக்கிறது என்பது இப்பொழுது அவளுக்குப் புரிந்தது.

அப்பா இன்னொன்றும் சொன்னார்.

"காதல் சுகமானது... அதுக்கான போராட்டங்கள்... எல்லாம் சுகமானது தான். வெற்றியும் கிடைத்து விட்டால் ரொம்பரொம்ப சுகமானதாகத் தான் இருக்கும். ஆனா... நாம ஒரு தனிப்பிரகிருதி அல்ல. மனிதன் ஆப்ட்ரால் ஒரு சோசியல் அனிமல். மனிதன் சமூகத்தில் வாழக்கூடிய ஒரு விலங்குதான். தனிமைப்படுத்தும்பொழுது எப்படி காயம் இருக்கும்? அப்படீங்கறத நாங்க அனுபவிச்சுப் பார்த்திருக்கிறோம். ஆனா... இப்ப நிலைமை மாறியிருக்கு... இருந்தாலும் ஒரு பாதுகாப்பற்ற தன்மை இந்த காதல்ல இருக்கு. இதை மட்டும்தான் நான் சொல்லுவேன். அதுக்குமேல யோசித்து முடிவு பண்ணிக்க வேண்டியது உன் பொறுப்பு. உன்னுடைய திருமணம் காதல் திருமணமாக இருந்தால் நானும் அம்மாவும் எந்தப் பொறுப்பும் எடுத்துக்க மாட்டோம்'' என்றார்.

'என்னப்பா இப்படிச் சொல்றீங்க...' என்பது போல அவள் பரிதாபமாகப் பார்த்தாள்.

"என்னம்மா செய்யச் சொல்றே... ஒரு வாழ்க்கைக் காலம் எனக்குப் போராடி அலுத்துப் போச்சு. நீயாவது நிம்மதியா இருக்கணும்னு நான் நினைக்கிறேன்.

ஆனா... நீயும் ரிஸ்க் எடுக்கறே... அப்படீன்னா... அதோட பொறுப்பு உன்னோடதுதான்ம்மா... ஒருவேளை உங்க அம்மா பொறுப்பெடுத்துக்கு வாளோ என்னமோ... கேளு" என்று தன் மனைவியைப் பார்த்தார்.

கோமளா, "உங்களாலேயே முடியலைன்னா... நான் என்னங்க பண்ண முடியும்? என்னால எவ்வளவு சப்போர்ட் கொடுக்க முடியுமோ... கொடுப்பேன்... அவ்வளவு தான்" என்றார்.

"ஏண்டி...! நானும் கேட்டுக்கிட்டே இருக்கேன். எந்த உலகத்துல இருக்கே... ஓ! அவரையா... பைக் மேனையா...? நினைச்சுகிட்டிருக்கியா...?" என்ற குரல் கேட்டு திரும்பினாள்.

அலுவலக சக ஊழியரும் தோழியுமான ஷியாமளா அவளை உலுக்கிக் கொண்டிருந்தாள்.

"என்ன..." என்று தடுமாறினாள்.

"ம்... ஈர வெங்காயம்... ஏய்! மேனேஜரு அந்த வவுச்சரைக் கேட்கிறாரு... நேற்று கொடுத்தார்ல அந்த வவுச்சரு... அதை எடுத்துக் கொடு" என்றாள் ஷியாமளா.

பரபரப்பாக எழுந்து தேடி எடுத்துக் கொடுத்தாள். "இன்னும் ஃபைல் பண்ணலையாடி...?" என்று கேட்டாள் ஷியாமளா.

"இல்லையே... டீ... 'அக்கௌண்ட்டண்ட் சொன்னதுக்கப்பறம் ஃபைல் பண்ணினா போதும். இதைத் தனியா வைம்மா...'ன்னு தானே சொன்னாரு. அதான் கவர்ல போட்டு வச்சுருக்கேன்" என்றாள்.

"நல்ல வேலை செஞ்சே... குடு" என்று வாங்கிக் கொண்ட ஷியாமளா, ஐந்து நிமிடத்தில் வந்து அவளது அடுத்த இருக்கையில் அமர்ந்தாள்.

"என்னடி ரொம்ப முத்திப் போச்சா...? ஆபீஸ் ஹவர்ல உட்காந்து ட்ரீம் பண்ணிட்டு இருக்கே" என்று கேட்டாள்.

ஒரு பெருமூச்சு விட்டுவிட்டு எழிலி சொன்னாள்.

"இல்லைடி... இது வேற மாதிரி பிரச்னை" என்றாள்.

"ம்... அப்படியா... அப்படீன்னா சாப்பிடறப்ப பேசலாம்" என்று சுவாரஸ்யமானாள் ஷியாமளா.

"ஆமாடி... காக்கைக்கு கொண்டாட்டம், எருதுக்குத் திண்டாட்டம்... அது மாதிரி என் பிரச்னை உனக்குச் சுவாரஸ்யமாக இருக்குதா?" என்று கோபமானாள் எழிலி.



ஷியாமளா சிரித்தாள்.

"நீ தான்டி செல்வே... நார்மன் வின்சென்ட் பீல் அப்படீன்னு ஒருத்தர் சொல்லியிருக்காரு. 'எந்தப் பிரச்னை வந்தாலும் கவலைப்படாதீங்க. அந்த பிரச்னையை அக்கு வேறா அணி வேறா பிரிச்சு ஒரு டேபிள் மேல போடுங்க. போடும்பொழுதே தீர்வு வந்துடும்' அப்படீன்னு..."

"அதான் சொன்னேன்... ரெண்டா பிரிச்சு மேய்ஞ்சுடு" என்றாள் ஷியாமளா.

எழிலி புன்னகைத்தாள்.

"நீ சொல்றது கரெக்ட் தான்" என்றாள்.

ஷியாமளா அதேபோல சாப்பாட்டு நேரத்தில் நச்சரித்து அவளிடத்தில் இருந்து விபரங்களை உள்வாங்கிக் கொண்டாள்.

அவளுக்குமே கொஞ்சம் ஒரு மாதிரியாகி விட்டது.

"கஷ்டம் தாண்டி எழிலி" என்றாள்.

பிறகு திடீரென்று உணர்ந்தாற்போல, "ஏய்! உண்மையில... பிரச்னையே இன்னும் ஆரம்பிக்கலை...டீ..." என்றாள்.

எழிலி புரியாமல் அவளைப் பார்த்தாள்.

"நீ இன்னும் ராம் பிரசாத்கிட்ட சொல்லவே இல்லை. சொல்லி அவரோட ரியாக்ஷன் என்னன்னு தெரிஞ்சுக்கவே இல்லை" என்றாள் ஷியாமளா.

எழிலி, "இல்லைடி... அது கேட்டுத் தெரிஞ்சுக்க வேண்டிய விவகாரமே இல்லை. எனக்கு, ராம்பிரசாத்தோட பார்வை... சிரிப்பு... அவர் எங்கிட்ட ஒரு உரிமையா... நடந்துக்கற விதம்... இதுல எல்லாமே ஓரளவு புரிஞ்சுக்கலாம்" என்றாள்.

"அதெப்படிடீ அம்மா..." என்று ஷியாமளா கன்னத்தில் கை வைத்தாள்.

எழிலிக்கு போன வாரத்தில் நடந்த ஒரு நிகழ்வு... நினைவுக்கு வந்தது.

எழிலியும் ராம்பிரசாத்தும் அடுத்த பஸ் ஸ்டாண்ட் வரை நடந்தே வந்தார்கள். அவன் பைக்கைத் தள்ளிக் கொண்டு வந்தான்.

அவள் நடந்து வந்தாள்.

எழிலி திடீரென சிரித்தாள்.

"என்ன சிரிப்பு" என்றான் ராம்பிரசாத்

"இல்லை. எங்காவது ரெண்டு பேரு, கிறுக்குத்தனமா பண்ணிகிட்டு இருப்பாங்களா... உட்காந்து போறதை விட்டுட்டு – பைக்கை பக்கத்துல வச்சுகிட்டு நடந்து போயிட்டு இருக்கோமே... அத நினைச்சுச் சிரிச்சேன்"

என்றாள்.

ராம்பிரசாத் குறும்பாக அவளைப் பார்த்தான்.

"ஹலோ... மேடம். உட்காந்துட்டுப் போனா... ரெண்டே நிமிஷத்துல அடுத்த ஸ்டாப்பிங் வந்துடும். இப்படி நடந்து போனா ஒரு பதினைஞ்சு நிமிஷமாவது ஆகும். எது உங்களுக்கு வேணும்?" என்று கேட்டான்.

"எனக்கு என்ன வேணும். உங்களுக்கு எதுவோ... அது" என்றாள் எழிலி.

"எங்களுக்கு இதுதாம்ப்பா... விட்டா உங்க ஆபீஸ் வரைக்கும் கூட நடந்து வருவோம்" என்றான் ராம்பிரசாத். "எதுக்காம்... ?" என்றாள்.

"எதுக்கு... எல்லாம் இந்த தேவதை கூட, அப்படியே மர நிழல்ல... நடந்துட்டுப் போற சுகத்துக்காகத்தான்" என்றான் ராம்பிரசாத்.

"ஹலோ... ஹலோ... அஞ்சு கிலோ மீட்டர் இருக்கு, இங்கிருந்து – தெரியுமா?" என்றாள் அவள்.

"அஞ்சு கிலோ மீட்டரெல்லாம் ஒரு தூரமா... ? பாரதியார் சொல்லிப் படிச்சதுல்லை... பாரதியார் பாட்டு" ஏன்றான்.

"இதுக்கு பாரதியாரை எதுக்கு வம்புக்கு இழுக்கிறீங்க" என்றாள் எழிலி.

"நான் வம்புக்கு இழுக்கலைம்மா... அவர் தான் சொல்லி யிருக்காரு. 'காதல் பெண்ணின் கடைக்கண் பார்வையில் காற்றிலேறி விண்ணையும் சாடுவோம்' அப்படீன்னு" என்றான்.

"ஹலோ... ஹலோ... அது காதல் பெண்களுக்கு... நம்ம ப்ரண்ட்ஸ். அவ்ளோ தான்" என்றாள் எழிலி.

சட்டென்று சுதாரித்துக் கொண்ட ராம்பிரசாத், "ஓ! அதுவேற அப்படியா? ஒகேங்க. காதல் வந்து ஒரு பத்தடி உயரத்துல இருக்கக் கூடிய விஷயம்னா... நட்பு ஒரு ஐந்தடி உயரத்துக்கு வச்சுக்கக்கூடாது?" என்று கேட்டான் ராம்பிரசாத்.

எழிலி கலீரென்று சிரித்தாள். ஆனால் மனதுக்குள், 'ஏன் ஒத்துக்கிட்டா என்ன குறைஞ்சா போயிடும்' என்ற எண்ணம் தோன்றியது.

ராம்பிரசாத்துக்கு உள்ளூற ஒத்துக்கத் தயார்தான், ஆனால் சூழ்நிலையைப் பார்க்க வேண்டியதிருக்கே என்ற எண்ணம் தோன்றியது போலும்.

"இதுக்குத் தாங்க அறிவு வேணுங்கறது" என்றான் ராம்பிரசாத்.

"எதுக்கு?" என்றாள் எழிலி.

"கரெக்ட்டா பார்த்து கோட் பண்றதுக்குத்தான்" என்றான்.



எழிலி மறுபடியும் கலீரென்று சிரித்தாள்.

அன்றைக்கு அந்த பஸ் ஸ்டாண்டையும் தாண்டி, அடுத்த பஸ் ஸ்டாண்ட் வரை பேசிக் கொண்டேதான் நடந்தார்கள் – 'ஸ்வீட் நத்திங்ஸ்' என்பார்களே அதுபோல.

என்ன பேசினார்கள் என்று தெரியாது. ஆனால் பேசிக் கொண்டே நடந்தார்கள். அந்த அருகாமையின் சுகத்துக்காகத்தான் அவன் அப்படி வருகிறான் என்பது அவளுக்குப் புரிந்தது. அதை இப்பொழுது நினைத்துக் கொண்டாள்.

அப்படியெல்லாம் தன்னோடு நேரம் செலவழிக்க விரும்புகிறவன், கண்டிப்பாக தன் மீது விருப்பம் வைத்திருக்கிறான், ஏதோ ஒன்று அவனைத் தடுக்கிறது. அந்த தடை என்னவென்று தெரியாமல் எப்படி இந்தக் காதல் நிறைவேறப்போகிறது. அது காதல் தானா... அவன் ஏற்றுக் கொள்வானா... என்ற எண்ணம் தோன்ற தீவிர சிந்தனையிலேயே அமர்ந்து விட்டாள்.

## 5



இன்றைக்கு நான்காவது நாள்.!

குறிப்பிட்ட அந்த நேரத்தில் பைக்கை ஓட்டிக் கொண்டு வந்தான் ராம்பிரசாத்.

வழக்கம்போல காத்திருந்தான்.

எழிலி வருகிற சுவடே தெரியவில்லை.

ஏனோ தெரியவில்லை, இந்த நான்கு நாட்களாக அந்தக் குறிப்பிட்ட நேரத்தில் அவள் வருவதில்லை. தன்னைச் சந்திக்க முயலவும் இல்லை.

அவளுடைய செல்போன் நம்பருக்கு அடித்து அடித்துப் பார்த்தான். அவள் செல்போனில் தொடர்பு கொள்வதையும் தவிர்த்தாள்.

ராம்பிரசாத்துக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேலியில் போகிற ஓணானை இடுப்பு மேலே விட்டுக் கொண்டு குத்துதே குடையுதே என்று கத்தினானாம் ஒருவன் என்பது போல கதை இப்படி ஆகி விட்டதே என்று வருந்திக் கொண்டான்.

இன்றைக்கு விடக்கூடாது என்பது போல ஒரு வேலை செய்திருந்தான். வழக்கமாக வருகிற நேரத்துக்கு முன்பாவே வந்து நின்று கொண்டிருந்தான். அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. வழக்கமாக போகிற பஸ்சுக்கும் முந்தைய பஸ்சிலேயே எழிலி ஏறுவதைப் பார்த்தான். கசப்பாகப் புன்னகைத்துக் கொண்டான்.

நண்பர்கள் அடிக்கடி சொல்வார்கள். 'இந்த பெண்கள் மனசை புரிந்து கொள்வதே முடியாதடா... என்று! அப்படித்தான் ஆகிவிட்டது.

எவ்வளவு அருமையாக மலர்ந்திருந்தது அந்த நட்பு!. எப்போதடா காலை வரும், எழிலியை சந்திப்போம் என்று தானே மனது ஓடிக்கொண்டிருந்தது. இரண்டு மாதங்களுக்குள்ளாக ஒரு பெண்ணிடம் தனக்கு இவ்வளவு ஈர்ப்பு ஏற்படக்கூடுமா என்று அவனுக்கு ஆச்சரியமாக இருக்கும் வகையில் அல்லவா... அந்த நட்பு வளர்ந்திருந்தது.?

திடுமென்று இந்தப்பெண் ஏன் இப்படி நடந்துகொள்கிறாள்?

அவனுக்குப் புரியவில்லை. ஆனால் இதை இப்படி விடக்கூடாது என்கிற எண்ணம் மட்டும் அவனுக்குத் தோன்றியது. அவள் ஏறிய பஸ்சை பின்தொடர்ந்தான். இன்றைக்கு அவன் தெளிவான முடிவோடுதான் வந்திருந்தான்.

அலுவலகத்திலும் அனுமதி கேட்டுக்கொண்டு, தேவைப்பட்டால் அரை நாள் விடுமுறை வேண்டும் என்றெல்லாம் சொல்லிவிட்டுத் தான் வந்திருந்தான். அந்த பஸ் போன வழியிலேயே போய் எழிலி இறங்குகிற நிறுத்தம் வரை தொடர்ந்தான்.

எழிலி இறங்கியவுடன் பைக்கை ஓட்டிக் கொண்டு போய், வளைத்து அவள் முன்னால் நிறுத்தினான்.

"எழிலி! ஊர்லதான் இருக்கீங்களா... ?" என்று நல்லவிதமாகவே பேச்சைத் தொடங்கினான்.

எழிலி அவனை பீதியடைந்தாற் போல பார்த்தாள்.

அவனுக்கு ஓரத்தில் வலித்தது. தான் என்ன பேயா... பிசாசா... இந்தப் பெண் தன்னைப் பார்த்து இப்படி விழிக்கிறது... என்று எண்ணிக் கொண்டு, "என்ன எழிலி பயந்துட்டீங்களா? பிக்பாக்கெட் ஏதாவதுன்னு நினைச்சிட்டீங்களோ... அப்படியெல்லாம் இல்லைங்க அம்மணி. நான் உங்க ஃபிரண்ட்தான். ராம்பிரசாத்" என்றான்.

அவள் ஒரு நிமிடம் திருதிருவென்று விழித்து விட்டு, "நீங்க எங்கே இங்கே..." என்று கேட்டாள்.

"நாங்க உங்க பஸ் பின்னாலேயே வந்தோம். நாலு நாளா உங்கள ஆளைக் காணோமா, சரி... ஏதாவது உடம்பு கிடம்பு சரியில்லையோன்னு நினைச்சுட்டோம். அதனால கவாகவான்னு உங்க பஸ்சுக்கு பின்னாடியே வந்து நீங்க இறங்குற இடத்திலே உங்களைக் கப்புன்னு பிடிச்சுருக்கோம், அம்மணி"



என்றான் ராம்பிரசாத்.

அவள் என்ன செய்வதென்று தெரியாதவள் போலவும் என்ன பேசுவது என்று தெரியாதவள் போலவும் ஒரு நிமிடம் அமைதி காத்தாள்.

பிறகு சட்டென்று அவனை நிமிர்ந்துபார்த்துச் சொன்னாள். "பிரசாத், இனிமேல் என்னை காண்டாக்ட் பண்ண முயற்சி பண்ணாதீங்க" என்றாள். அவன் திகைத்துப் போனான்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க... ?" என்று கேட்டான் பதட்டத்துடன்.

"சிலதுக்கெல்லாம் விளக்கம் சொல்ல முடியாதுங்க. ப்ளீஸ் புரிஞ்சுக்கோங்க. இனிமேல் என்னைக் காண்டாக்ட் பண்ணாதீங்க. நானும் உங்களைக் காண்டாக்ட் பண்ண மாட்டேன்" என்றாள்.

"ஹலோ... ஹலோ... கொஞ்சம் நில்லுங்க. கரெக்ட்டா பதில் சொல்லிட்டுப் போங்க. ரெண்டு மாசம், மூணு மாசம்னு பழகுவீங்க... திடீர்னு ஒருநாள் வந்து 'என்னை காண்டாக்ட் பண்ணாதீங்க'ன்னு சொல்வீங்க... நாங்க என்ன உங்க விருப்பத்துக்கு வளையறதுக்கு ரப்பரா?" என்று கேட்டான்.

அவள் வருத்தத்துடன் அவனைப் பார்த்தாள்.

"இதுல உங்க தப்பு எதுவும் இல்லைங்க, ராம்பிரசாத். தப்பெல்லாம் என்னோடது தான். ஒவ்வொருத்தருக்கும் சில கடமைகள் இருக்கும். அதுமாதிரி எனக்கும் ஒரு கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றணும்னா... நான் எந்த சுயசிந்தனையும் வச்சுக்கக் கூடாது" என்றாள்.

"சுத்தமா புரியலைங்க" என்று அவன் சிரித்தான், சூழ்நிலையை இதமாக்குவது போல.

அவள் இப்பொழுது தெளிவாக இருந்தாள். தோளைக் குலுக்கினாள். "அது உங்க தலைவலி, ராம்பிரசாத். ஐ ஆம் சாரி... எனக்கு லேட் ஆகுது" என்று அவனைக் கடந்து சரசரவென்று அந்தப் பெரிய அலுவலகத்தின் கேட்டிற்குள்ளே நுழைந்து விட்டாள்.

அவன் ஏதோ அடி வாங்கினாற்போல தன் முகத்துக்கு முன்னாலே மூடப்படுகிற அந்த கேட்டைப் பார்த்து நின்று கொண்டிருந்தான்.

"அண்ணா, ரெண்டு இட்லி போதுமா?" என்று கேட்டாள் ரமணி. அவன் உச்சுக் கொட்டினான். "போதும்மா..." என்றான்.

"என்னண்ணா... விளையாடறியா... ரெண்டு இட்லி சாப்பிட்டுட்டு எப்படி பசி தாங்கும்" என்று கேட்டாள் ரமணி உண்மையான அக்கறையுடன்.

"இல்லைம்மா... இன்னைக்கு கேன்டீன்ல சாப்பிட்டுக்கறேன்... அப்படி பத்தலைன்னா..." என்றான் ராம்பிரசாத்.

"எதுக்கு... எதுக்கு கேன்டீன்ல சாப்பிடணும். இன்னைக்கு வீட்லேயே நல்ல அயிட்டங்கள் செஞ்சிருக்கோம். எடுத்துட்டுப் போண்ணா..." என்றாள் ரமணி.

"ஏம்மா... தொல்லை பண்றே. இன்னைக்கு இந்த சோத்தவேற சுமந்துட்டுப் போணுமா... கஷ்டமா இருக்கும்மா" என்றான் ராம்பிரசாத்.

"உனக்கு என்னமோ ஆயிருச்சுண்ணா..." என்றாள் ரமணி.

அவன் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான்.

"இல்லை இல்லை... நிஜமாத்தான் சொல்றேன். நீ மரத்துக்கடியா பார்த்து வண்டி ஓட்டிட்டுப் போறீயா... ஏதோ காத்துக் கருப்பு அண்டியிருக்குன்னு நினைக்கிறேன்" என்று கேலி செய்தாள் தங்கை. அவன் புன்னகைத்தான்.

"சரி, என்னமோ ஸ்பெஷல் பண்ணியிருக்கேன்னு சொல்றீயே... அதைக் குடு" என்றான்.

"உனக்குப் பிடிச்ச பொங்கல் பண்ணியிருக்கேண்ணா..." என்றாள் அவள்.

அவன் மௌனமாகத் தன்னுடைய ஷூவை எடுத்து அணிகையில்...

"வழக்கமான பொங்கல் இல்லைண்ணா... ரவா பொங்கல் பண்ணியிருக்கேன்" என்றாள்.

"சரிம்மா... எதையாவது கொடு. தொட்டுக்க ஏதாச்சும் இருக்கா" என்றான்.

"அதற்கேற்றாற் போல கத்தரிக்காய் பஜ்ஜி பண்ணியிருக் கேண்ணா..." என்று ஆசையாக தனக்காக தயார் செய்திருந்த தங்கையை அவன் ஆதங்கத்துடன் பார்த்தான்.

சட்டென்று நெற்றியிலே... பின்மண்டையிலே... யாரோ ஒருவர் அடிக்கிறாற் போல இருந்தது. 'மடையா... ரெண்டு மாசம் ஏதோ ஒரு பொண்ணுகிட்டப் பழகிட்டே. அந்தப் பொண்ணு திடீர்னு கழட்டிவிட்டுட்டு கதவைச் சாத்திட்டுப் போயிட்டா... இது தான் உனக்குப் பெரிய கவலையா இருக்கு. இங்கப் பாரு... மாங்குமாங்குன்னு உனக்குப் பொங்கல் பண்ணி பஜ்ஜி பண்ணி குடுத்துட்டு இருக்காளே ஒருத்தி... அவள் வாழ்க்கையைப் பற்றி நினைச்சயா?' என்று கேள்வி கேட்டது மனம்.

திடுக்கிட்டுப் போனான்.

அந்த சமயத்திலே அவனுக்கு இன்னொன்றும் புரிகிறாற்போல இருந்தது. அவள் என்ன சொன்னாள். 'எல்லாருக்கும் சில கடமைகள் இருக்கு. ஒருசில



கடமைகளை நிறைவேற்றணும்னா... சுயத்தையே விட்டுக் கொடுக்க வேண்டியதிருக்கு' என்றாளே. அது தனக்குப் பொருந்தாதா? பொருந்தணும். அவளுக்கு என்ன கடமை இருக்கும்? பெற்றோர்கள் தான்.

ஒருவேளை அவங்க வீட்ல அப்ஜெக்ட் பண்ணியிருப்பாங்களோ... என்று யோசித்தான். அவனும் ஒரு நல்ல மகனாக இருந்தான். குடும்பத்தின் கடமைகளை எடுத்துக்கட்டிச் செய்கிற இளைஞனாக இருந்தான். அதனால் அவளுடைய பங்கில் என்ன பிரச்னையோ... என்னமோ... என்று எண்ணிப் பார்க்கும் பக்குவமும் அவனுக்கு இருந்தது.

அந்தப் பக்குவத்தோடு தனக்கும் அந்தக் கருத்து ஒத்துவருமோ என்று யோசிக்கிற அறிவுசார்ந்த சிந்தனையும் அவனுக்கு இருந்தது. தன்னைத் தானே கற்பனையில் சாட்டையால் அடித்துக் கொண்டான்.

'மனுஷனாடா... நீ. ஒரு பொண்ணு – ஒரு தங்கை – இப்படி இருக்கும்பொழுது அவளுக்கு வழி பண்ணாம உனக்கு என்னடா வேண்டிக்கிடக்கு, வாழ்க்கை?' என்று அவன் மனசாட்சி போட்டுக் கிளறியது. அப்பொழுது தான் அந்த முடிவைச் செய்தான்.

அப்பா பொய்யாமொழி செய்தித்தாளை வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். அவரிடத்திலே போய் சொன்னான். "அப்பா, உங்களுக்கு சாயங்காலம் ஏதாவது வேலை இருக்கா... ?" என்று கேட்டான்.

"இல்லையேப்பா... இன்னைக்கு நான் ஃப்ரீயாத்தான் இருக்கேன். என்ன வேணும் சொல்லு" என்றார்.

"உங்ககிட்டப் பேசணும்" என்றான்.

"எதைப் பற்றி... ?" என்று கேட்டார்.

"இல்லைப்பா... ரமணி விஷயமா..." என்றான் மகன்.

"ரமணி விஷயமா..." என்று அவர் பார்க்க... "இப்படியே சும்மா இருந்தா எப்படிப்பா... ரமணிக்கு மாப்பிள்ளை பார்க்க ஆரம்பிக்கலாம்" என்றான்.

அப்பா உண்மையில் மகிழ்ச்சி அடைந்தார்.

"ஆமாம்ப்பா... நானே அதைப்பற்றி உங்கிட்டப் பேசலாம்னு இருந்தேன்" என்றார் உற்சாகமாக.

"இல்லைப்பா... திங்ஸ் ஓரளவுக்கு ஆர்கனைஸ்டு ஆகட்டும்னு இருந்தேன்."

"இப்ப இருந்து பார்த்தா ஒரு ஆறு மாசத்திற்குள்ளாவது...?"

"செட்டிலானா... செலவு பண்றதுக்கு நாம தயாராக இருக்கணும்ல...

அதுக்கான சோர்ஸஸ் பார்த்துக்கிட்டிருந்தேன்ப்பா... இனிமே ரமணிக்கு மாப்பிள்ளை பார்க்கலாம்ப்பா...” என்றான்.

“ராஜேஸ்வரி...! இங்க வா” என்று உற்சாகமாக உள்ளே பார்த்து அழைத்தார் பொய்யாமொழி.

“என்னங்க...” என்றபடி வந்தார் தாயார்.

“இவன் என்ன சொல்றான்னு கேட்டியா... ?” என்றார்.

“என்ன தம்பி...” என்றார் அம்மா.

“இல்லை. ரமணிக்கு மாப்பிள்ளை பார்க்கலாம்னு சொல்றான்” என்றார் அப்பா.

“அப்படியா தம்பி...” என்றார் அம்மா ஆர்வத்துடன்.

“இன்னைக்கு சாயங்காலம் ஃப்ரீயா வச்சுக்கோங்க. உங்ககிட்ட நான் பேசணும்” என்றான்.

“எங்கப்பா... நீ வர்றதுக்கு எட்டுமணி ஆயிருது...” என்று ஆரம்பித்தாள் அம்மா.

“அம்மா. பிரைவேட் கம்பெனின்னா அப்படித்தான் இருக்கும். நான் பெர்மிஷன் போட்டுட்டு ஒரு ஆறு மணிக்கு வர்றதுக்கு முயற்சி பண்றேன்” என்றான் மகன்.

தாயின் முகத்திலும் தந்தை முகத்திலும் பொங்கி எழுகிற அந்த மகிழ்ச்சியைப் பார்க்கும்பொழுது எழிலியின் முகம் அப்படியே பின்னோக்கிப் போகிறமாதிரி இருந்தது.

இப்படி ஏதோ ஒன்று எழிலிக்கு நடந்திருக்க வேண்டும். அதனால் தான் அவள் அப்படிச் சொல்லியிருக்கிறாள் என்று எண்ணிக் கொண்டான்.

“சரிப்பா... நான் வர்றேன்... அம்மா வர்றேன்...” என்று சொல்லிக் கொண்டே வண்டியை எடுத்துக் கொண்டு போனான்.

சந்தைக்கு செல்கிற மாடுபோல அந்த வண்டி வழக்கம்போல எழிலியைச் சந்திக்கும் பஸ் ஸ்டாப் வழியாகவே போனது.

எழிலி அங்கே இருக்கவில்லை.

கிட்டத்தட்ட பஸ் ஸ்டாண்டே காலியாக இருந்தது. அவன் மனமும் கனமாக இருந்தது. அந்தக் கணத்தில் பரிபூரணமாக ஒரு விஷயத்தை உணர்ந்தான். அது என்னவென்றால்... எழிலியின் மேல் தனக்கு கொள்ளைக் காதல் இருக்கிறது என்ற அந்த உண்மைதான்!!



ஏனோ நேரங்கெட்ட நேரத்தில் அந்த உண்மை வந்து தன்னைத் தாக்குகிறது என்பதை உணர்ந்தான். நெஞ்சில் தவிப்பும் கனமும் ஏறியது.




**கொ**ஞ்சம் முயற்சி செய்தால் எட்டிக்குதிக்கிற மாதிரிதான் இந்த கேட் இருக்கிறது. என்ன செய்யலாம்? என்று நின்று யோசித்துக் கொண்டிருந்தார் அமிர்தலிங்கம்.

தோற்றம் இளமையாக இருந்தது. நல்ல சுருள் முடி. ஐந்தேமுக்கால் அடி உயரம். தீர்க்கமான மூக்கு. பேன்ட் சர்ட் அணிந்திருந்தார். சினிமாவில் வருகிற கதாநாயகனைப் போல அந்த வீட்டு கேட்டின் வெளியே நின்று கொண்டு என்ன செய்யலாம், தேவைப்பட்டால் எட்டிக் குதித்து விட வேண்டியது தான் என்ற முடிவிலே நின்று கொண்டிருந்தார் அமிர்தலிங்கம்.

‘தேவையா இது, ஒரு வாத்தியாருக்கு? எவனாவது ஸ்டூடன்ட், எட்டிக் குதிக்கும்பொழுது பார்த்தான்னு வச்சுக்க... பள்ளிக்கூடத்திலே எந்த வாலுப்பயலையாவது கண்டிக்க முடியுமா? இப்பவே அக்கம்பக்கத்துல கொய்யாப்பழம் திருடிட்டான், சப்போட்டா பழத்தைத் திருடிட்டான்னு பசங்களப் பத்திக் கம்ப்ளைண்ட் வரும்பொழுது விசாரணை செஞ்சா... அந்தப்பக்கம் போயி முறைச்சுட்டுப் போறான். இப்ப எட்டிக்குதிக்கிறதை எந்த வாண்டாவது பாத்ததுன்னா... நம்ம நிலைமை என்ன ஆகிறது...’ என்று யோசித்தவர்... அமைதியாக அந்த காம்பவுண்டுக்கு ஒருபுறமாக இருந்த வேப்ப மர நிழலில் ஒதுங்கினார்.

காலை ஏழு மணி இருக்கும்.!

இன்னமும் தெருவில் பெரிதாக நடமாட்டம் ஆரம்பிக்கவில்லை. நல்லவேளையாக அந்த நேரத்தில் மாடியில் இருந்த கோமளாவின் அறை ஜன்னல் கதவு திறந்தது. ஜன்னல் ஓரமாக கோமளாவும் வந்து நிற்கிற அதிர்ஷ்டமும் நிகழ்ந்தது.

கோமளா இயல்பாக நோட்டமிட்டபடி திரும்பியவள், வேப்பமரத்தின் அடியில் நின்று கொண்டிருந்த அமிர்தலிங்கத்தைப் பார்த்தவுடன் திகைத்துப் போனாள். கம்பராமாயணத்தின் முக்கிய காட்சி அங்கே அரங்கேறியது.

இங்கிருந்து மேல்நோக்குப் பார்வையும் அங்கிருந்து கீழ்நோக்குப் பார்வையும் பரிமாறிக் கொண்டார்கள்.

அங்கே இருந்து, "என்ன?" என்பது போல சைகை செய்தாள். அமிர்தலிங்கம் இங்கே இருந்து, "பேசணும் இறங்கி வா" என்பது போல அபிநயம் பிடித்துக் காண்பித்தார்.

கோமளா அங்கேயிருந்து, "கீழே அப்பா இருக்காங்க" என்று பயந்துபோனாற் போல சைகை செய்ய, "அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீ இப்ப இங்க வர்லைன்னா... நான் இங்கிருந்து குதிச்சுருவேன்" என்று சைகை செய்தார் அமிர்தலிங்கம்.

"ஐய்யய்யோ... வேண்டாம்" என்பது போல அவள் அங்கிருந்து அபிநயித்தாள்.

எப்படியோ தான் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டார்.

"நான் கோயில்கிட்ட நிக்கிறேன். அங்க வந்து சேரு" என்று சொல்லிவிட்டு நகர்ந்து விட்டார்.

கோமளா என்ன வித்தை செய்தாளோ... அங்கு வந்து சேர்ந்தாள்.

"கோமளா உங்க வீட்டு நிலவரம் என்ன?" என்று கேட்டார் அமிர்தலிங்கம்.

"அம்மாவும் அப்பாவும் ரொம்ப கடுப்புல இருக்காங்க. 'அவங்க சாதி என்ன தெரியுமா, நம்மள விட உசந்தவங்க. கொஞ்சமாவது அறிவிருக்கா... நீ பாட்டுக்குப் போயி அந்தப் பையன்கிட்டப் பழகிக்கிட்டு இருக்கே... நாளைக்கு ஏதாவது பிரச்னை வந்ததுன்னா... குடும்பத்தோட பூச்சிமருந்தைக் குடித்துவிட்டு பரலோகம் போகவேண்டியது தான்' அப்படின்னு அம்மா திட்டறாங்க" என்றாள்.

"அறிவு கெட்டவங்க. எப்பப் பாத்தாலும் சாகறதைப் பற்றித்தான் பேசுவாங்களா... இருந்து போராடி ஜெயிக்கிறதப் பற்றி யோசிக்க மாட்டாங்களா?" என்றார் அமிர்தலிங்கம் கடுப்பாக.

"அதெல்லாம் எனக்குத் தெரியாதுங்க... பேசாமல் ட்ராப் பண்ணிடலாம்" என்று கோமளா சொல்லவும் அமிர்தலிங்கம் கடுப்பாகி முறைத்தார்.

"ஓங்கி அறைஞ்சேன்னா... பல்லு பதினாறும் பேந்திடும்" என்றார்.

கோமளா திடுக்கிட்டுப் போய் பார்த்தாள்.

"பத்து நாள் டைம். பதினொராவது நாள் இருபந்தைஞ்சாம் தேதி ரெஜிஸ்திரார் ஆபீஸ்ல உனக்கும் எனக்கும் கல்யாணம். வந்து சேரு... இல்லைன்னா... வந்து கடத்திட்டுப் போயிடுவேன்" என்று சொல்லிவிட்டு நகர்ந்தார் அமிர்தலிங்கம்.

"ஏங்க... ஏங்க... என்னங்க பேசறீங்க..." என்று பின்னாலே வந்த



கோமளாவை திரும்பிப் பார்த்தார். சுற்றும்முற்றும் பார்த்தார்.

"கோவிலாச்சேன்னு பார்க்கிறேன், இல்லைன்னா இதுக்கு வேறமாதிரி பதில் சொல்வேன்" என்று சொன்னவர், அவள் பயந்த முகத்தைப் பார்த்து ஒருகணம் நெகிழ்ந்து போய் அவளது கையை தன் கையில் பிடித்துக் கொண்டார்.

"பயப்படாதே கோமளா. நம்மளைவிட மோசனமான சூழ்நிலையில கல்யாணம் பண்ணினவங்கெல்லாம் இன்னைக்கு நல்லா இருக்காங்க. என்னை நம்பு. நான் உன்னை நல்லா வச்சுக்குவேன். இந்த வெளி மனுஷங்கதானே என்னவோ சொல்லிட்டுப் போறாங்க. நம்மளோட வாழ்க்கைய நாம டிசைட் பண்ணுவோம், புரியுதா?" என்று சொன்னவர் அவளது கையை எடுத்து லேசாக முத்தமிட்டு விட்டு விறுவிறுவென்று நடந்து சென்றார்.

அந்தக் கணத்தில் திடுக்கிட்டு விழித்தார் அமிர்தலிங்கம். தங்கள் கடந்தகால வாழ்க்கை அப்படியே படம் போல வந்து அவர் முன்னாலே விரிந்து விட்டுச் சென்றது.

திடுக்கிட்டு எழுந்து கட்டிலில் அமர்ந்தவர், வாட்டர் ஜக்கில் இருந்த தண்ணீரை எடுத்து இரண்டு மூன்று டம்ளர் குடித்தார். முகத்தைத் துடைத்துக் கொண்டார். மறுபடியும் ஒருக்களித்துப் படுத்தார்.

ஒருக்களித்து படுப்பதற்கு முன்பு அவர் பார்வை கோமளாவை நோக்கிச் சென்று திரும்பியது.

நிம்மதியாக உறங்கிக் கொண்டிருந்தார் கோமளா.

அமிர்தலிங்கத்தின் மனம் ஆழ்ந்த சிந்தனையில் இறங்கியது. சரமாரியாக அவரைக் கேள்விகள் கேட்டது. 'வெளியில உறவுக்காரங்க வேணும்னா ஒட்டாம இருந்திருக்கலாம், அமிர்தலிங்கம். ஆனால் வீடு, இந்த நாலு சுவருக்குள்ளே நீயும் கோமளாவும் நிம்மதியான வாழ்க்கை வாழவில்லையா? ஒருத்தர ஒருத்தர் விட்டுக் கொடுத்து சந்தோஷமாக வாழலையா? ஒருகட்டத்துக்குப் பிறகு சொந்தக்காரங்க புரிஞ்சுகிட்டு உங்களத் தேடி வந்தாங்க. நீ தானே ஒதுங்கினே... எத்தனை அருமையான கணங்கள்... நீயும் உன் நேசத்துக்குரியவளும் அனுபவித்த அந்த சந்தோஷங்கள்... இதெல்லாம் பொய்யா? பழங்கதையா? உண்மையில்லாத விஷயமா? இப்ப மட்டும் – உன் மகளுக்கு மட்டும் இதையெல்லாம் மறுக்கிறியே... நியாயமா?' என்று கேட்டது.

இன்னொரு நிகழ்வும் அப்பொழுது அவருக்கு நினைவுக்கு வந்தது.

ஒருமுறை அவர் விளையாட்டுப்போல கோமளாவிடம் கேட்டார், "ஏன் கோமளா நாம ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கலைன்னா... நீ என்ன பண்ணியிருப்பே..." என்று கேட்டார்.

அப்பொழுது கோமளா சொன்னார், "கண்டிப்பா வேற யாரையும் கல்யாணம் பண்ணியிருக்க மாட்டேங்க" என்று!

அமிர்தலிங்கம் சிரித்தார். "பைத்தியக்காரி; எத்தனையோ பேரோட வாழ்க்கையில காதல்ங்கிறது வருது. அதுக்கப்பறம் கல்யாணம் பண்ணிக்காமலே இருந்துடுறாங்க..." என்றார்.

"அது பரஸ்பரம் நம்பிக்கையில்லாத காதல்ங்க... இதே நீங்க என்னைக் கைவிட்டுட்டுப் போயிருந்தீங்கன்னா... நான் உங்கள வெறுத்திருப்பேன். என் காதலுக்கு நீங்க தகுதியில்லை அப்படீன்னு நினைச்சுட்டு அதுக்காகக்கூட வேற கல்யாணம் பண்ணியிருப்பேன். ஆனா எனக்காக நீங்க ஒருபக்கம் உருகிக்கிட்டு இருந்திருந்தீங்கன்னா... நிச்சயமா நானும் கல்யாணம் பண்ணியிருக்க மாட்டேன்" என்றார்.

அது இப்பொழுது அவருக்கு நினைவுக்கு வந்தது. எழிலியிடம் தான் பேசியதற்குப் பிறகு எழிலி அந்தப் பையனைச் சந்திப்பதில்லை என்பது அவருக்குப் புரிந்திருந்தது.

வழக்கமாக புறப்படும் நேரத்துக்கு முன்பாகவே புறப்பட்டு பஸ்சில் அவள் போய் விடுகிறாள் என்பதும் அந்தப் பையனை சந்திப்பதை முற்றிலும் தவிர்க்கிறாள் என்பதும் அவருக்குப் புரிந்தது. மனம் நெகிழ்ந்தது.

காதலித்து... அதனால் கல்யாணம் செய்து... அதனால் ஏற்படப் போகிற பிரச்னைகளைச் சந்திக்கப் போகிற பயம் அல்ல அது, அப்பா, அம்மாவினுடைய மனசை திருப்திப் படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் அந்தப் பெண் தன்னை வருத்திக் கொள்கிறாள் என்பது புரிந்தது.

இந்த ஒரு மாத காலமாக அவளுடைய கண்களில் ஒரு ஆழ்ந்த வெறுமை குடிகொண்டிருப்பதையும் அவரால் பார்க்க முடிந்தது. அப்பா, அம்மாவுக்காக அவர்கள் முன்னாலே அவள் நடித்தாள், சிரித்தாள், கலாட்டா செய்தாள் என்றாலும் கூட, அந்தச் சிரிப்பு... அவள் இதழ்களுக்குள்ளேயே நின்றதேயொழிய அது கண்வரை எட்டவில்லை என்பதும் அவருக்கு புரிந்தது.

ஒரு ஜீவன் என்பார்களே... அந்த ஜீவனை தான் குதறி விட்டதாக அவருக்கு தோன்றியது.

சட்டென்று திரும்பி, "ஏய், கோமளா... எந்திரி... எந்திரி" என்று எழுப்பினார். கோமளா, என்னமோஏதோ என்று எழுந்து அமர்ந்தார், படபடப்பாகி விட்டார்.



"படபடப்பாகிற அளவுக்கு ஒன்றுமில்லை. ரிலாக்ஸ்..." என்று ஆசுவாசப்படுத்தி விட்டு, "ஏன், கோமளா... நீயும் நானும் சந்தோஷமாகத்தானே வாழ்ந்தோம்?" என்று கேட்டார்.

'அடப்பாவி மனுஷா... இதைக் கேட்கிற நேரம் இதுவா' என்பது போல பார்த்து விட்டு, "என்ன ஆச்சு உங்களுக்கு?" என்றார் கோமளா.

"இல்லை, சொல்லு."

"ஏங்க, நடுராத்திரி இரண்டு மணிக்கு எழுந்து... நீயும் நானும் சந்தோஷமாக வாழ்ந்தோமான்னு கேட்கறீங்க?" என்று கேட்டார்

"பதில் சொல்லப்போறியா? இல்லையா?" என்று கேட்டார்.

கோமளா புன்னகைத்துவிட்டு, "கண்டிப்பா... நாம சந்தோஷமாகத்தானே இருந்தோம். இதிலென்னங்க உங்களுக்குச் சந்தேகம்?" என்றார்.

"ஏன் கோமளா, இந்த சொந்தக்காரங்க வர்லை... போகலை... இந்த லவ் மேரேஜ் பண்ணினதுனால ஏகப்பட்ட பிரச்னைகள்... இதெல்லாம் மீறி நாம உண்மையாக வாழ்ந்தோமா இல்லையா? சப்போஸ் நாம வேறவேற யாரையோ கல்யாணம் பண்ணியிருந்தாலும் இந்த சந்தோஷம் நமக்குக் கிடைச்சுருக்காதில்லை?" என்று கேட்டார்.

கோமளாவுக்கு லேசாகப் புரிய ஆரம்பித்தது.

"நிச்சயமாங்க" என்றார்.

"அப்படீன்னா... நாம எழிலிக்கு நியாயம் செய்யலையோ...?" என்று கேட்டார்.

"நாம் இல்லைங்க. நீங்க" என்றார் கோமளா.

"ஏய், நீ கழண்டுக்கறே தானே..." என்று முறைத்தார் அமிர்தலிங்கம்.

"கழண்டுக்கவெல்லாம் இல்லை. ஒரு மாசம் போகட்டும். உங்க கோபம் ஆறட்டும். அதுக்கப்புறம் மெதுவா உங்ககிட்டப் பேசலாம் அப்படீன்னு நினைச்சுகிட்டிருந்தேன்" என்றார் கோமளா.

"அப்போ... நீ எழிலி கட்சியா?" என்று கேட்டார் அமிர்தலிங்கம்.

"என்னது இது? நீங்க என்னமோ வேற கட்சிங்கறமாதிரி பேசறீங்க. நான் நம்மகட்சிங்க" என்றார்.

"நம்ம கட்சின்னா..." என்று அமிர்தலிங்கம் பார்க்க...

"காதல் கல்யாணம் பண்ணி அதில் இருக்கக்கூடிய சந்தோஷத்தை நாம அனுபவிச்சோமே – அதனால எந்த ஜோடி காதலிச்சாலும் அது நம்ம கட்சிங்க"

என்றார் கோமளா.

"அப்படிப் போடு. வாத்தியார் சம்சாரங்கறதக் காண்பிச்சுட்டே..." என்று சிரித்தார் அமிர்தலிங்கம்.

"இப்ப என்ன வேணும்" என்றார் கோமளா.

"இல்ல. எழிலிகிட்ட நான் பேசினதுல இருந்து அந்தப் பையனப் பாக்கறதில்லை. நம்ம சந்தோஷத்துக்காக அவள் தன்னுடைய முடிவை மாத்திக்கிட்டாளோ... அப்படீன்னு தோணுது. அப்போ அவள் சந்தோஷத்துக்காக..." என்று அவர் முடிக்கும் முன்பாகவே...

"நாமளும் தான் முடிவை மாத்திக்கணும்" என்றார் கோமளா.

"அப்படியா சொல்றே...?." என்றார் அமிர்தலிங்கம்.

இப்படியே ஓரிரு நிமிடங்கள் பேசியதற்குப் பின்பு, கோமளா விடம்கூட எதுவும் சொல்லாமல் அமிர்தலிங்கம் சட்டென்று எழுந்து போனார். போய் எழிலியின் அறைக்கதவைத் தட்டினார்.

"எழிலிம்மா... எழிலிம்மா..." என்று கூப்பிட்டார்.

அவள் கதவைத் திறந்து லேசான உறக்கத்தோடு, "என்னப்பா?" என்றாள்.

"எழிலிம்மா... நான் உங்கிட்ட ஒரு விஷயம் சொல்லணும்"

"அப்பா, என்னப்பா சொல்லணும்? காலையிலகூட பேசலாமே" என்றாள் எழிலி.

இப்பொழுதுவரை அவள் எதைஎதையோ யோசித்து விட்டு, இப்பொழுது தான் லேசாக கண் அயர்ந்திருந்தாள்.

"நான் என்ன சொல்ல வர்றேன்னா..." என்று அமிர்தலிங்கம் வாயைத் திறந்து சொல்லிவிட்டு... ஒரு நிமிடம் மௌனம் காத்தார்.

அந்த மௌனம் பொறுக்க முடியாததாக இருந்தது.

ஒரு அரை நிமிடம் கூட பொறுக்க முடியாத எழிலி, "சீக்கிரம் சொல்லுங்கப்பா" என்றாள்.

"எழிலி, நீ, அந்தப் பையனை என்னை வந்து பாக்கச் சொல்லு" என்றார்.

எழிலிக்கு ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை.

"என்னப்பா... சொல்றீங்க. எந்தப் பையனை...?" என்றாள்.

"அதாம்மா... உன் பஸ் ஸ்டாண்ட் ஃப்ரண்டு. அந்தப் பையனை வந்து என்னைப் பார்க்கச் சொல்லு. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் வந்து பார்க்கச்சொல்லு" என்று சொல்லிவிட்டு தனது அறைக்கு வேகமாகப்



போனார். . அவர் சொன்ன விஷயம், எழிலிக்குள் இறங்குவதற்கு ஓரிரு நிமிடங்கள் பிடித்தது.

அந்த ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகு அவள் முகம் பூவாய் மலர்ந்தது.

"ஹேய்..." என்று இரு கைகளையும் உயர்த்திக் கொண்டு ஒரு நிமிடம் குதித்துக் கொண்டாள். தனது அறைக்குப்போனாள். அதுவரை ஏதேதோ சிந்தனைகளால் உறக்கம் வரவில்லை என்றால் இப்பொழுது வேறு விதமான உறக்கம் வராத நிலை ஏற்பட்டு விட்டது.

'காலையிலே முதல் வேலையா... பஸ் ஸ்டாண்ட்ல போய் ராம்பிரசாத்தைப் பார்த்து அப்பாவை வந்து பார்க்கச் சொல்லணும்' என்று எண்ணிக் கொண்டாள்.

அப்பொழுது அவளுக்குத் தெரியவில்லை – ஏதோ தான்போய் சொன்னவுடனே... அவன் பைக்கை எடுத்துக்கொண்டு அப்படியா சமாச்சாரம் என்று வரிந்து கட்டிக் கொண்டு வந்து அப்பாவை பார்க்கப் போகிறான் என்ற தன் கற்பனை எப்படிப் பொய்யாகப் போகிறது என்பது – அப்பொழுது அவளுக்குத் தெரியவில்லை.



7

"தம்பி" என்று வந்து நின்றார் அம்மா.

ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த ராம்பிரசாத் திரும்பி, "என்னம்மா" என்றான்.

"தம்பி! நாளைக்கு ரமணியைப் பெண் பார்க்க வர்றாங்கப்பா..." என்று சொன்னார் அம்மா ராஜேஸ்வரி.

"அப்படியாம்மா... ஜாதகம் எல்லாம் ஒத்துப் போயிடுச்சா... பாத்தீங்களா நீங்களும் அப்பாவும்?" என்று கேட்டான்.

"ஆமாம்ப்பா... ஜாதகம் எல்லாம் ஒத்துப்போயிருக்குன்னு நம்ம ஜோஸியர் சொன்னாரு. ஆனா..." என்று ஏதோ இழுத்துச் சொல்ல வந்தார்.

"என்னம்மா... ஏதாவது அதிகமாக கேட்பாங்களா?" என்று கேட்டான் மகன்.

"தெரியலைப்பா... எதுக்கும் நாமளும் தயாராக இருக்கணும்" என்றார் அம்மா.

"நீ எதைப்பற்றியும் கவலைப்படாதேம்மா... இப்ப என்னோட பர்ஸ்ட் எய்ம் ரமணிக்குக் கல்யாணம் பண்றது. திருப்தியாப் பண்றது. என்ன... ஐம்பது பவுன்

கேட்பாங்களா... ? போட்றலாம்., ஜாம்ஜாம்னு கல்யாணம் பண்ணனும்னு சொல்வாங்களா... பண்ணீடலாம். அதுக்கப்பறம் வருஷத்துக்கு மூணு பண்டிகை, நாலு பண்டிகைன்னு செலவு இருக்கு. அதுக்கெல்லாம் நான் டெபாசிட் பண்ணி வச்சுடறேன். கவலையே படாதேம்மா...'' என்றான் ராம்பிரசாத்.

"இல்லை, அப்பாவும் பணம் வச்சிருக்காங்க'' என்றார் அம்மா.

"அப்புறம் என்னம்மா... பொளந்து கட்டிறலாம்'' என்று மகன் உற்சாகமாக சொல்லக் கேட்ட தாய், மகிழ்ந்து நகர்ந்தார்.

திரும்பவும் வந்தார்.

"என்னம்மா குழப்பம்'' என்றான் ராம்பிரசாத்.

"இல்லை...'' என்று ஏதோ சொல்ல வந்தார் அம்மா.

"வரட்டும்மா, வந்து பொண்ணைப் பாக்கட்டும்மா... அதுக்கப்பறம் எல்லாம் பேசிக்கலாம்மா... மற்றதையெல்லாம் என்கிட்ட விட்ரு...அப்பா இருந்த இடத்தில கைட் பண்ணட்டும். எல்லா அரேஞ்மெண்ட்ஸையும் நான் பண்ணிடறேன். நீ ஏன் கவலைப்படறே...'' என்று அம்மாவைத் தேற்றி அனுப்பி விட்டு, அவன் அந்தப் புத்தகத்தில் ஆழ்ந்தான்.

ராஜேஸ்வரி திரும்ப வந்து கணவரிடம் சொன்னார்.

"நான்தான் சொன்னனே...டீ...அவனைப் பற்றியெல்லாம் கவலைப்பட வேண்டியதில்லை. பொறுப்பான பையன்...டீ அவன்'' என்றார்.

"இல்லைங்க. அவன்கிட்ட அந்த விஷயம் சொல்லலை'' என்றார் அம்மா.

"எந்த விஷயம்... ஓ... அந்த விஷயமா? அதைப் அப்புறம் பாத்துக்கலாம். முதல்ல மாப்பிள்ளை வீட்டுக்காரங்க வரட்டும்'' என்றார் பொய்யாமொழி.

**மா**ப்பிள்ளை வீட்டுக்காரர்கள் வந்தார்கள். பையன் பார்ப்பதற்கு நன்றாகவே இருந்தான். அவர்களுக்கு இந்த ஜாதகத்தைக் கொடுத்த தரகரும் கூட வந்திருந்தார்.

ரமணி ஒரு டிரேயில் பலகாரங்களை சிறுசிறு தட்டுக்களில் வைத்து அதோடு கூட காஃபியும் வைத்து எடுத்துக் கொண்டு வந்தாள். அவள லேசாக விந்தியபடி நடந்து வந்ததைப் பார்த்தவுடன் மாப்பிள்ளையின் பெற்றோர் முகம் மாறியது.

மாப்பிள்ளை எதையும் காட்டிக் கொள்ளவில்லை என்றாலும்கூட பெற்றோர்களின் முகம் மாறியது.



அவர்கள் தரகரைப் பார்த்தார்கள். தரகர், "நான் அப்புறம் சொல்கிறேன்'' என்பது போல கண் அமர்த்தினார். மாப்பிள்ளை மெல்லிய குரலில் தரகரிடம் ஏதோ கேட்டான்.

அவரும் அதற்கு ஏதோ பதில் சொன்னார்.

எதிரில் அமர்ந்து இதையெல்லாம் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தான் ராம்பிரசாத். ராஜேஸ்வரியும் பொய்யாமொழியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ரமணியின் முக அழகும் வசீகரமான புன்னகையும் ஜெயித்துவிடும் என்ற நம்பிக்கையில்தான் அந்த மிகப்பெரும் தவறைச் செய்திருந்தார்கள்.

தரகரிடம் 'பெண்ணின் ஊனத்தைப் பற்றிச் சொல்ல வேண்டாம். வருகிற மாப்பிள்ளைக்கு அவளது அழகைப் பிடித்துப் போய் சரியென்று சொன்னால் செய்து கொள்ளலாமே' என்ற நப்பாசையில் அவர்கள் ரமணிக்கு இந்தக் குறை இருந்ததைச் சொல்லாமலே விட்டிருந்தார்கள்.

அங்கே நடந்த பார்வைப் பரிமாற்றத்திலேயே ராம்பிரசாத் அதைப் புரிந்து கொண்டான். உள்ளூர வருத்தம் ஏற்பட்டது.

அம்மாவும் அப்பாவும் இப்படியொரு தவறைச் செய்திருக்க வேண்டாம் என்பது அவனுடைய கருத்து.

நல்லவேளை மாப்பிள்ளை நாகரீகமானவனாக இருந்தான்.

அவனுடைய தாயையும் தந்தையையும் தன்னுடைய தொடுகையினாலேயே அமர்த்தி – பேசாமல் இருங்கள் என்பது போல சொல்லிவிட்டான்.

பொறுமையாக இருந்து பெண்ணைப் பார்த்து விட்டு, சற்று நேரம் பேசிவிட்டு பிறகு புறப்பட்டார்கள்.

ராஜேஸ்வரியும் பொய்யாமொழியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

பையனின் அப்பாவும் அம்மாவும் – அவர்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். பையனின் அப்பா வாயைத் திறந்தார்.

"நீங்க முழுமையா எல்லா விபரமும் சொல்லலை. பரவாயில்லை. சொல்லியிருக்கலாம். ஆனால் இப்பொழுதே எந்த முடிவும் சொல்லமுடியாது. ஊருக்குப் போய் லெட்டர் போடறோம்'' என்று சொன்னார்.

ஊர் என்றால் பெரிய தூரம் ஒன்றுமில்லை. ஆறு ஏழு கிலோ மீட்டர் தூரம் தான். அவர்களைப் பொறுத்தவரை மிகவும் நாகரீகமாக நடந்து கொண்டார்கள் போலத்தான் ராம்பிரசாத்துக்குத் தோன்றியது.

அவர்கள் சென்றதற்குப் பிறகு அம்மா, அப்பாவிடம் கேட்டான்,

"ஏம்மா... நீங்க முழுசும் சொல்லலையா... ?" என்று!

அம்மாவின் கண்களில் கண்ணீர் கோர்த்தது.

"இல்லைப்பா... ரமணியோட முகத்தைப் பார்த்துட்டா போதும், அவர்களுக்குப் பிடிக்கும் என நினைச்சோம். அதனாலதான் தரகர்கிட்ட நாங்க சொல்ல வேண்டாம்னு சொன்னோம்" என்றார்.

"பெரிய தப்பு பண்ணிட்டீங்க அம்மா... பெரிய தப்பு பண்ணிட்டீங்க..." என்று முணுமுணுப்பாகச் சொன்னான் மகன்.

பொய்யாமொழி ஒரு நீண்ட பெருமூச்சு விட்டுவிட்டு, "அப்படித்தானப்பா தெரியுது" என்றார்.

"அப்படித்தான் தெரியுதில்லைப்பா... உண்மையும் அதுதான். எனக்கென்னமோ இந்த வரன் அமையுமான்னு தெரியலைப்பா... யாரு வந்தாலும் சரி உள்ளதைச் சொல்லிருங்க. இதுதான் நிலைமை. பாக்கப் பிரியமிருந்தா வந்து பாருங்க. பொண்ணு லட்சணமா இருப்பா... பெரிய அளவிலே ஒண்ணுமில்லை. லைட்டா விந்தி நடக்கும்னு சொல்லிருங்க" என்றான்.

"சரிப்பா..." என்று அம்மாவும் அப்பாவும் தலையாட்டிக் கொண்டார்கள்.

அவர்களை வழியனுப்பி விட்டு வந்த தரகர், ஒரு சங்கடமான முகபாவத்துடன் உள்ளே வந்தார்.

"என்ன மாமா, என்ன சொன்னாங்க..." என்று கேட்டான் ராம்பிரசாத்.

"இல்லைப்பா... அவங்களும் நல்ல குடும்பம். நாம உள்ளதைச் சொல்லியிருக்கலாம் போலிருக்கு... அம்மாதான் – முக்கியமா... அப்பாகூட சொல்லிடலாம்னாரு... அம்மாதான் பயந்தாங்க... அது தான் நானும், சரி, புள்ளையப் பாக்கட்டும், அழகைப் பார்த்தாப் பிடிக்கும்னு நினைச்சோம். ஆனா அவங்க, இதை எப்படி நீங்க மறைச்சீங்க. மறைக்காம சொல்லியிருக்கலாம்ல... அப்படீன்னு சங்கடப்பட்டுட்டுப் போறாங்க" என்றார்.

"ஏங்கண்ணே... நகையெல்லாம் எவ்வளவும் போடுவோம்னு சொன்னீங்களா..." என்றார் ராஜேஸ்வரி.

"இல்லைம்மா... இந்த பாயின்ட்டுக்கு அப்புறம் அவங்ககிட்ட நகையைப் பற்றிப் பேச முடியல. ஆனா... அந்த அய்யா, பையனெல்லாம் அப்படி ஆசைப்பட மாட்டாங்க. அந்த அம்மா கொஞ்சம் ஆசைப்படுவாங்க. அதனால எதுக்கும் ஐம்பது அறுபது பவுனெல்லாம் போடுவாங்க அப்படீன்னு காதுல போட்டுட்டு வந்துருக்கேன்" என்றார் தரகர்.



ராம்பிரசாத் முகத்தில் ஆழ்ந்த வேதனை தெரிந்தது.

"மாமா, நான் சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க... இந்த நகையை ஜாஸ்தியா போட்டு அதுக்காகக் கல்யாணம் பண்றதெல்லாம் வேண்டாம், மாமா. உண்மையாகவே பொண்ணு இப்படி இருந்தாலும் பரவாயில்லைன்னு ஏத்துக்கறதா இருந்தா கொடுப்போம். நாம செய்யத்தான் போறோம். ஆனால் இதுக்காக கணக்குவச்சுகிட்டு அதுக்காக கல்யாணம்பண்ற மாப்பிள்ளை நமக்கு வேண்டாம் மாமா" என்றான்.

"தம்பி, நீ பேசறதெல்லாம் பேசறதுக்கு நல்லாயிருக்கும்" என்றார் தரகர்.

"கண்டிப்பாக நல்லவங்க கிடைப்பாங்க மாமா, எங்க போயிடும். பார்க்கலாம்" என்றான் ராம்பிரசாத்.

"ஆமாண்ணா... நீ சொல்றது தான் சரி" என்ற குரல் கேட்டுத் திரும்பினார்கள்.

ரமணி அவர்களை நோக்கி விந்திவிந்தி வந்தாள்.

அம்மாவை வருத்தத்துடன் பார்த்தாள்.

"அம்மா, இனிமே இந்த பெரிய தப்பைச் செய்யாதீங்கம்மா. உள்ளதைச் சொல்லுங்கம்மா..." என்றாள்.

"இல்லாட்டி... இந்த மாதிரி பிரச்னை இருக்கக்கூடிய மாப்பிள்ளையாக இருந்தால் கூட பரவாயில்லை" என்றாள்.

ராஜேஸ்வரி அந்தநேரம் கதறி அழுது விட்டார்.

"எதுக்கும்மா அழுறீங்க... இப்ப நான் லேசா விந்தி நடக்கிற மாதிரி அவங்களும் அப்படி இருந்தாக்கூட பரவாயில்லை. ஏன்னா... இந்த ஊனத்துனால என்னெல்லாம் அனுபவிக்க வேண்டியதிருக்கும் என்பது எனக்குத் தெரியும். அந்த மாதிரி அனுபவிச்சவங்களா இருந்தா அவங்களும் நம்மளைப் புரிஞ்சுக்குவாங்க அம்மா" என்றாள்.

"ஏய், நீ போடி உள்ள... ஏற்கனவே நான் சங்கடத்திலே இருக்கேன்" என்றார் ராஜேஸ்வரி.

"ஏம்மா, அவளைக் கோவிச்சுக்கிறீங்க..." என்று தானும் கோபித்துக் கொண்டான் ராம்பிரசாத்.

ரமணி திரும்பிச் சென்று தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

அவள் கண்களில் இருந்து கண்ணீர் பெருகிற்று. ராம்பிரசாத், பின்னாலேயே சென்றான்.

"இதப் பாரும்மா. இதெல்லாம் பெரிய பிரச்னையே கிடையாது. என்

ஃபிரண்ட்ஸ் எத்தனை பேரு...என்னென்ன விதமான ரிஸ்க் எடுத்து கல்யாணம் பண்ணியிருக்காங்க தெரியுமா... என் பிரண்ட், ஒரு பொண்ணு... ஹார்ட் பேஷன்ட்... அந்தப் பொண்ணையே ஒருத்தன் கல்யாணம் பண்ணிகிட்டான். அதனால உனக்குன்னு யாராச்சும் இருப்பாங்கம்மா... நீ ஏம்மா கவலைப்படறே" என்று தேற்றினான்.

"இல்லைண்ணா... இனிமேல இப்படி அம்மா, அப்பாவை செய்ய வேண்டாம்னு சொல்லுங்க. உள்ளதைச் சொல்லி அதுக்கு ஏத்தமாதிரி மாப்பிள்ளை வந்தால் எனக்குப் போதும். ஐ ஆம் நாட் பெர்டிகுலர் அபவுட் பெர்ஸனாலிட்டி. எனக்கு குணம் தானண்ணா முக்கியம்" என்றாள் தளுதளுத்த குரலில் ரமணி.

"இதப்பாரு ரமணி. அண்ணன் நான் இருக்கிற வரைக்கும் நீ எதைப்பற்றியும் கவலைப்படாதே. உனக்கு என்னென்ன வேணுமோ அதையெல்லாம் பண்ணிட்டுத் தான் அண்ணன் லைஃப்ல செட்டில் ஆவேன். நீ கவலையே படாதே" என்றான்.

"ஒகோ... அப்போ உனக்கு அறுபதாம் கல்யாணம் தான்" என்று சிரித்தாள் ரமணி,

கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது,.

"விடு. இப்ப என்ன அதனால... இருபதுல கல்யாணம் பண்ணினவ னெல்லாம் என்னத்த அனுபவிச்சான். அவனைக் கேளு, அறுபதாம் கல்யாணத்திலும் இதே பொண்ணா... அப்படீன்னு சோகமாகத்தான் உட்காந்துட்டு இருப்பான்" என்றான் சகோதரன்.

"ஐயே... மொக்கை ஜோக்கண்ணா..." என்றாள் சகோதரி.

இரண்டு பேரும் சிரித்தார்கள்.

அந்த நேரத்தில் ராம்பிரசாத்தின் மனதுக்குள்ளே எழிலியின் முகம் வந்து போனது. இப்படியொரு தங்கையின் வாழ்க்கையே கேள்விக்குறியாக நின்று கொண்டிருக்கையில், எழிலியாவது குயிலியாவது... என்று தன்னைத் தானே கோபித்துக் கொண்டான் ராம்பிரசாத்.

"அண்ணா, இன்னொரு விஷயம்..." என்றாள் தங்கை.

"சொல்லும்மா..." என்றான்.

"ஒரு ஜோக் தெரியுமா?"

"நீ விஷயத்தைச் சொல்லு" என்றான் அண்ணன்.

"இல்லை. அந்த ஜோக்கை சேர்த்துச் சொன்னால்தான் உனக்குப் புரியும்" என்று சொன்னாள் தங்கை.



"இல்லை... கருப்பா இருப்பா ஒரு பொண்ணு. சிகப்பா ஒரு பொண்ணு. சிகப்பா இருக்கிற பொண்ணுக்கு பதினைஞ்சு பவுன் போடுவாங்க. கருப்பா இருக்கிற பொண்ணுக்கு முப்பது பவுன் போடுவாங்க... அப்படீன்னு ஒரு புரோக்கர் வந்து ஒரு வரன்கிட்ட சொன்னாராம்" என்றாள்.

"ம்..." என்றான் அண்ணன்காரன்.

"அப்புறம் அதைவிட பல்லு கொஞ்சம் தூக்கினமாதிரி ஒரு பொண்ணு. கொஞ்சம் கருப்பா கொஞ்சம் பல்லு தூக்கின மாதிரியான பொண்ணுன்னா... நாற்பது பவுன் போடுவாங்க...அப்படீன்னு சொன்னாராம் தரகர்.

"ம்..." என்றான் ராம்பிரசாத்.

"அப்புறம் இன்னும் கொஞ்சம் கிழடுதட்டினாற் போல முகத்தோட... கொஞ்சம் முத்திப்போன முகம்... கொஞ்சம் ஏஜ்ட்... அந்தப் பொண்ணை கல்யாணம் பண்ணினா எழுபது பவுன் போடுவாங்க அப்படீன்னு சொன்னாராம். அப்போ உடனே அந்த மாப்பிள்ளை பையன் கேட்டானாம், கருப்பா கொஞ்சம் பல்லு தூக்கினமாதிரி முகமும் முத்திப் போன மாதிரி இதெல்லாம் சேர்ந்த மாதிரி பொண்ணு கிடைக்குமான்னு பாருங்க என்றானாம்" என்றாள்.

ராம்பிரசாத் வேதனையுடன் சிரித்தான்.

"ஏம்மா... இதெல்லாம் உனக்கு ஜோக்கா இருக்கா... ?" என்றான்.

"இல்லைண்ணா... பட்டிமன்றத்தில டிவியில சொன்னாங்க. அதனாலதான் சொன்னேன்" என்றாள்.

அவன் ஒன்றும் பேசாமல் வலது கையால் அவள் கண்களைத் துடைத்து விட்டான்.

"அண்ணா, உண்மையாத்தான் சொல்றேன். இந்த ஒரு ஊனத்தை வச்சிகிட்டு அதுக்கு காம்பன்சேஷன் மாதிரி கேட்கிறாங்க... வேண்டாண்ணா... அதுக்கு அப்பா, அம்மா இல்லாம அனாதையாக இருக்கக்கூடிய ஒரு பையனா இருந்தால் கூட போதும். சின்ன வேலையில இருக்கக்கூடிய உழைப்பாளியா இருந்தால் போதும். இந்தப் பொண்ணு எனக்கு வாழ்க்கைத் துணையாக இருப்பாள்னு நம்புறவங்களா நீங்க யாரைப் பார்த்து வேணும்னாலும் சொல்லுங்க, கழுத்தை நீட்டறேன்" என்றாள்.

கண் கலங்க தன் தங்கையை தோளோடு சேர்த்து அணைத்துக் கொண்டான் ராம்பிரசாத். மெல்ல அவள் தலையை நீவிக் கொடுத்தான்.

இயற்கை இந்தப் பெண்ணுக்கு எவ்வளவு பெரிய வஞ்சனை செய்து விட்டது என்று வருந்திக் கொண்டவன், "இதப்பார்றா... நான் இருக்கிறவரைக்கும் நீ

அழக்கூடாது. இப்படியெல்லாம் பிரச்சினை கொடுத்த கடவுள், கூட ஒரு அண்ணனைக் குடுத்திருக்கான் பாரு... எதுக்கு...? இதையெல்லாம் தீர்க்கறதுக்குத் தான். எல்லா பிரச்னைகளையும் எங்கிட்ட விட்டுட்டு நீ பட்டிமன்றம், பட்டிமன்றமா டிவியில போட்டு இந்தமாதரி மொக்க ஜோக்கா கேட்டு சிரிச்சுகிட்டே இருக்கணும்,என்ன?'' என்றான்.

“இது அதைவிட பெரிய தண்டனை அண்ணா...'' என்று சிரித்தாள் தங்கை.

அறிவார்ந்த தங்கை, நல்ல சிந்தனையுள்ள பெண். கடமைகளில் தவற மாட்டாள். உழைக்கக்கூடிய பெண்... இவளுக்கு வரன் தேடி முடிப்பது ஒரு பெரிய காரியமாகவா இருக்கும், எனக்கு? இறைவா எனக்கு சக்தி கொடு என்று வேண்டிக் கொண்டாள்.

“சரிடா... நீ போய் ரெஸ்ட் எடு'' என்றான்.

“ஆமாம். பெரிய ரெஸ்டு... நான் ரெஸ்ட் எடுக்கணும்'' என்றாள் தங்கை.

“இங்க பாரு. இது தான் கூடாது. தன்னிரக்கம் தான் ஒரு மனிதனைக் கொன்னுடும். உனக்கு ஹெலன் கில்லர் கதை தெரியமில்லே... படிச்சுருக்கேல்ல... அற்புதப் பெண் புத்தகம் வாங்கிக் கொடுத்திருக்கேன்ல... கண் தெரியாது. காது கேட்காது... வாய் ஊமை... அந்த அம்மா எப்படி சக்ஸஸ் ஆனாங்க... ம்...'' என்றான் அண்ணன்.

“ஓகே... ஓகே... நீ லிஸ்ட் போடாதே... போதும்போதும்'' என்று சிரித்த தங்கை தன்னுடைய அறையை நோக்கிப் போனாள்.

அவனும் தன்னுடைய அறைக்குப் போனான்.

அந்த நேரம் அவன் செல்போன் ஒலித்தது. எடுத்துப் பார்த்தான். எழிலி... எழிலியின் பெயர் வந்தவுடனேயே அவன் உள்ளத்தில் குப்பென்று மகிழ்ச்சி பொங்கியபோதிலும்கூட அவன் சட்டென்று அவள் அழைப்பைத் துண்டித்தான்.

இரண்டு மூன்று முறை எழிலியிடம் இருந்து அழைப்பு வந்தது. அவனும் சலிக்காமல் துண்டித்தான்.

“ஐ ஆம்...சாரி. ஐ வான்ட் டு டாக் டு யூ'' என்று மெசேஜ் வந்தது. அவன் எந்த பதிலும் அளிக்கவில்லை.

இரண்டு மூன்று முறை அதைப்போல மெசேஜ் வந்தது. சலித்துப் போனவனாக செல்போனையே ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்து விட்டான்.





# 8

அமிர்தலிங்கத்தின் பார்வை தன் எதிரில் சோபாவில் அமர்ந்திருந்த ராம்பிரசாத்தை அளவெடுத்தது.!

அவர் பார்வை அளவெடுக்கிறது என்பது தெரிந்தும் அவன் அலட்டிக் கொள்ளாமல் அமர்ந்திருந்தான். அப்படி அமர்ந்திருக்கும்பொழுதே அவனது சிந்தனை பின்னோக்கியும் ஓடியது.

ஒரு நாள் அல்ல, இரண்டு நாள் அல்ல – மூன்று நாட்கள் தொடர்ந்து எழிலி அழைப்பு விடுத்துக் கொண்டிருந்தாள்.

அவனிடத்தில் பேசுவதற்கு வெகுவாக முயன்றாள்.,

ராம்பிரசாத் எந்தவிதமான பிரதிபலிப்பையும் செய்யவில்லை. பேச முற்படவும் இல்லை.

அவனுக்கு உள்ளூர கோபம், வெகு கோபம்.

இரண்டு மாதங்கள் பழகிவிட்டு, திடீரென்று என்னைத் தொடர்பு கொள்ளாதே என்று சொன்னாளே!

... எல்லாவற்றுக்கும் பின்னாலே ஒரு காரணம் இருந்திருக்கலாம். ஆனால் அந்தக் காரணத்தை முறையாகச் சொல்லி விளக்கி இருக்கலாம், அதை விட்டுவிட்டு அழைப்பு போகும்பொழுதெல்லாம் துண்டிப்பதும் ஏதோ ஒரு இலவசப் பொருள் போல தன்னை நடத்தியதுமான அவளுடைய செய்கை அவனைக் கோபத்தின் உச்சிக்கே அழைத்துச் சென்றிருந்தது.

அந்த கோபத்திலேயே இருந்தபொழுது ரமணிக்கான திருமண வாழ்க்கை பற்றிய கேள்விக்குறியினை அவன் உள்ளம் எழுப்பியதில், அவன் எழிலி பற்றிய எண்ணத்தையும்... ஏன்... தன் மனத்திரையில் பதிந்திருந்த அவள் உருவத்தைக் கூட ஒருபக்கம் ஒதுக்கி வைத்து விட்டான்.

இளமைக்காலம் – அது சலனங்களுக்கே உரிய காலம் தான்! ஈர்ப்புகளுக்கே உரிய காலம் தான்!

அப்படித்தான் தனக்கும் ஒரு ஈர்ப்பு வந்தது, போனது என்ற அளவிலே அதை மறந்து விட்டு நம் கடமையைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் அவனுக்குள் மேலோங்கியது. ஒருவேளை ரமணி மற்ற சராசரிப் பெண்களைப் போல இருந்திருந்தாலும் கூட அவனுக்கு பெரிய அளவிலே இதுமாதிரியான எண்ணங்கள் தோன்றியிருக்காது.

சற்றே ஊனமான அந்தப் பெண்ணை கரையேற்றி விட்டுத்தான் தன்னைப்பற்றி நினைக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு நாளும் தீவிரப்பட்டுக் கொண்டே இருந்தது. அதனால் மீண்டும் எழிலியின் அழைப்பு அவனது காதல் மனத்துக்கு ஆறுதலாகவும் உற்சாகமாகவும் இருந்தாலும் கூட, நடைமுறை வாழ்க்கையில் இப்பொழுது அதற்கு இடமில்லை என்று தெளிவாக முடிவெடுத்து வைத்திருந்தான்.

எல்லாம் நான்கு நாட்களுக்கு மட்டும் தான்.!

நான்காவது நாள் அவன் தன் பைக்கைக் கொண்டுபோய் தனது அலுவலக காம்பவுண்ட் சுவருக்குள் நுழையத் திருப்பிய உடனே, கொஞ்சம் அதிர்ந்து போனான்.

அங்கு மிக சோகமான முகபாவத்தோடு நின்றிருந்தது யார்?

எழிலி... எழிலியே தான்.

இவ்வளவு தூரம் தன்னை அவள் தேடி வந்ததற்குப் பிறகு அவளை உதாசீனப்படுத்த வேண்டும் என்கிற அவனது முடிவு கொஞ்சம் ஆட்டம் கண்டுவிட்டது.

எதிரியே என்றாலும் வீடு தேடி வந்தால் 'வாங்க' என்று வரவேற்பது நமது கலாச்சாரம் அல்லவா? அப்படியிருக்கையில் தன் உள்ளம் கவர்ந்தவள், என்ன தான் நாம் அலைக்கழித்தாலும் இப்பொழுது நம்மைத் தேடி வந்திருக்கிறாள். நின்று இரண்டு வார்த்தையாவது பேசி, அப்பொழுது ஏன் அப்படிச்செய்தாய், இப்பொழுது ஏன் இப்படி செய்கிறாய் என்று கேட்க வேண்டும் என்று தோன்றியது.

வண்டியை நிறுத்தினான்.

அவன் வண்டியை நிறுத்தியவுடனே அவள் முகத்தில் அதுவரை இருந்த சந்தேகம், மாறி கொஞ்சம் முகம் தெளிந்தது.

அந்த நேரத்தில் கொஞ்சம் நெகிழ்ந்து போனான் ராம்பிரசாத்.

"என்ன எழிலி, எதுக்காக இங்கே நிற்கிறாய்?" என்று கேட்டான்.

"உங்களைப் பார்க்கத் தான்" என்றாள் அவள், குரலே எழும்பாத ஒரு குரலில்.

"என்னைப் பார்க்கவா, எதுக்கு? 'என்னை இனிமே பார்க்காதீங்க. என் முகத்திலே முழிக்காதீங்க'ன்னு கதவை அறைஞ்சு சாத்திட்டுப் போனே..." என்றான் அவன்.

"நான் முகத்தில முழிக்காதீங்கன்னு எல்லாம் சொல்லலை" என்றாள்.



"அதைத்தான் பாலீஷ்டா சொன்னே... ஆனால் இப்ப ராவா...சொல்றே. அது தான் வித்தியாசம்" என்றான்.

அவனது கோபம் அவளுக்குப் புரிந்தது. கொஞ்சம் பிடித்தும்கூட இருந்தது. உரிமைக்காரன்தானே கோபிக்க முடியும் என்று லேசான புன்னகை அவள் முகத்தில் அரும்பியது.

"என்ன சிரிப்பு? என்னைப் பார்த்தா சர்க்கஸ் கோமாளி மாதிரி இருக்கா...? ரெண்டு மாசம் பின்னாடியே அலைவீங்க... அதுக்கப்பறம் போடா யூஸ்லெஸ்ன்னு தூக்கிப் போடுவீங்க. அப்புறம் திடீர்னு ஒரு மூடு வந்து ஃபோன் மேல ஃபோனா அடிப்பீங்க... இல்லை... என்ன தான் நினைச்சுகிட்டு இருக்கீங்க" என்று அவன் பொரிந்தான்.

அவள் அதை மௌனமாக வாங்கிக் கொண்டாள்.

கொஞ்சம் ரசிப்பது போலக்கூட இருந்தது, அவனுக்கு.

தன்னுடைய கோபத்தை அவள் ரசிக்கிறாள் என்றவுடனேயே அவனுடைய கோபம் மெல்லத் தணிந்தது.

"சரி, சொல்லு. இப்ப என்ன வேணும்?" என்றான் ராம்பிரசாத்.

"நீங்க தான்!"

அவன் இந்த பதிலை எதிர்பார்க்கவில்லை. ஒரு கணம் திடுக் கிட்டுப் போனான்.

"வாட் டு யூ மீன்... ?" என்றான்.

"ஐ மீன் வாட் ஐ சே..." என்றாள் அவளும் அழுத்தம்திருத்தமாக.

அவன் முகத்திலே புன்னகை அரும்பியது.

"இதானே சொன்னேன்... வேணும்னா வா... என்கிறதுக்கும் வேண்டாம்னா போ... என்கிறதுக்கும் நான் என்ன உங்க வீட்டு நாய்க்குட்டியா?" என்றான் அவன் கோபம் குறையாமல்.

"நீங்க... என்னை வேணும்னா உங்க வீட்டு நாய்க்குட்டின்னு சொல்லிக்குங்க..." என்றாள்.

அவன் சட்டென்று சிரித்து விட்டான்.

"இதப்பாரு... ஆபீஸ் வாசல்ல... நின்னுகிட்டு இப்படிப் பேசிக்கிட்டு இருந்தா... போறவங்க வர்றவங்க எல்லாம் பார்ப்பாங்க..." என்றான் அவன்.

"அதுக்குத் தான் சொன்னேன். நீங்க வேணும்னு..." என்றாள்.

"ஏய், விளையாடாதே" என்று அவன் சிரித்தான்.

"நான் உங்ககிட்டே விளையாடாம... யார்கிட்டே விளையாடறது?" என்றாள் அவள்.

"...டிப் போடு" என்றவன் "இப்ப என்ன வேணும்?" என்றான் மீண்டும் அவன்.

"கொஞ்சம் பர்மிஷன் போட்டுட்டு வாங்க. இல்லைன்னா ஆஃப் எ டே லீவு போட்டுட்டு வாங்க. நான் உங்ககிட்டப் பேசணும்" என்றாள்.

"ஏய், என்ன நினைச்சே... திடீர்னு வந்து லீவு போடுன்னா... இந்த மாதிரி ஆஃபீஸ்ல எல்லாம் அந்த மாதிரி லீவு கிடைக்காது, தெரியுமா?" என்றான்.

"இப்ப காலையில கிடைக்கலைன்னா பரவாயில்லை. ஈவ்னிங்...?" என்று அவன் முகத்தை ஏக்கத்துடன் பார்த்தாள்.

ஏதோ முக்கியமான விஷயத்தோடுதான் அவள் வந்திருக்கிறாள் என்பது அவனுக்குப் புரிந்துபோக, "ஓகே... இங்கே லாஞ்சிலே வெயிட் பண்ணு. வா. நான் போயி மேனேஜரைப் பார்த்துட்டு வர்றேன்" என்று போனான்.

தேவையில்லாமல் விடுமுறை எடுக்காதவன் என்பதாலும் அவனோட கூட கொஞ்சம் நட்புணர்வு உள்ளவர் என்பதாலும் ஒத்துக் கொண்டார்.

"என்னய்யா, நீ தான் கொஞ்சம் ஒழுங்குன்னு நினைச்சுகிட்டிருந்தேன். இங்கேயே பறவையெல்லாம் தேடிக்கிட்டு வருது" என்று சிரித்தார் மேனேஜர்.

"இல்லை சார், இது முக்கியமான ஃப்ரண்டு" என்றான் அவன்.

"தெரியுது, தெரியுது. சுற்றிலும் யார் வர்றாங்க... போறாங்கன்னு தெரியாம நின்னு பேசிக்கிட்டு இருந்தீயே... சண்டை ரொம்ப சுவாரஸ்யமாப் போயிட்டு இருந்தது போலிருக்கு" என்றார்.

அவன் சிரித்து விட்டான்.

"ஒகே... ஒகே... ப்ரொசீட்... ப்ரொசீட்" என்று கேலி செய்து கொண்டே அன்று விடுமுறை கொடுத்தார்.

முதன்முறையாக அவன் பைக்கில் அவள் பின்னால் அமர்ந்து கொள்ள ஊருக்கு வெளியே இருக்கிற ஒரு நல்ல ஹோட்டலுக்கு அழைத்துப் போனான்.

"என்ன முகமெல்லாம் வாடியிருக்கு. சாப்பிட்டியா... ?" என்று கேட்டான்.

"இல்லை. சாப்பிடலை... ரெண்டு மூணு நாளாவே சரியா சாப்பிடலை. நீங்க ஏன்... நான் கூப்பிட்டும் ஏன் எடுக்கலை?" என்று கேட்டாள்.

"டிட் ஃபார் டேட்..." என்றான் அவன்.



"தட்ஸ் நாட் யுவர் நேச்சர்... உங்களுக்கு அது பொருந்தி வர்லை" என்றாள் அவள்.

"நான் கூடத்தான் நீ படக்படக்கென்று ஆஃப் பண்ணுவேன்னு நினைக்கலை. நீ பண்ணலையா...?" என்றான் அவனும் கோபமாக.

அவள் அந்த ஹோட்டலில் அமர்ந்து ஒரு நிம்மதியான உணர்வுடன் தோசையைக் கிள்ளி வாயில் போட்டுக் கொண்டே தன் விஷயத்தில் நடந்ததைச் சொன்னாள்.

ராம்பிரசாத், தன் பக்கத்து விளக்கம் எதையும் சொல்லவில்லை. கேட்டுக் கொண்டான்.

"நான் என்ன செய்யணுங்கறே..." என்று கேட்டான்.

அவள், "நீங்க எங்க அப்பாவை வந்து பாருங்க" என்றாள்.

"உங்கப்பாவை நான் என்னன்னு வந்து பார்க்கிறது, எதைச் சொல்லிட்டுப் பார்க்கறது?" என்று கேட்டான் அவன்.

"எதைச் சொல்றது? எனக்கு உங்களைப் புடிச்சுருக்குன்னு சொல்ல வேண்டியது தான்" என்றாள் அவள்.

அவன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு மெல்லிய பெருமூச்சுடன் சொன்னான்.

"எழிலி! விஷயங்கள் நீயோ நானே நினைச்ச மாதிரி இல்லை. எங்க வீட்லேயும் சில பிரச்னைகள் இருக்கு. நம்ம விஷயம் ஒர்க்அவுட் ஆகுமான்னு எனக்குத் தெரியலை" என்றான்.

"ரெண்டு பேரும் நினைச்சோம்னா... ஏன் ஒர்க்அவுட் ஆகாது?" என்று கேட்டாள் அவள்.

"அப்படின்னா எனக்கு ஒண்ணு சொல்லு. எத்தனை நாளானாலும் காத்திருப்பியா?" என்று கேட்டான்.

அவள் சற்றும் தயங்காமல், "காத்திருக்கேன்" என்று சொன்னாள்.

"எழிலி, இப்ப நான் எந்த பிராமிஸும் உனக்குத் தரலை. இப்பவும் நீ காத்திருன்னு நான் சொல்லவுமில்லை. அதை அப்புறம் பார்க்கலாம். நான் வேணும்னா உங்க அப்பாவை மட்டும் மீட் பண்றேன்" என்று சொல்லிவிட்டு வந்திருந்தான்.

இப்பொழுது அதெல்லாம் நினைவில் ஓட, அமிர்தலிங்கத்தை அவனும் அளவெடுத்தபடி அமர்ந்திருந்தான்.

“தம்பி, என் மகள் எல்லா விஷயத்தையும் சொன்னாள். ஆனால்... இன்னொரு விஷயம் சொன்னாளா, இல்லையான்னு தெரியவில்லை” என்றார் அவர்.

அவன் மௌனமாக ‘நீங்களே சொல்லுங்கள்’ என்பது போல பார்த்துக் கொண்டிருந்தான்.

“நாங்களும் லவ் மேரேஜ் பண்ணிக்கிட்டவங்கதான்ப்பா...” என்றார் அமிர்தலிங்கம்.

அவன் அதை அமைதியாக உள்வாங்கிக் கொண்டான்.

எழிலி முழுமையாகச் சொல்லவில்லை என்றாலும் லேசாக கோடி காட்டி இருந்தாள்.

அமிர்தலிங்கம் நீண்டதொரு பெருமூச்சு விட்டுவிட்டுச் சொன்னார்.

“ஆச்சுவலாப்பா... நாங்க பட்ட கஷ்டமே போதும். எங்க பொண்ணும் அந்தமாதிரி கஷ்டமெல்லாம் படவேண்டாம்னு தான் நினைச்சோம். ஆனா... என் மனசாட்சி இன்னொரு கேள்வியும் கேட்டுச்சு... வெளியுலகத்துல... சமுதாயத்துல எங்க உறவு எப்படி இருந்தாலும் குடும்பத்துக்குள்ளே... வீட்டளவிலே இந்த உறவினால் நாங்க நிம்மதியாகத்தான் இருந்தோம். மகிழ்ச்சியாகத்தான் இருந்தோம். ஒருவேளை அந்த மாதிரி அண்டஸ்டேண்டிங் உங்க ரெண்டு பேருக்குள்ள வந்தா நீங்களும் மகிழ்ச்சியாக இருக்கக்கூடும், இல்லையா... அந்த வாய்ப்பை என் மகளுக்குக் குடுத்துத்தானே ஆகணும் – அப்படி நினைச்சது தான் என் முடிவை மாத்திக்க வச்சது” என்றார்.

அவன் அமைதியாகக் கேட்டுக் கொண்டான்.

சற்று நேரம் அங்கே இருந்தான். பொதுப்படையாகப் பேசினான். பிறகு, “நான் கிளம்பட்டுமா, சார்” என்று எழுந்தான்.

அமிர்தலிங்கம் அவன் முகத்தை ஆழ்ந்து பார்த்தார் – ‘தம்பி, நீ எதுவும் சொல்லலையே’ என்பது போல.

“சார், சில வேளைகளிலே நம்மைச் சுற்றி இருக்கிறவங்களுக்காக நமது சுயத்தை இழக்க வேண்டியது வருது” என்றான் அவன்.

அமிர்தலிங்கம் திகைத்துப் போய் பார்த்தார்.

“புரியலைப்பா...” என்றார்.

“இந்த வாக்கியம், உங்க மகள் எனக்குச் சொன்னது. அதையே நான் இப்போ உங்களுக்குச் சொல்றேன். எனக்கு ஒரு பெரிய கடமை இருக்கு சார், அது முடிகிற வரைக்கும் என்னால எந்த முடிவையும் சொல்ல முடியாது. அது



நாளைக்கு முடியுமோ... நாலு வருஷம் கழிச்சு முடியுமோ... எனக்குத் தெரியாது. அப்படியிருக்கும்பொழுது எனக்காகக் காத்திருன்னு எப்படி உங்க மகள்கிட்டே சொல்ல முடியும்?” என்றான் ராம்பிரசாத்.

அமிர்தலிங்கம் சிந்தனையில் ஆழ்ந்தார்.

“ஏம்ப்...பா... இதற்கு என்ன அர்த்தம்?” என்று கேட்டார்.

அவன் தோளைக் குலுக்கினான். “இப்பொழுது எதையும் நான் கமிட் பண்ண முடியாதுங்கறதுதான் அர்த்தம். காத்திருக்கிறது... அல்லது காத்திருக்காமல் தன் வாழ்க்கையை தானே அமைச்சுக்கிறது... இந்த இரண்டுக்கும் உங்க மகளுக்குச் சுதந்திரம் இருக்கு. உங்களை சந்தித்ததுல ரொம்ப மகிழ்ச்சி சார்” என்று வணக்கம் சொல்லி விட்டு அவன் விறுவிறுவென்று வெளியே கிளம்பிப் போனான்.

தந்தையும் அவனும் பேசிக் கொள்ளட்டும் என்று அவர்களைத் தனித்து விட்டிருந்தாலும் அந்தப்பக்கமாக அமர்ந்து நடந்ததையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த எழிலியும் திடுக்கிட்டுப் போனாள். திகைத்துப் போனாள்.

எழுந்து ஓடி வருவதற்குள்ளாக ராம்பிரசாத் விறுவிறுவென்று நடந்து போய் பைக்கைக் கிளப்பிக் கொண்டு போயே போய் விட்டான்.

## 9



ஏதோ ஒரு சிறிய மாநாடு போல அந்த ஹாலில் அமர்ந்திருந்தார்கள் ராம்பிரசாத்தின் உறவினர்கள்.

எதிரே இருந்த சோஃபாவில் தரகர் ரங்கசாமி உட்கார்ந்திருந்தார்.

அம்மா, அப்பா இருவரும் ஒரு சோஃபாவில் அமர்ந்திருக்க... பக்கவாட்டில் இருந்த சோஃபாவில் ராம்பிரசாத் அமர்ந்திருந்தான்.

அந்தப்பக்கமும் ஒரு சோஃபா இருந்தது. பேசிக் கொண்டிருக்கையிலே சட்டென்று எழுந்த ராம்பிரசாத், உள்ளே போய் தங்கையை அழைத்துக் கொண்டு வந்தான்.

“இங்கே வாம்மா... உன்னைப் பத்திதானே பேசிக்கிட்டு இருக்கோம். நீ அதுல கலந்துக்கணுமா, வேண்டாமா...” என்றான் ராம்பிரசாத்.

“இல்லைண்ணா... நீ... அம்மா, அப்பா மூன்று பேரும் என்ன முடிவு செஞ்சாலும் நான் அதை ஏத்துக்கறேன்” என்றாள் ரமணி.

“இந்தா பாரும்மா... உனக்குன்னு ஒரு லைக்கிங் இருக்கணும். நாங்க

பாத்து எங்களுக்குப் புடிச்ச ஒரு பையனைக் காண்பித்து அது உனக்குப் பிடிக்கலைன்னு வச்சுக்கோ... அப்புறம் வருத்தமாயிடும். அப்புறம் பின்னாலே உள்ளுக்குள் வருத்தத்தை வச்சுகிட்டே வாழ்ந்துகிட்டு இருக்கணும்" என்றான் சகோதரன்.

ரமணி தலையைக் குனிந்து கொண்டு, என்னவோ முணுமுணுத்துக் கொண்டாள்.

"என்னம்மா... –?" என்றான் ராம்பிரசாத் வாஞ்சையாக.

"இல்லை...வரிசையாக மாப்பிள்ளை நிக்குது... இதுல எது எனக்குப் புடிச்சது... உனக்குப் புடிச்சதுன்னு நாம ஆராயப் போறோமாக்கும்" என்றாள்.

"ஏய், இப்படிப் பேசக்கூடாதுன்னுதானே சொல்றேன். இதுக்குப் பேருதான் தன்னிரக்கம். உங்கிட்ட என்ன இல்லை. ஏதோ கொஞ்சம் சாய்ஞ்சு நடக்கறேங்கறதுதுக்காக ஹோல் பர்சனாலிட்டியையும் நீயே டேமேஜ் பண்ணிக்கணுமா? வா, வா... வந்து உட்காரு" என்று இழுத்துக் கொண்டு வந்தான்.

அவளும் அரைமனதாக வந்து அமர்ந்தாள்.

"நல்லவேளை... நானே சொல்லணும்னு நினைச்சேன். நீயே உன் தங்கையை கூட்டிக் கொண்டு வந்து விட்டாய்" என்று சந்தோஷப்பட்டுக் கொண்டார் தரகர் ரங்கசாமி.

"நாலு வரன் கையில வச்சுருக்கேன்ப்பா... போட்டோ பாருங்க... எதைப் பிடிக்குதுன்னு சொல்லுங்க... அதுக்கப்புறம் பார்ப்போம்" என்றார் உற்சாகமாக.

ஒவ்வொரு வரனாக போட்டோ எடுத்துக் காண்பித்தார்.

"இதுல ஒருத்தர் சொந்தமா அச்சகம் வச்சுருக்காரு. இவரு வீடியோகிராஃபர். அந்த மாப்பிள்ளை பாரு... அவரு கவர்மென்ட் உத்தியோகத்தில இருக்காரு. இந்தத் தம்பி, இப்ப வேலை தேடிட்டு இருக்காரு, ஆனா ரொம்ப சொத்து இருக்கு... பாருங்கப்பா... இதுல எது பிடிக்குது அப்படீன்னு..." என்று காண்பித்தார்.

எல்லா மாப்பிள்ளை போட்டோவையும் பார்த்தபொழுது ஓரளவுக்கு நன்றாகத்தான் இருந்தார்கள்.

இதில் எதைத் தேர்ந்தெடுப்பது என்று அவர்கள் யோசித்துக் கொண்டிருந்தபொழுது, ரமணியிடமும் போட்டோவைக் காட்டினார்கள். அவள் தாயிடமே திருப்பிக் கொடுத்து, "உங்களுக்குப் பிடிச்சா சரிம்மா" என்று சொல்லி விட்டாள்.



மூன்று பேரும் போட்டோக்களை மாறிமாறி பார்த்துக் கொண்டிருக்கும் வேளையில், ரமணி எழுந்து, "அம்மா நான் காஃபி போட்டு எடுத்துட்டு வர்றேன்" என்று கூறிவிட்டு போய் விட்டாள்.

தரகர் ரங்கசாமி விடுதலை ஆனாற்போல ஒரு பெருமூச்சு விட்டார்.

"தம்பி, பொண்ணை வச்சுட்டு எப்படிச் சொல்றதுன்னு யோசிச்சுக்கிட்டு இருந்தேன்" என்றார்.

"சொல்லுங்க" என்றான் ராம்பிரசாத்.

"இந்த நாலு பேருக்குமே உள்ள விவகாரத்தைச் சொன்னேன். எல்லாரும் பொண்ணைப் பார்க்கலாம். பொண்ணு ரொம்ப லட்சணமாக இருக்கு. அழகாயிருக்கு அப்படீன்னு ஃபீல் பண்ணினாங்க. ஆனால் எல்லா பயலுகளும் ஒரு விஷயத்தில மட்டும் ஒரேவிதமாகத்தான் இருக்கானுக" என்றார். சொல்லும்பொழுதே அவருக்கே கடுப்பாக இருந்தது.

"சொல்லுங்க மாமா" என்றான் ராம்பிரசாத்.

"அதாம்ப்பா... எல்லாருமே இந்த விஷயத்தை வச்சுகிட்டுப் பேரம் பேசுவாங்க போலிருக்கு. ஆனால் நான் சொல்லி வச்சுருக்கேன். பேரமெல்லாம் பேசி வரப்போறதைக் கெடுத்துக்காதீங்க. சும்மா இருந்தாலே அவங்க நல்லா செய்வாங்க... அப்படீன்னு சொல்லி வச்சுருக்கேன்" என்றார்.

இது அத்தனையையுமே அந்தப்பக்கமாக நின்று கேட்டுக் கொண்டிருக்கிறாள் ரமணி என்பது அவர்களுக்குத் தெரியவில்லை.

ஹாலின் நடுவிலே ஒரு பெரிய ஷோகேஸ் இருந்தது. அதற்கு பின்னாலே நின்று கொண்டு எல்லா விபரங்களையும் அவள் கேட்டுக் கொண்டிருந்த ரமணி, கசப்பாகப் புன்னகைத்துக் கொண்டு சமையல் அறையை நோக்கி நடந்தாள்.

ராம்பிரசாத், தரகரிடம் சொன்னார்.

"சார், சாதாரண வேலையா இருந்தா போதும் சார், ஆனால் நல்ல குணவானா இருக்கணும். இந்த நகை, ரமணியோட பிரச்னையை வச்சுகிட்டுப் பேரம் பேசறது இப்படியெல்லாம் எதுவுமில்லாம ஒரு ஆளைக் கொண்டு வாங்க சார்" என்றான்.

தரகர் ரங்கசாமி பெருமூச்சு விட்டுவிட்டுப் பிறகு சொன்னார்.

"வலை போட்டுத்தாம்ப்பா...பிடிக்கணும்" என்று!

"சரி, அப்படியாவது பிடிங்க... இந்த வலைக்கு என்ன ரேட்டு, பிடிக்கிற சர்வீஸ்க்கு என்ன ரேட்டு... எல்லாம் போட்டு வாங்கிக்குங்க" என்று அந்த

விஷயத்தை விளையாட்டாக்கிச் சிரித்தான் ராம்பிரசாத்.

ரமணி காஃபியையும் பலகாரங்களையும் கொண்டு வந்து கொடுக்க, ரங்கசாமி சாப்பிட்டு விட்டு கிளம்பினார். கிளம்புகிற நேரத்தில் "செலவுக்கு வச்சுக்கோங்க" என்று ஒரு தொகையையும் கொடுத்தான் ராம்பிரசாத்.

தரகர் ரங்கசாமி சந்தோஷமாகக் கிளம்பிப் போனார். ஆனால் அப்படிப் போவதற்கு முன்பாக எல்லாருடைய மனதிலும் பெரிய பாரத்தை ஏற்றி வைத்துவிட்டுப் போகிறோம் என்பதை அவர் உணரவில்லை.

இரவில் உறங்குவதற்குக் கொஞ்சம் நேரமாகியது.

அன்றைக்கு கொஞ்சம் லேட்டாகத் தான் எழுந்தான் ராம்பிரசாத்.

அவசரம் அவசரமாகக் கிளம்பி பைக்கை எடுத்துக் கொண்டு அலுவலகத்துக்குப் போனான். அன்றைக்கு எல்லாமே இதே நினைவே அவனுடைய மனதில் ஓடிக் கொண்டிருந்தது.

ரமணியின் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையே அவனது மனதை ஆக்கிரமித்துக் கொண்டிருந்ததால்தான் எழிலியின் வீட்டுக்குப் போன விஷயம், அங்கே படபடவென பட்டாசாகப் பொரிந்து விட்டு வந்த விஷயம்... இதெல்லாம் ஒரு ஓரத்திலே போய் ஒதுங்கிக் கொண்டது.

அம்மியே ஆடிக்காற்றுல பறக்கும்பொழுது குழவிக்கென்ன... என்று நினைத்துக் கொண்டான். கசப்பாகச் சிரித்துக் கொண்டான்.

அலுவலகத்தில்கூட அன்றைக்கு வேலை கொஞ்சம் மெதுவாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது.

மேனேஜர்கூட கேட்டார், "என்னப்பா ஆச்சு? என்ன... ஏம்ப்பா... ?" என்று கேட்டார்.

"இல்லை சார், கொஞ்சம் தலைவலி" என்றான் அவன்.

"லுக் ஹியர் மேன்... தலைவலியை வச்சுகிட்டு அரைகுறையாக செய்யறதை விட யூ பெட்டர் கோ. நாலு மணிக்கு கிளம்பு. போய் வீட்ல நல்லா ரெஸ்ட் எடுத்துட்டு நாளைக்கு காலையில ஃப்ரெஷ்ஷா வந்து சேரு" என்றார் மேனேஜர்.

அவனுக்கு வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை என்பதை எப்படி மேனேஜரிடம் சொல்வது என்று தெரியவில்லை.

சரி, நீண்ட நாட்களாக கோவிலுக்கு அழைத்துச் செல்லவில்லை என்று அம்மா குறைபட்டுக் கொண்டிருக்கிறார்... இன்றைக்கு வேண்டுமானால் அம்மாவையும் தங்கையையும் கோனியம்மன் கோவிலுக்கு அழைத்துக் கொண்டு போகலாம் என்று எண்ணிக் கொண்டு, "தேங்க் யூ சார்" என்று நன்றி சொல்லிவிட்டு நான்கு மணிக்கெல்லாம் வெளியே வந்தான்.



வெளியே வந்தவனுக்கு எதிர்பாராத ஒரு ஆச்சரியம் காத்திருந்தது.

அங்கே கேட்டுக்கு பக்கத்திலே இருந்த லாஞ்சில் எழிலியின் அப்பா அமர்ந்து கொண்டிருந்தார். இவனைக் கண்டவுடனே எழுந்து வந்தார்.

"சார், இங்கே..." என்று அவன் தடுமாற... "இல்லைப்பா... ஒரு ஃபைவ் மினிட்ஸ் மட்டும் கொடு, நான் பேசிட்டுப் போயிடறேன். நீ பதில் சொல்லணுங்கற அவசியம்கூட இல்லை. மனசுல வாங்கிகிட்டாப் போதும்" என்றார்.

அவனுக்குக் கொஞ்சம் சங்கடமாகப் போனது.

'அன்றைக்கு அவங்க வீட்டுக்குப் போய் அவரிடம் சரியாகப் பேசாமல் வந்து விட்டோமோ... சரியாக நடந்து கொள்ளவில்லையோ...' என்ற உறுத்தல் ஏற்கெனவே இருந்தது. அதனால் இப்பொழுது, 'சரி, அதனை காம்பன்சேட் செய்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது' என்று எண்ணிக் கொண்டவனாக, "சரிங்க சார், வாங்க இங்கேயே உட்காரலாம். இல்லைன்னா எதுக்க ஒரு பார்க் இருக்கு. அங்க போய் உட்காரலாம் சார்" என்றான்.

"இல்லை தம்பி... அதுக்கெல்லாம் அவசியமில்லை. நீங்க நடந்துகிட்டே வாங்க, நான் என்னோட் வண்டியை வெளியேதான் நிறுத்தியிருக்கேன். அங்க போய் ஒரு ஃபைவ் மினிட்ஸ் பேசிட்டு நான் கிளம்பிடறேன்" என்றார்.

அவர் ஏதோ ஒரு முறுக்காகவே பேசுகிறாற்போல அவனுக்குத் தோன்றியது.

'வேணும்டா... உனக்கு' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டான்.

"தம்பி, உண்மையில உங்களை நான் வரச்சொன்னப்ப... நான் கண்டிஷன் போடணும்னு இருந்தேன். 'உங்க ஃபேமிலியில உங்களுக்கு என்னென்ன கடமை இருக்குன்னு பாத்துக்குங்க, தம்பி. முதல்ல அதை முடிங்க. அப்புறம் காதலைப் பற்றிப் பேசலாம்' அப்படீன்னு சொல்றதுமாதிரிதான் நான் நினைச்சுகிட்டு இருந்தேன். ஆனா... நான் போட வேண்டிய நிபந்தனையை நீங்க போட்டீங்க. அது மட்டுமில்லாம... என் பொண்ணு அப்புறமாத்தான் சொன்னா... அவதான் ப்ரபோஸ் பண்ணியிருக்காளாம். நீங்க இன்னும் அந்த ப்ரபோஸலை முழுமையாக ஏத்துக்கலையாம். என்ன ஏதுன்னு விசாரிச்சேன். அப்புறமாத் தான் தெரிஞ்சது. உங்க வீட்ல உங்களுக்கு ஒரு தங்கை இருக்கிறாங்க அப்படீன்னு" என்றார்.

அதைக் கேட்கும்பொழுதே அவன் முகம் சுருங்கியது.

"வேண்டாம் சார், எந்த அனுதாபமும் காட்ட வேண்டாம். எங்க பிரச்னையை நாங்க பாத்துக்குவோம்" என்றான்.

"இல்லை தம்பி, பொறுங்க, பொறுங்க... நான் அனுதாபம் காட்டவோ வேறு எந்த விதத்திலேயும் உங்ககிட்டப் பேசறதுக்கோ நான் வர்ல. நான் ஒரே ஒரு விஷயம்தான் உங்ககிட்டச் சொல்லிட்டுப் போகணும் அப்படீன்னு நினைச்சேன்" என்றார்.

"அதைச் சொல்றதுக்கு முன்னாடி இன்னொண்ணையும் சொல்லிடறேன் தம்பி, உங்க தங்கை கல்யாண விஷயத்தில ஏதாவது ஹெல்ப் வேணும்னா சொல்லுங்க. நான் செய்யறேன்" என்றார்.

"என்ன ஹெல்ப்..." என்றான் அவன் ஒரு இறுக்கமான முகபாவத்துடன்.

"தம்பி, தப்பாவெல்லாம் நினைக்காதீங்க. நல்ல வரன் யாராவது நான் பார்க்கலாமா?" என்று கேட்டார்.

ஒரு நிமிடம் யோசித்தான். 'இதில் என்ன தவறு இருக்கிறது?' என்று எண்ணிக் கொண்டவன், "சார், எந்த கமிட்ஸ்மென்ட்ஸ்ஸும் இல்லாம ஒரு குடும்ப நண்பரா செய்றதா இருந்தா செய்ங்க. எனக்கு ஆட்சேபனை இல்லை" என்றான்.

அவர் முகம் மலர்ந்தது. "தேங்க்ஸ்ப்பா... குடும்ப நண்பர்னாவது ஏத்துக்கிட்டீங்களே" என்றார்.

அவன் மையமாக புன்னகைத்து வைத்தான்.

"பாருங்க தம்பி. நான் சொல்லப்போற விஷயத்தை நல்லா கேட்டுக்குங்க" என்று சொல்லிவிட்டு, ஓரிரு நிமிடங்கள் படபடவென்று பேசிவிட்டு கிளம்பினார்.

அவர் இப்படி பேசுவார் என்று அவன் எதிர்பார்க்காமல், திகைத்து நிற்கையிலேயே அவர் டக்கென்று கிளம்பிப் போய் விட்டார்.

ஓரிரு நிமிடங்கள் மலைத்துப் போனவனாக நின்றவன், ஒருவழியாகத் தேறிக் கொண்டு வண்டியை எடுத்துக் கொண்டு கிளம்பினான்.

வீட்டுக்குப் போனால் அங்கே ஒரு செய்தி காத்திருந்தது.

அந்த செய்தி தந்த உணர்விலே அன்றிரவு எழிலி அனுப்பியிருந்த ஒரு குறுஞ்செய்திக்கு அவனும் மகிழ்ச்சியுடன் ஒரு பதில் கொடுத்தான்.

ஆனால் கூடவே ஒரு நிபந்தனையும் விதித்தான்.

எழிலி அதை சுத்தமாக எதிர்பார்க்கவில்லை.





10

**பா**ரதியார் கவிதைகளில் ஆழ்ந்து போய் இருந்தான் ராம்பிரசாத்.

குறிப்பாக வசன கவிதைகளில் தன் பார்வையை ஓட்டிக் கொண்டிருந்தான். இல்லை... இல்லை... ஆழ்ந்து படித்துக் கொண்டிருந்தான்.

காற்று என்ற பகுதியிலே... இருந்த அந்த வசன கவிதை அவனை ஈர்த்தது.

இரண்டு கயிறுகள் தொங்கிக் கொண்டிருந்தனவாம்.

சணல் கயிறுகள் போல. பாரதியாரின் கற்பனை அந்த இரண்டு கயிறுகளுக்குமே காற்று உயிரூட்டுகிறாற் போல இருந்ததாம். ஒரு கயிறுக்கு கந்தன் என்று பெயர் வைத்தாராம். இன்னொரு கயிறுக்கு வள்ளியம்மை என்று பெயர் வைத்தாராம்.

இரண்டும் கணவனும் மனைவியுமாம்.

காற்று வந்து அசைக்கிறபொழுது இரண்டும் ஒன்றை ஒன்று தொட்டு உரசி சரசம் செய்து கொண்டனவாம். கயிற்றைப் பார்த்தவுடன் கூட காதல் செய்கிறாற் போல அவருக்குத் தோன்றிய விதம் பார்த்து அவனுக்குள் புன்னகை தோன்றியது.

மெல்லச் சிரித்துக் கொண்டான்.

தன்னையும் மீறி அவனுக்கு எழிலியின் நினைவு வந்தது. ஆறு மாதங்கள் ஓடியிருந்தது. எழிலியின் தந்தை தன்னை வந்து சந்தித்து விட்டுப்போய் ஆறு மாதங்கள் ஓடியிருந்தது. அன்று மாலை அவன் வீட்டுக்கு வந்தவுடனேயே வீட்டிலே அவனுக்காக ஒரு நற்செய்தி காத்துக் கொண்டிருந்தது.

"**அ**ண்ணா, உனக்காகத்தான் காத்துக்கிட்டிருக்கேன்" என்று உற்சாகமாக காத்துக்கொண்டிருக்கிற தங்கையைப் பார்த்தவுடன் அவன் மனதிலும் அந்த உற்சாகம் தொற்றிக் கொண்டது.

"என்னம்மா செம சந்தோஷமா இருக்கே... ?" என்று கேட்டான்.

"ஆமாண்ணா... சந்தோஷத்துக்கான வாய்ப்பு வந்திருக்கு... அதனால சந்தோஷமாக இருக்கேன்" என்றாள், ரமணி.

"என்னம்மா விஷயம்... ?" என்று அவள் அருகில் போய் அமர்ந்தான்.

"அண்ணா... எனக்கு கவர்மென்ட்ல வேலை வந்திருக்கு. அரசாங்க வேலை வந்திருக்கு" என்றாள் தங்கை.

"அப்படியா... வெரி குட்" என்று தன் இரு கைகளாலும் ஒரு தூக்கு தூக்கி ஒரு சுழற்றுசுழற்றி இறக்கினான். விழப் போன அவளைத் தாங்கிப் பிடித்து நிறுத்தினான்.

"அண்ணா... என்ன இது?" என்று அவள் சிரித்தாள்.

"பின்னே... எவ்வளவு நல்ல விஷயம்மா... இது?" என்று அவன் உற்சாகமானான்.

"ஆமாண்ணா... ஏதோ எங்களுக்கான கோட்டாவாம். அந்த கோட்டாவில கிளரிக்கல் ஜாப் கிடைச்சுருக்கு. அதிலேயும் இன்னொரு விஷயம் இருக்கு, தெரியுமா?" என்றாள்.

"நான் – டிரான்ஸ்பரபிள் டிபார்ட்மென்ட். டிரான்ஸ்பர் ஆகாதுண்ணா" என்றாள்.

"அப்படிப் போடு" என்று அவன் இன்னும் சந்தோஷமானான்.

அப்பாவும் அம்மாவும் வெளியே கோயிலுக்குப் போய்விட்டு, பிரசாதத்துடன் வந்தார்கள்.

"நீயும் போயிருக்கலாம்ல" என்றான் ராம்பிரசாத்.

"இல்லண்ணா, நீங்க வந்ததுக்கு அப்புறம் இந்த சந்தோஷத்தைப் பரிமாறிக்கிட்டு அப்புறமாத்தான் போகணும் அப்படீன்னுதான் நினைச்சேன்" என்றாள் தங்கை.

"நல்லதும்மா..."

"ஆனா அம்மா... 'அதுக்குள்ள பக்கத்துத் தெருவில இருக்கிற கோவிலுக்குப் போயிட்டு வந்துடுறேன்டி... அப்புறமாக வேற ஏதாவது கோவிலுக்குப் போகலாம்'னு சொன்னாங்க" என்றாள் தங்கை.

"ஒகே அம்மா, நீ எந்தக் கோவிலுக்கு போகலாம்னு சொன்னாலும் போகலாம்" என்று டாக்ஸியை வரவழைத்து பெற்றோருடன் போய் விட்டு வந்தான்.

ஒருவகையில் அவனுக்கு அந்தச் செய்தி மனதுக்கு நிறைவைத் தந்தது. ஏனென்றால் பெற்றோர்களுக்குப் பிறகு என்னதான் தான் பார்த்துக் கொண்டாலும் அவளுக்கென்று ஒரு வருமானம் இருந்தால் அது நல்லதல்லவா? திருமணச் சந்தையில் அது இன்னும் ஒரு கூடுதல் பிளஸ் பாயின்ட் அல்லவா? என்றெல்லாம் எண்ணம் ஓடியது.



**வே**லைக்குப் போய்விட்டு வந்த தங்கையினுடைய வருவாயை அவர்கள் அப்படியே தான் சேமித்தார்கள். அவன் கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

முதல் மாதம் மட்டும் அவள் விருப்பப்படி பெற்றோர்களுக்குத் துணிமணி, தனக்கும் துணிமணி, பலகாரங்கள் என்று வாங்குவதற்கு அனுமதித்தான்.

அதற்குப்பிறகு அம்மா அப்பாவுடன் அமர்ந்து பேசி அவளுடைய தொகை அவளுடைய பெயரிலேயே சேமிப்பாக இருந்தது.

அவர்களுடைய இல்லம் ஒன்றும் வசதியில் குறைந்த இல்லம் அல்ல.

அப்பா சொந்தத் தொழில் செய்து வந்திருந்தார். காட்டன் மில் தொடர்பாக ஏதோ பொருட்கள் வாங்கி விற்பது போல ஏதோ தொழிலில் இருந்தார். நல்ல லாபமும் கிடைத்தது. அதனால் அவர்கள் வாழ்க்கை வசதியாகத் தான் போய்க்கொண்டிருந்தது.

இறைவன் எல்லோருக்கும் ஏதோ ஒரு குறையை வைத்து விடுகிறான் இல்லையா... அதுபோல அவர்களுக்கு ரமணியினுடைய ஊனம் நெருடலாகவே இருந்தது.

மூவருமே அதை ஒரு குறையாக நினைக்காமல் வாழ்வதற்கு பழக்கிக் கொடுத்தார்கள். என்றாலும் இந்த திருமணப் பேச்சு வரும்பொழுது அது ஊவா முள்ளாக உறுத்திக் கொண்டுதான் இருந்தது. இப்பொழுது அதை நினைத்துப் பார்த்துக் கொண்டான் ராம்பிரசாத்.

தங்கைக்கு வேலை கிடைத்த அன்றைக்கு இரவு எழிலியிடம் இருந்து ஃபோன் வந்தது. ஏதோ நல்ல மூடில் இருந்ததால் என்னமோ அந்த தொலைபேசிக்கு மறு அழைப்பு கொடுத்தான்.

"ராம்பிரசாத், சாரி... நான் டிஸ்ட்ரப் பண்றேனா..." என்றாள் அவள்.

"இல்லை... இல்லை... பரவாயில்லை... சொல்லு" என்றான் அவன்.

"எங்க அப்பா வந்து உங்களை மீட் பண்ணினாராம். எனக்குத் தெரியாது. வந்து உங்களைப் பார்த்துட்டு வந்ததுக்கப்பறமாத்தான் சொன்னாரு" என்றாள் அவள்.

"ஒகோ... என்ன சொன்னாரு?" என்று கேட்டான்.

"சொன்னாரு..." என்று இழுத்தாள்.

"அப்புறம் என்ன? அதேதான்" என்றான் அவன்.

"ராம்பிரசாத். உங்களுக்கு மேட்டர் புரியுதா?" என்று கேட்டாள்.

"என்ன புரியணும்?" என்றான் அவன் சற்று விறைப்பாகவே.

அவன் அப்படி விறைப்பாகப் பேசுவது கஷ்டமாக இருந்தாலும் வாழ்க்கைப் பிரச்னை என்பதால் பொறுத்துக் கொண்டுதான் ஆகவேண்டும் என்று எண்ணியவளாக, "இல்லை... நான் எங்கப்பாகிட்ட சொல்லிட்டேன். எத்தனை காலமானாலும் ராம்பிரசாத்தைத்தான் கல்யாணம் பண்ணுவேன் அப்படீன்னு... அப்பாவும் அதை ஒத்துக்கிட்டாங்க. அவர் நினைச்சிருக்காரு... தானே வந்து அதைச் சொன்னா... ஒருவேளை உங்களுக்கு நம்பிக்கை வரும். பெற்றோர்களே பெண்ணைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்களே... அப்படீங்கற நம்பிக்கை வரும்னு நினைச்சிருப்பார் போலிருக்கு" என்றாள்.

ஆதங்கத்தோடு அவள் பேசுவதைக் கேட்டவுடன் அவன் மனமும் நெகிழ்ந்தது. அவள் சொல்லுவதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டான். அன்றைக்கு தங்கைக்கு வேலை கிடைத்த மகிழ்ச்சியில் இருந்ததாலோ என்னவோ... அவனும் சற்று இறங்கி வந்தான்.

"ஒகே... ஒகே... எழிலி... நீ இவ்வளவு எக்ஸ்பிளெயின் பண்ண வேண்டாம். எனக்குப் புரிஞ்சுது. ஆனால் என் நிலைமையும் உங்களுக்குப் புரியும் என நினைக்கிறேன்" என்றான் வருத்தத்துடன்.

"புரியுதுங்க. கண்டிப்பா புரியுது... என்னால உங்களுக்கு எந்த இடைஞ்சலும் வராது" என்றாள் அவள்.

"தட்ஸ் ரியலி குட் எழிலி... இன்னொரு விஷயம் தெரியுமா?" என்றான்.

"சொல்லுங்க..." என்றாள் அவள்.

"நல்ல விஷயம் தான். ரமணிக்கு கவர்ன்மெண்ட் ஜாப் கிடைச்சுருக்கு" என்று தன் வீட்டு விஷயத்தையும் அவளிடம் பகிர்ந்து கொண்டான்.

எழிலியின் உள்ளம் துள்ளியது. ஏனென்றால் முதன்முறையாக இயல்பாக தன்னிடம் பேசுவதோடு தனது குடும்பத்து விஷயத்தையும் கூட தன்னுடன் பகிர்ந்து கொள்கிறானே என்று அவளுக்கு மகிழ்ச்சி பொங்கியது.

"ரியலி... எனக்கு அவங்களை பழக்கமில்லை. என் சார்பா அவங்களுக்கு கங்கிராட்ஸ் சொல்லிருங்க" என்றாள் அவள்.

"ஆமாம். வேறு வினையே வேண்டாம்" என்று சிரித்தான்.

"ஏன்... ஏன் அப்படிச் சொல்றீங்க?" என்றாள் அவள்.

"மக்கு. இந்த மாதிரி எழிலி... அப்படீன்னு ஒரு பொண்ணு. கங்கிராட்ஸ் பண்ணினான்னு சொன்னா... அவ சும்மா இருப்பாளா... யார் அந்த எழிலி...



அப்படீன்னு ஆரம்பிக்க மாட்டா... பிறகு அது அப்படியே போயி... வேண்டாம் அம்மணி... எதுவும் வேண்டாம். அதுமட்டுமில்லை... என் தங்கை ஓவர் சென்சிடிவ். இப்பவே என்னமோ அவளால நிறைய தடைகள் இருக்கிற மாதிரி... என் கல்யாணம் பாதிக்கப்படும்னு அம்மாகிட்ட புலம்பிக்கிட்டிருக்கா... இதவேற நான் சொன்னேன்னு வச்சுக்கோ..." என்றான்.

அவன் அப்படி இயல்பாக பேசியது அவளுக்கு இன்னும் மகிழ்ச்சியைத் தந்தது.

"அப்படீன்னா சரி. சொல்ல வேண்டாம். ஆனால் எனக்கு ரொம்ப சந்தோஷங்கறதை நீங்க புரிஞ்சுகிட்டீங்கன்னா சரி" என்றாள்.

அந்தப் பெண் அவ்வளவு இறங்கிப் பேசுவது அவனுக்கு கொஞ்சம் தைத்தது போலும்...

"இங்க பாரு எழிலி... நான் ஒண்ணு சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்லுங்க" என்றாள் அவள் ஆர்வமாக.

"எனக்கு எல்லாமே புரிஞ்சுதான் இருக்கு. தெரிஞ்சுதா... நீ முதன் முதலா எங்கிட்ட சொன்னியே... அப்ப இருந்து எனக்கு எல்லாமே புரிஞ்சுதான் இருக்கு. ஆனா என்னைத்தான் நீ இன்னும் புரிஞ்சுக்கலை" என்றான்.

"என்ன புரிஞ்சுக்கணுமாம்?" என்றாள் அவள் செல்லக் கோபத்துடன்.

"இதை வேற நான் கோனார் நோட்ஸ் போட்டு விளக்கணுமாக்கும்" என்று அவன் கிண்டலாகச் சிரிக்க... அவள் மகிழ்ந்து கொண்டாள்.

"போதும், போதும். கிண்டல் பண்ணாதீங்க" என்றாள்.

"சரி, சரி. இப்போதைக்கு அதை மட்டும்தான் பண்ண முடியும். ம்... பை தி பை... இப்படியெல்லாம் பேசறேன்னு தினம் அரை மணிநேரம் கூப்பிடாதே. ஒன் ஃபார்ட்டி ஃபோர்... ஒன் பார்ட்டி ஃபோர் தான். கொஞ்ச நாளைக்கு. ஒரே ஒரு சலுகை மட்டும் தந்துக்கலாம்" என்றான்.

அவள் ஆர்வத்துடன், "சொல்லுங்க அது என்னது?" என்றாள்.

"காலையில ஒரு குட்மார்னிங் மெசேஜ் குடுத்துக்கலாம். நைட் ஒரு குட்நைட் மெசேஜ் குடுத்துக்கலாம். அதுக்கு மேல இப்ப எதுவும் வேண்டாம். புரியுதா?" என்றான்.

அவள் முகம் வாடி விட்டது.

சற்று நேரம் அமைதி நிலவியது அந்தப்பக்கம். அப்பொழுது தான் ராம்பிரசாத், குழைந்த குரலில் சொன்னான்.

"எழிலி! நல்லா யோசிச்சுப் பாரு. இப்படியெல்லாம் சொல்றது எனக்கு எப்படி வலிக்கும்னு யோசிச்சுப் பாரு. நான் உன்னைக் கட்டுப்படுத்தலை எழிலி. என்னையே கட்டுப்படுத்திக்கிறேன். எனக்கும் உன்னைப் புடிக்குது. ஆனா இப்போ அதை வெளிப்படுத்தினா எத்தனையோ பிரச்னைகள் வரும் எழிலி... ரமணிக்குன்னு ஒரு லைஃப் அமைகிற வரைக்கும் நீயும் நானும் பேசிக்க வேண்டாம். சந்திக்க வேண்டாம், புரியுதா?" என்று கேட்டான்.

புரியுதா என்று கேட்ட குரலிலேயே... ஏக்கம் விரவி இருப்பதை அவளால் உணர முடிந்தது. "எனக்கு சந்தோஷமாக இருக்குது" என்றாள்.

"என்ன... பேச வேண்டாம்னு சொன்னேனே... அதா...?" என்றான் அவன் கடுப்பாக.

"இல்லை" என்று கூறிவிட்டு கலகலவென்று சிரித்தாள்.

"சிரிக்காதே. கடுப்பேத்தாதே..." என்று அவன் கோபிக்க... அவள் மறுபடியும் சிரித்தாள்.

பிறகு சொன்னாள். "அங்கேயும் நிலைமை அப்படித்தான் இருக்குன்னு எனக்குத் தெரிஞ்சுதில்லை... அது ஒண்ணே போதும்" என்றாள்.

"எங்கே... என்ன நிலைமை?" என்று கேட்டதற்குப் பிறகுதான் ராம்பிரசாத்துக்குப் புரிந்தது. தன்னுடைய கட்டுப்பாட்டையும் மீறி தன்னுடைய மனப்போக்கு எப்படி இருக்கிறது என்பதை வெளிப்படுத்தி விட்டோம் என்பது புரிந்தது.

"ஓ..." என்றான் இறங்கிய குரலில்.

"என்ன ஓ... டபுள்யூ... எக்ஸ்...ஒய்... இசட்... மாட்டிக்கிட்டீங்களா" என்று அவள் சிரித்தாள்.

"ரொம்ப பெருமையாக்கும்" என்றான் அவன் பொய்க் கோபத்துடன்.

"பின்னே... இப்ப நான் என்ன தெரியுமா பண்ணிகிட்டிருக்கேன். இங்க இல்லாத காலரை தூக்கி விட்டுகிட்டு இருக்கேன்" என்றாள்.

அவன் அந்தப்பக்கம் சிரித்தான்.

"போதும் எழிலி. இனிமேல்கொண்டு பேசாதே. அப்புறம் மனுஷன் தூங்க முடியாது. ஒகே...வா... ? இன்னைக்கு ஒரு சந்தோஷம் போதும். ரமணிக்கு வேலை கிடைச்ச சந்தோஷம்" என்றான்.

"ஓகே. ஓகே. குட்நைட்" என்றாள் அவள்.

"எங்கே போயி குட்நைட்" என்று அவன் சலித்துக் கொள்ளவும் "ஏன், சந்தோஷமான நியூஸ் தானே... அப்ப நிம்மதியா தூங்கணும் தானே..." என்றாள் அவள்.

இப்பொழுது அவளது குரலில் கொஞ்சம் உரிமை தொனித்தது.

"ரமணி மேட்டர் சந்தோஷமான விஷயம் தான். ஆனால் உங்கிட்ட உளறிக் கொட்டி கிளறி மூடி... அம்மணிவேற இன்னைக்கு கலகலவென்று சிரிச்சிருக்கீங்க... ஒகே...ஒகே. குட்நைட்" என்று அவன் ஃபோனை ஆப் செய்தான்.

அதற்குப் பிறகு சற்று நேரம் கையிலே பிடித்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். எழிலியும் அந்தப்பக்கம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

இன்னும் எத்தனை காலம்...?.ஆறு மாதமா... ஒரு வருஷமா? தெரியவில்லையே என்று அவள் நினைத்துக் கொண்டிருந்தாள் என்றால்... இவனும் அதே சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

அது நிகழ்ந்து இன்றைக்கு ஆறு மாதம் ஆகியிருந்தது.

இன்னமும் எல்லாமே கிணற்றில் போட்ட கல்லாகத்தான் இருந்தது.

தரகர் ரங்கசாமி வரனுக்கு மேல் வரன் கொண்டு வருகிறார். எல்லா வரன்களும் பணத்திலேயே குறியாக இருக்கிறார்கள். இப்பொழுது அரசு வேலை வேறு சேர்ந்து கொண்டதால் பெற்றோர்களும் அவனும் இன்னும் எச்சரிக்கையாக பார்க்க வேண்டியதிருந்தது. அந்த தேடலிலும் அந்த வருத்தத்திலும் அன்றைய எழிலியின் சிரிப்பு ஏற்படுத்திய தாக்கம் உள்ளே உள்ளே போய்க்கொண்டே இருந்தது.

இனி வருங்காலத்தில் நிகழப்போகிற பெரிய மாற்றம் என்னவென்று... அப்பொழுது அவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.




ரமணி அன்றைக்கு ஏனோ பரபரப்பாக நடமாடிக் கொண்டிருந்தாள்.

'ரிலிஜியஸ் – ஹாலி டே' என்கிற முறையிலே நவராத்திரிக்காக விடுமுறை வாங்கி இருந்தாள்.

ஒரு நாள் விடுமுறை.

அவர்கள் வீட்டில் கொலு வைப்பதில்லை என்றாலும் மாலை நேரங்களிலே விக்ரகங்களுக்கு சுண்டல் வைத்து வழிபடுவார்கள். அதற்காகப் பரபரப்பாகச்

செய்கிறாள் என அம்மாவுக்கே கூட ஆச்சரியமாக இருந்தது.

பொய்யாமொழிகூட மனைவியிடம் கேட்டார். "ஏய்... ராஜேஸ்வரி...! என்ன உம் பொண்ணு இன்னைக்கு ரொம்ப உற்சாகமாக இருக்காப்ல..." என்று.

"தெரியலைங்க..." என்றார் ராஜேஸ்வரி.

"ஏன், ராஜேஸ்வரி. இப்ப வேலைக்குப் போனதுக்கப்பறம் அவளுக்கு ரொம்ப கான்ஃபிடன்ஸ் வந்திருக்கு... இல்லை? என்ன இருந்தாலும் ஒரு சுயசம்பாத்தியம் இருந்தா பெண்களுக்கு அது ஒரு சப்போர்ட் தான்" என்றார் பொய்யாமொழி.

"அது சரிதானுங்க. இன்னும் சம்பளம் பூராவையும் பிடுங்கிகிட்டு பஸ்சுக்காக காசு கொடுத்து அனுப்பறதும் இருக்கு" என்றார் ராஜேஸ்வரி.

"ஏய், எப்பவும் நெகடிவாவே பேசுவியா...? இதெல்லாம் அந்தப் பொண்ணு கொடுக்கிற இடத்தைப் பொறுத்து. ஒண்ணு... முதல்ல இருந்தே எப்படி கரெக்ட் பண்ணணுமோ அப்படிப் பண்ணிக்கோணும்" என்றார் பொய்யாமொழி.

அதற்குள்ளாக அந்தப் பக்கமாகப் போன ரமணியை அழைத்து, "என்னம்மா ரமணி... என்ன விசேஷம்? ஏதாவது ஸ்பெஷலா தயாராகுதா?" என்று கேட்டார்.

"இல்லைப்பா... இன்னைக்கு லீவா இருக்கிறதுனால... எனக்கு குலோப் ஜாமுன் செய்யலாம்னு தோணிச்சு. அதான் பண்ணிகிட்டு இருக்கேன். கொஞ்சமா ஓட்டுப் பக்கோடா போடலாம்னு ஓட்டுப் பக்கோடா போடறேன்ப்பா... இந்த ஆட்டி அரைக்கிற வேலையெல்லாம் இல்லாம ஈசியா செய்யலாம்ல... அது மாதிரி செய்யறேன். ஆற அமர இந்த மாதிரியெல்லாம் செஞ்சு கொடுத்து ரொம்ப நாளாச்சுல்ல அப்பா" என்றாள்.

"அப்படிப் போடு. இன்னைக்கு நல்லபடியா பலகாரம் கிடைக்கும்னு சொல்லு. கொஞ்ச நாளாம்மா... மத்தியானம் சாப்பிடும்பொழுது..." என்று இழுக்க...

ராஜேஸ்வரி முறைத்தாள்.

உடனே பொய்யாமொழி, "நீ இல்லையேன்னு நினைச்சுட்டேம்மா..." என்று கதையை மாற்றி விட்டார்.

ராஜேஸ்வரிக்கே சிரிப்பு வந்தது.

ரமணியின் பின்னேலாயே போய் அவள் குலோப் ஜாமுனுக்கு மாவை உருட்டும்பொழுது மெல்லிய குரலில் சொன்னார்.



"என்ன இருந்தாலும் உன் சமையல் மாதிரி இல்லைன்னு சொன்னா உங்க அம்மாவுக்குக் கோபம் வரும்ல... அதுக்குத் தான்" என்றார் பொய்யாமொழி.

"அப்பா, நீங்க பயங்கரமான ஆளுப்பா... நான் இல்லாதப்போ நீங்க அம்மாகிட்ட என்ன சொல்வீங்கன்னு தெரியுமா... இன்னும் உன்னோட அனுபவம் ரமணிக்கு வரலைன்னு சொல்வீங்க. எனக்குத் தெரியாதாப்பா... உங்களைப் பற்றி..." என்றாள்.

பொய்யாமொழி கலகலவென்று சிரித்தார்.

"காலத்தை அப்படித்தாம்மா ஓட்டணும். இப்போ சயின்டிபிக்காவே என்ன சொல்றாங்கன்னு தெரியுமா, நிறைய விஷயங்கள்... இப்ப ஆன்மீகமும் சயின்ஸும் ஒண்ணாப் போயிட்டு இருக்கு. எண்ணங்களுக்குப் பவர் இருக்கு; எண்ணங்களுக்கு சக்தி இருக்கு... அப்படீங்கறதை இப்ப சயின்ஸ் ஏத்துக்குது. அது பற்றி இப்ப நிறைய ரிசர்ச் எல்லாம் நடந்துகிட்டிருக்காம்மாம்... இன்னும் கொஞ்ச நாள்ல வந்துரும் அப்படீங்கறாங்க..."

"அது சரி, எதுக்கு இப்ப இதையெல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கீங்க... ? ஏம்ப்பா..." என்று சிரித்தாள் ரமணி.

"இல்லைம்மா... யார் சமையல் செய்யறாங்களோ... அவங்களைக் கோபப்படுத்தக் கூடாது. அவங்க கோபமா சமையல் செஞ்சாங்கன்னு வையேன்... அந்த சாப்பாட்டை நாம சாப்பிட்டா அன்னைக்கு முழுக்க... நம்மளுக்கும் அதே மாதிரி கோபம் வருமாம்" என்றார்.

இவர்கள் குசுகுசுவென்று பேசிக்கொண்டிருப்பதைக் கேட்டு அங்கே வந்தான் மகன். ரமணி வீட்டில் இருக்கிறாள் என்றவுடன் அவனும் அன்றைக்கு விடுமுறை போட்டு விட்டான்.

"ஞாயிற்றுக்கிழமைன்னு வீட்ல இருந்தா அயர்ன் பண்ற வேலை... அந்த வேலை இந்த வேலைன்னு... நீ சிக்கறதே இல்லை. அதனால இன்னைக்கு உங்கிட்ட ஃப்ரீயாப் பேசிக்கிட்டு இருக்கலாம் அப்படீங்கற முடிவிலதான் நான் இன்னைக்கு லீவு போட்டுட்டேன்" என்று சொன்னான் ராம்பிரசாத்.

ரமணி மகிழ்ச்சியாகச் சிரித்தாள்.

"அது சரி, இன்னைக்கு என்ன குடும்பத் தலைவர், கிச்சன்ல வந்து என்ன மந்திரம் ஓதிக்கிட்டு இருக்காரு" என்று கேட்டான் ராம்பிரசாத்.

பொய்யாமொழி அசடு வழிய மகளைப் பார்த்தார்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லைண்ணா... அப்பா சொல்லிக்கிட்டு இருக்காரு, எண்ணங்களுக்கு சக்தி இருக்குதாம். இப்போ சமையல்

பண்றவங்களைக் கோபப்படுத்தக் கூடாதாம். அவங்க கோபமாக சமையல் செஞ்சா அந்த எனர்ஜி வந்து அந்த சாப்பாட்டுல இறங்குமாம்...” என்று இழுக்க...

“தெரியலைம்மா... இப்ப சயின்ஸ்லயும் எனர்ஜிங்கறதை ஒத்துக் கறாங்க,ஆன்மீகத்துலயும் சொல்றாங்களே. நிறைய விஷயங்கள் இதுல ஒத்துப்போகிற மாதிரிதான் இருக்கு” என்று அவனும் சீரியஸாகச் சொன்னான்.

“கேட்டியா, கேளு. நான் சொன்னதைத் தான் அவனும் சொல்றான்” என்றார் பொய்யாமொழி.

“அது சரி. இப்ப எதுக்கு இதெல்லாம்... நீ செய்யற குலோப் ஜாமுனையும் ஒட்டுப் பக்கோடாவையும் சந்தோஷமாச் செய்வீயாம். அதனால நாங்க ரெண்டு பேரும் பக்கத்துல உட்காந்து உதவி செய்வோமாம்” என்றார் அப்பா.

“விடிஞ்சுது... உதவியா செய்வீங்க... அவளுக்கு சந்தேகம் வந்துரும். அப்புறம் சக்கரை போட்டோமா, போடலையா – அப்படீன்னு. இப்படி வருவீங்களாம். அவளை நிம்மதியா விட்டா அவபாட்டுக்கு செய்வா...” என்றார் அம்மா இடையிலே நுழைந்து.

ஆண்கள் இருவரும் சிரித்துக் கொண்டே வெளியே வந்தார்கள்.

பொய்யாமொழி தன் மனைவியிடம் பகிர்ந்து கொண்ட அதே கருத்தை ராம்பிரசாத்திடமும் பகிர்ந்து கொண்டார்.

“ஏம்ப்பா... இப்ப வேலைக்குப் போகவும் ரமணிக்கு மனசுல கொஞ்சம் தெம்பு வந்தமாதிரி இருக்கு இல்லை...” என்றான் ராம்பிரசாத்.

“ஆமாம்ப்பா... உண்மையாகவே கான்ஃபிடன்ஸ் வந்திருக்கு” என்றார் அப்பா.

“அது மட்டுமில்லைப்பா... இந்த ஒரு மாசமா... இன்னும் கொஞ்சம் தெளிவா இருக்கிற மாதிரி இருக்கு” என்றான்.

“இருக்கட்டும்பா... வெளியுலக அனுபவம் வருது. நாலு பேரை சந்திக்கிறா... வீட்டுக்குள்ளேயே அடைஞ்சிருந்தா அது வேற மாதிரியா இருக்கும். வெளியில போய் நாலு பேரைப் பார்த்துட்டு... வெளியுலகத்திலே இருந்தா அது வேறுமாதிரியாத்தாம்பா இருக்கும்” என்றான் ராம்பிரசாத்.

“அது என்னமோ உண்மை தானப்பா...” என்று சிரித்தார் அப்பா.

ரமணி குலோப்ஜாமுனை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு



யோசித்தாள். 'இப்ப சொல்லலாமா... இல்லை... இதையெல்லாம் கொடுத்து விட்டுச் சொல்லலாமா... எதுக்கும் சொல்லிவிடுவது நல்லது' என்றுதான் யோசித்துக் கொண்டிருந்தாள். ஆனால் மாலை வரைக்கும் அவளுக்கு சொல்வதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லை.

சொல்லுவதற்கு வாய்ப்பு கிடைக்கவில்லையோ... அல்லது சொல்வதற்கு அவளுக்குத் துணிவு வரவில்லையோ... என்னவோ... தயங்கிக் கொண்டே இருந்தாள்.

மாலை 5 மணி இருக்கும்.

குடும்பம் முழுவதும் ஒன்றாக அமர்ந்து பேசிக்கொண்டே இருந்தார்கள். அந்த நேரத்திலே வீட்டுக்கு முன்னாலே யாரோ வந்து நிற்பது போல இருந்தது.

யார் என்று எழுந்து போய் பார்த்தான் ராம்பிரசாத்.

அங்கே சற்றும் எதிர்பாராத ஒருவர் நின்று கொண்டிருந்தார்.

“நீங்க...” என்று அவன் இழுக்க...

“நான் தியாகு. உள்ளே வரலாமா?” என்று கேட்டான், அந்த இளைஞன்.

சட்டென்று அவனுக்கு நினைவுக்கு வந்தது.

“நீங்க... ஓ ... நீங்க...” என்று அவன் இழுக்க...

“உள்ளே போய் பேசுவோமா...” என்று அவன் உள்ளே வந்தான்.

தந்தையைத் திரும்பிப் பார்த்தான் ராம்பிரசாத்.

ரமணி சட்டென்று எழுந்து, “உட்காருங்க” என்றாள்.

பொய்யாமொழியும் ராஜேஸ்வரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு மறுபடியும் திரும்பி மகனைப் பார்த்தார்கள்.

“ரமணி, முதல்ல... டிஃபன் கொண்டு வாம்மா...” என்றான் ராம்பிரசாத்.

அந்த இடைவெளிக்குள்ளாக தியாகு பேச ஆரம்பித்தான்.

உள்ளே குலோப்ஜாமுனையும் சூடான அந்த ஒட்டு பக்கோடா வையும் ஒரு தட்டிலே வைத்துக் கொண்டிருந்த ரமணிக்கு சிந்தனை இரண்டு மாதங்களுக்கு முன்னாலே ஓடியது.

இப்படித்தான் ஒருநாள் !

அலுவலகத்திலே ஏதோ ஒரு ஃபைலை எடுத்துக் கொண்டு போய், இன்னொரு டேபிளில் கொடுத்து விளக்க வேண்டியதிருந்தது. விளக்கி விட்டுத் திரும்பி தன்னுடைய இருக்கைக்கு வந்தவள்... சற்றுத் தள்ளி நின்று

கொண்டிருந்த அந்த இளைஞனைப் பார்த்தாள். எங்கேயோ பார்த்தமாதிரி இருந்தது.

மறுபடியும் திரும்பிப் பார்த்தாள்.

அவனும் அதே நேரத்தில் திரும்பிப் பார்த்தான்.

அவளுக்கு நினைவுக்கு வந்து விட்டது.

முதன்முதலாக அவளைப் பெண் பார்க்க வந்த இளைஞன் அவன். அவளைப் பார்த்தவன் அவளது டேபிளை நோக்கி வந்தான்.

ரமணிக்கு இப்பொழுது அலுவலகத்தில் பலரையும் சந்தித்துப் பேசுவது பழக்கமாகி இருந்தாலும்கூட, இவர் எதற்காக இங்கே வருகிறார் என்ற எண்ணம் தோன்றியது.

அவள் எதிரிலே போய் அவன் நிற்கவும், "உட்காருங்க" என்றாள் அவள். எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தான்.

"சாரி, மேடம்" என்றான் அவன்.

"எதுக்கு... ?" என்றாள்.

"அதுக்கு முதல்ல... நீங்க இங்க வேலைக்கு சேர்ந்திருக்கீங்களா..." என்று கேட்டான்.

"ஆமாம். சிக்ஸ் மன்த் ஆச்சு" என்றாள் அவள்.

"மேடம், ஐ ஆம் ஃவெரி சாரி. என்ன நடந்துச்சுன்னா... எங்க அம்மா அப்பாவுக்கு தகவல் சொல்லலைன்னு கோபம். ஒருவேளை முதல்லேயே சொல்லியிருந்தா... இந்த விஷயம் செட்டிலானாலும் ஆகியிருக்கலாம். இந்த தரகர் சொல்லாததுனால... எனக்கும் மேற்கொண்டு பேசமுடியாமல் போச்சு" என்றான் அவன்.

அவள் ஒன்றும் பேசவில்லை.

"உங்களுக்கு... ?" என்று அவன் இழுக்க...

அவள் தலையைக் குனிந்து கொண்டு, "இல்லை" என்றாள்.

"எனக்கும் ஆகலை. என்னமோ தெரியலை. நான் அந்தப் பிரச்னைக்கு அப்புறமா எந்தப் பெண்ணையும் பார்க்க வேண்டாம் அப்படீன்னு சொல்லிட்டேன். எங்கேயாவது உங்களை சந்திக்க முடியுமான்னு நினைச்சு கிட்டு இருந்தேன். உங்க வீட்டுக்கு மீண்டும் வந்தால் நல்லாயிருக்காது. அதனால வர்லை... பாத்தீங்களா... கடவுள் நம்மளை மறுபடியும் சந்திக்க வச்சுட்டான்" என்றான் அவன்.



அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

'எதுக்காக சந்திக்க நினைச்சீங்க...?.சாரி சொல்றதுக்குத்தானே...?' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டாள்.

அதைப் படித்து விட்டவன் போல அவன் சொன்னான்.

"வெறும் 'சாரி' சொல்றதுக்காக இல்லை மேடம். மனதார வருத்தம் தெரிவிக்கறதுக்காகத் தான் உங்களை சந்திக்க நினைச்சேன். ஆனா... ஏதோ ஒரு நெருடல் மட்டுமல்ல... உங்க நினைப்பு என் மனசுல இருந்துகிட்டே தான் இருக்கு. நான் இப்படி சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க... உங்களை என்னால மறக்க முடியலை" என்றான்.

"சார் ப்ளீஸ். ஆபீஸ்ல வச்சு இதையெல்லாம் பேச வேண்டாம். உங்களுக்கு ஏதாவது பேசணும்னு இருந்தா... நீங்க... ஓ... நீங்கதான் வேண்டாம்னு சொல்லிட்டுப் போயிட்டீங்களே..." என்று முடிக்காமல் அவள் நிறுத்தினாள்.

அவன் வருத்தத்துடன் அவளைப் பார்த்தான்.

"ரமணி மேடம்! உங்களுக்கு வேலை கிடைச்சுருக்கு என்பதுல ரொம்ப சந்தோஷம். நான் ஒண்ணு சொல்லட்டுங்களா... ?" என்று கேட்டான்.

அவள் மௌனமாக அவனைப் பார்த்தாள்.

"உங்களுக்கு வேலை கிடைச்சுருக்குங்கறதுனால ஒருவேளை என்னோட பேரண்ட்ஸ் சம்மதிக்கக் கூடும்..." என்று இழுத்தான்.

"எதுக்காக... என் வேலைக்காகவா... ?" என்று கேட்டாள் கோபமாக.

அவன் கோபப்படவில்லை. மாறாக அவன் பொறுமையாகச் சொன்னான்.

"ரமணி மேடம்! கொஞ்சம் யோசிச்சுப்பாருங்க... எந்த பேரன்ட்ஸ்சும் தங்களோட குழந்தைக்கு எல்லாவிதத்திலும் நல்லபடியா இருக்கிற ஒரு பொண்ணையோ பையனையோதான் கல்யாணம் பண்ணி வைக்கணும்னு நினைப்பாங்க. உங்களுக்கு இந்தமாதிரி ஒரு குறை இருக்கிறது ஒண்ணும் தப்பில்லை. அதுக்காக உங்களுக்கு அனுதாபம் காட்டறேன்னு சொல்ல மாட்டேன். ஆனா... அதே நேரத்துல எங்க பேரண்ட்ஸ் அப்படி ஆசைப்பட்டதுல என்ன தப்பு? சொல்லுங்க" என்றான்.

அவனுடைய அந்த நியாயமான வாதத்தைக் கேட்டவுடன் அவளால் ஒன்றும் பேசமுடியவில்லை.

"நான் யாரையும் தப்பு சொல்ல முடியாது, சார்" என்றாள்.

"இப்ப ஏன் மறுபடியும் ஆண்டவன் உங்களை சந்திக்க வச்சுருக்

காண்கிறத யோசிங்க. எனக்கென்னமோ இது நல்லதுக்குன்னு தோணுது. அவசரப்பட வேண்டாம். ஒரு டென் டேஸ் டைம் எடுத்துக்குங்க. யோசிங்க. இப்ப உங்களுக்கு வேலை இருக்குங்குற ஒரு பிளஸ் பாயிண்ட்டை வச்சுட்டு பேரண்ட்ஸ்கிட்ட பேச முடியும். இதுதாங்க வாழ்க்கை. இதுதான் நிதர்சனம். லட்சியம் பேசிக்கிட்டு இருக்க முடியாது. எனக்கு உங்களைப் பிடிச்சுருக்கு. அவங்களை கன்வின்ஸ் பண்றமாதிரி பாயின்ட்ஸ் கிடைக்கலை. இப்ப கிடைச்சுருக்கு.

எங்களுக்கு வசதி இருக்கு. இருந்தாலும் நான் பிரைவேட் கம்பெனியில தான் ஒர்க் பண்றேன். உங்களுக்கு கவர்ன்மென்ட் ஜாப் இருக்கு. நாளைக்கு லைஃப்ல... ஏதும் பிரச்னை இருக்காதுன்னு நான் பேச முடியும்'' என்றான்.

''இல்லைங்க. இது ஏதோ பேரம் பேசற மாதிரி இருக்கு'' என்றாள் அவள்.

''இது பேரம் மாதிரி தான்... இல்லை... பேரமே தான்னு வச்சுக்குங்க. ஆனா இந்த பேரத்துக்குப் பின்னால ஒரு முக்கியமான விஷயம் இருக்கு ரமணி மேடம்'' என்றான்.

அவள் அவனைப் பார்த்தாள். என்ன சொல்வதென்று தெரியாமல் அமைதியாக அமர்ந்து கொண்டாள்.

''என்னைக்கு உங்களப் பெண் பார்த்துட்டு வந்தேனோ... அன்னையில்இருந்து நீங்க டிஸ்ட்ர்ப் பண்ணிகிட்டுத்தான் இருக்கீங்க. உங்களுடைய பொறுமை.. அழகு... குணம் பற்றியெல்லாம் தாகர் ரொம்ப விரிவா சொல்லி இருந்தாரு. இதெல்லாம் மனசுல பதிஞ்சு போய் கிடந்தது. ஆனால் ஒருவிதமான கையாலாகாத் தனத்தாலதான் இருக்கேன். என்னால முடிஞ்சது... வேற பொண்ணு பார்க்காதீங்கன்னு பிடிவாதம் பிடிச்சது தான். இப்பவரைக்கும் அந்த பிடிவாதத்தில நிற்கிறேன். ஒருவேளை அதனாலேயாவது எங்க பேரண்ட்ஸ் ஒத்துக்கலாம் இல்லையா...'' என்று கேட்டான்.

'தெரியலையே' என்பது போல அவள் தோளைக் குலுக்கினாள்.

அவன் புன்னகைத்தான்.

''ஓகே மேடம். ஜஸ்ட் ஆறு மாசம் கழிச்சு இப்படியெல்லாம் பேசினா... உங்களுக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். நீங்க யோசியுங்க. நானும் யோசிக்கிறேன். நான் இந்த ஒப்பீனியன்ல... ஸ்டேண்டிங்ல தீர்மானமாத்தான் இருக்கேன், முடிவாத்தான் சொல்றேன். நீங்க சரின்னு சொன்னா நான் மறுபடியும் எங்க பேரண்ட்ஸ்கிட்ட பேசறேன்'' என்றான் அவன்.



அவள் ஒன்றும் பதில் சொல்லவில்லை.

பத்து நாள் கழித்து வந்தான். அப்பொழுதும் அவள், ''எந்த முடிவும் நான் எடுக்கிறதில்லைங்க. எங்க வீட்டைப் பொறுத்துதான் எல்லாமே'' என்ற பதிலையே சொன்னாள்.

12

இந்த இரண்டு மாதங்களுக்குள்ளாக அவன் இரண்டு மூன்று முறை வந்துவிட்டு போய்விட்டான். ஆனால் அவள் தெளிவான பதில் சொல்லவில்லை.

ஒருகட்டத்துக்குப் பிறகு ''நீங்க வேணும்னா எங்க பேரண்ட்ஸை வந்து பாருங்க... எங்க அண்ணனை கன்வின்ஸ் பண்ணுங்க'' என்று சொல்லியிருந்தாள்.

அந்த அடிப்படையில் தான் இப்பொழுது அங்கு வந்திருந்தான், தியாகு.

''சொல்லுங்க தியாகு'' என்று கேட்டான் ராம்பிரசாத்.

தியாகு மடமடவென்று பேச ஆரம்பித்தான். பெற்றோர்களும் அவனும் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவன் சொல்லி முடிக்கும் வரை கேட்டுவிட்டு, அவர்கள் சொன்ன பதில் தியாகுவை திகைப்படையச் செய்தது.



ஏதையோ எடுத்துக் கொண்டு வந்த எழிலி அப்படியே ஸ்தம்பித்து நின்று விட்டாள்.

''யார், நீங்களா?'' என்று ஆச்சரியமானாள்.

''எப்படி... எங்க வீடு அடையாளம்?'' என்று கேட்டபடி, ''வாங்க, வாங்க'' என்று வரவேற்றாள்.

''ஆமாம். இது நிலாவில இருக்குது. கண்டுபிடிக்க முடியாதாக்கும். சும்மா இந்த ஏரியாவிலேயே அழகான பொண்ணு நடமாடிக்கிட்டு இருக்குமேன்னு... இளவட்டங்களைப் பார்த்து விசாரிச்சேன், புள்ளி விபரமே சொல்றானுக'' என்று சிரித்தான் ராம்பிரசாத்.

அவள் முறைத்தாள். ''இந்த கிண்டல் தானே வேண்டாங்கறது'' என்றாள்.

''எது கிண்டல், நீ அழகா இல்லையா... நீ அழகு தானே அம்மணி'' என்றான் அவன்.

''போதும்போதும்! வாங்க... உட்காருங்க'' என்றாள்.

"அப்பா அம்மா எல்லாம் எங்கே?" என்று கேட்டான் தெரியாதவன் போல.

சற்று நேரத்துக்கு முன்புதான் அவளுடன் ஃபோனில் பேசி இருந்தான். அம்மா, அப்பா வெளியே போயிருக்கிறார்கள் என்ற விபரத்தைக் கறந்து கொண்டு தான், புறப்பட்டு வந்திருந்தான்.

நேற்று தியாகு வந்து விட்டுப் போனதிலிருந்து அவனது உள்ளம் துள்ளிக் கொண்டிருந்தது. ரமணியின் பிரச்னை இவ்வளவு இலகுவாக, எளிதாக தீரும் என்று நினைக்கவே இல்லை.

முதல் முதலாக வந்து பார்த்து விட்டு, ஒரு பெண்ணை நிராகரிப்பது என்பது எந்த வகையில் நியாயம் என்று தன் பெற்றோரிடம் வாதாடி ஜெயித்திருக்கிறான் தியாகு.

கூடுதலாக ரமணியின் அரசு வேலை. அவன், அவர்களை வற்புறுத்தி சம்மதிக்க வைப்பதற்கு ஏதுவாக அமைந்தது.

ராம்பிரசாத்துக்கு அவனிடம் பிடித்தது என்னவென்றால் அதையும் அவன் வெளிப்படையாக ஒத்துக் கொண்டான். தனியாக அவனிடம் சொன்னான்,

"ராம்பிரசாத், நான் இப்போ உங்ககிட்ட ஓபனாகவே சொல்றேன். உங்க தங்கையைப் பார்த்ததற்கு அப்புறம் நான் வேறு எந்த பொண்ணையும் பார்க்கப் போகலை. ஒன்று உங்க தங்கையை எனக்கு ரொம்பப் பிடிச்சுருச்சு. ஆனால் என் பேரன்ட்ஸை என்னால ஒத்துக்க வைக்க முடியலை. நல்லா யோசிச்சுப் பாருங்க. இவ்வளவு கஷ்டப்பட்டு வளர்த்து வாலிபம் பண்ணியிருக்காங்க. அவங்களுடைய மனசை நோகடிச்சு நான் எந்த முடிவும் எடுக்கிறதுக்கு விரும்பலை. ஆனா இப்போ ரமணிக்கு அரசு வேலை கிடைச்சது எனக்கு ஒரு பிளஸ் பாயின்ட்டா இருந்தது. அதை வச்சு அவங்க கிட்ட பேசிப்பேசி கரெக்ட் பண்ணினேன்" என்று சொன்னான்.

ராம்பிரசாத், பொய்யாமொழி... எல்லோரும் மகிழ்ச்சியாக ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

அப்பொழுது பொய்யாமொழி சொன்னார். "ரொம்ப சந்தோஷம் தம்பி – நீங்க வந்து கேட்டது. ஆனா... அன்றைக்கு வந்து வருத்தப்பட்டுப் போனது உங்க பெற்றோர்கள். மறுபடியும் அவங்க வந்து பேசினாத்தான் நல்லாயிருக்கும்" என்றார்.

"கண்டிப்பா... கண்டிப்பா... !" என்றான் தியாகு.

மலையாக இருந்த ஒரு பெரிய விஷயம் இப்படி சிறிய விஷயமாக ஆகி



விட்டது ராம்பிரசாத்துக்கு மிகவும் மகிழ்ச்சி.

தியாகு சற்று நேரம் இருந்து விட்டுப் போனான்.

அதற்கு முன்பாக அவன், "ரமணியிடம் ஒரு வார்த்தை பேசிக் கொள்ளலாமா?" என்று கேட்டான்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"தனியா..." என்றான்.

ராம்பிரசாத், அப்பாவை அழைத்துக் கொண்டு போய் சொன்னான்.

"அப்பா... பெர்மிட் பண்ணுங்க. ரமணி நினைச்சிருந்தா... இந்தப் பையனை எங்காவது பார்க்... தியேட்டர் ...கோயில்னு உட்கார்ந்து பேசியிருக்கலாம். ஆனா அதையெல்லாம் சொல்லாம இங்கே வந்து கேளுங்கன்னு சொல்லியிருக்கா... அவனும் நாகரீகமா வந்திருக்காப்ல... மதிக்கணும்ப்பா..." என்றான்.

அப்பா, உடனே ஒத்துக் கொண்டார்.

அவன் சடாரென்று எழுந்து சமையல் அறைக்கே போனான்.

ரமணி அங்கே பேசுவதையெல்லாம் கேட்டுக் கொண்டு சுவர் ஓரமாக சாய்ந்து நின்று கொண்டிருந்தாள். இவன் வருவது தெரிந்ததும் அவளுக்குள்ளே வெட்கம் இழையோடியது.

"என்ன நீங்க இங்கே..." என்று இழுக்க...

"நாங்க பெர்மிஷன் வாங்கிட்டுத்தான் வந்திருக்கோம். அப்படி யொண்ணும் சும்மா சல்லுன்னு வந்துடலை அம்மணி" என்று சிரித்தான் அவன்.

அவள் முகம் சிவந்துவிட்டது.

"உங்க பேரன்ட்ஸ் பெர்மிஷன் கொடுத்திருக்காங்க. நானும் அந்த மரியாதையைக் காப்பாத்திக்குவேன்" என்றான்.

அவள் நிமிர்ந்து பார்த்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டாள்.

"இந்த முகம்தான்... இப்ப பாத்தியே இந்தப் பார்வைதான்... ஏழு மாசமா... எட்டு மாசமா தூங்க விடலை" என்று அடிக்குரலில் சிரித்தான்.

அவள் விதிர்விதிர்த்துப் போனாள்.

"ஏன் பயந்து நடுங்கறே... நான் என்ன உன்னைத் தின்னுடவா போறேன்" என்று கேட்டான்.

கொஞ்சம் அருகிலே வந்து எதிரிலே நின்றான்.

"ரமணி, நெக்ஸ்ட் ஸ்டெப் ஈஸியா முடிச்சுடுவேன். கவலையே படாதே. அம்மா அப்பாவைக் கூட்டிட்டு வந்துடுவேன். இன்னொரு விஷயம் சொல்லட்டா..." என்றான் குனிந்து அவள் முகம் பார்த்து.

"ம்..." என்றாள் அவள் நிமிர்ந்து பார்க்காமலேயே...

"தீபாவளி முடிஞ்சவுடனே கல்யாணம். மண்டபம் கிடைக்கலைன்னாலும் பரவாயில்லை. நம்ம வீட்டுக்கு பக்கத்திலேயே ஒரு பெரிய சைட்... இருக்கு. பந்தல் போட்டிருவோம். அதிகபட்சம் ஒரு மாசம்... அதுக்கு மேலேயெல்லாம் அம்மணியை இங்க விட்டுட்டு நான் ஏங்கிகிட்டிருக்க முடியாது, தெரியுதா?" என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். மெல்ல ஏதோ முணுமுணுத்தாள்.

"என்ன, என்ன... ?" என்றான் அவன்.

"ஆனாலும் ரொம்ப தைரியம்தான். கோயமுத்தூர் குசும்பு... எங்க பேரண்ட்ஸ்கிட்ட பெர்மிஷன் வாங்கிட்டு வந்துட்டு இப்படியெல்லாம் பேசிக்கிட்டு இருக்கீங்களாக்கும்" என்றாள் அவள்.

"பெர்மிஷன் வாங்கினதுனால தானே தைரியமாப் பேசறேன். எங்கூட எங்காவது வெளியே வருவீயா, பெர்மிஷன் கேட்கட்டுமா?" என்றான்.

அவள் சரேலென்று நிமிர்ந்து, "வேண்டாம், வேண்டாம். இது போதும். நீங்க முதல்ல உங்க பேரண்ட்ஸ்கிட்ட பேசி அவங்க வரட்டும். அதுக்கப்பறமா...! ஆக்கப் பொறுத்தவங்க ஆறப் பொறுக்க மாட்டீங்களாக்கும். அதான் ஒரு மாசத்திலே கல்யாணம்னு சொல்றீங்களே..." என்றாள்.

கவலையானவன் போல நடித்தான்.

"என்ன கவலை, அடேயப்பா..." என்று அவள் சிரித்தாள்...

"இல்லை. சரியான பிடிவாதக்காரர் நீங்க... எப்படி நடையா நடந்து என்னை சம்மதிக்க வச்சுட்டீங்க..." என்று கேட்டாள்.

"உனக்கு அந்த கௌரவத்தைக் கொடுக்கணும்னு நினைச்சேன் ரமணி" என்றான் ஆழ்ந்த குரலில்

குரலில் தெரிந்த நெகிழ்வைக் கேட்ட அவள் நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"இல்லை ரமணி. நானும் எங்க பேரண்ட்ஸ்சும் உன்னைக் காயப்படுத்தி



இருக்கிறோம். அதுக்கப்புறம் அப்படி சட்டென்று கூப்பிட்டா... வரக்கூடியவள் இல்லை நீ–ங்கறதை நீ எனக்குப் புரிய வச்சுட்டே. அப்படி நடையா நடந்து சம்மதம் வாங்கினதுல ஒரு சுகம் இருந்துச்சு தெரியுமா?" என்று சொன்னான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள்.

அதற்குமேலும் அந்த உணர்வின் கனத்தைத் தாங்க முடியாதவளாக சட்டென்று அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

அவன் பட்டும்படாமலும் அவள் தோளைத் தொட்டபடி, "எங்க பேரண்ட்ஸ்கிட்டேயும் பேசி மறுபடியும் கூட்டிட்டு வந்து உனக்கு கௌரவம் கொடுப்பேன். பிகாஸ் யு ஆர் கோயிங் டு மை பெட்டர் ஹாஃப். உனக்கு வரக்கூடிய எந்த அவமானமும் என்னோடது. இனிமே என்னோட எல்லா சந்தோஷங்களும் உன்னோடது" என்று சொன்னான்.

மெல்ல அவள் முகத்தை நிமிர்த்தினான்.

நெற்றி நோக்கிக் குனிந்தான்.

அவள் படபடப்பைப் பார்த்து விட்டு, "வேண்டாம், பயப்படாதே" என்றபடி அடிக்குரலில் சிரித்து விட்டு வெளியே போய் விட்டான்.

உள்ளே ஏதோ நாடகம் நடக்கிறது என்பது ராம்பிரசாத்துக்குப் புரிந்தது.

விறுவிறுவென்று வெளியே வந்த தியாகு, "ஓகே. ராம்பிரசாத் சார், நான் கிளம்பறேன்" என்று சொல்லிவிட்டு, அருகருகே அவர்களது அம்மா அப்பா நின்று கொண்டிருந்ததை வாய்ப்பாகக் கருதினானோ என்னவோ... சட்டென்று அவர்கள் காலைத் தொட்டுக் கும்பிட்டு விட்டு கிளம்பினான்.

வாசல் வரை போனவன் திரும்பிப் பார்த்தான். அதற்குள்ளாக ரமணி சமையல் அறையைவிட்டு வெளியே வந்து நின்று கொண்டிருந்தாள். கண்ணாலேயே பேசி அவளிடம் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டான்.

இதையெல்லாம் பார்க்கப் பார்க்க ராம்பிரசாத்துக்கு, உள்ளே சிரிப்பும் வந்தது. ஆனால் அதிர்ச்சியாகவும் இருந்தது.

தியாகு அந்தப்பக்கம் போனவுடனேயே இவன் உள்ளே போனான்.

"அம்மணி, என்னாச்சு? பெயின்ட் கியின்ட் அடிச்சீங்களா... முகத்துக்கு" என்று கேட்டான்.

அவள் புரியாமல் பார்க்க... இல்ல செக்கச்செவேல்னு இருக்கு...ஏதோ திடீர்னு மேக்அப் கீக்அப் பண்ணிட்டியோ அப்படீன்னு நினைச்சேன்" என்று சிரித்தான்.

"போங்கண்ணா..." என்று அவள் தலையைக் குனிந்து கொண்டாள். இவனும் அடிக்குரலில், "என்ன ரொம்ப வம்பு பேசினானா... சொல்லி வை. மச்சான் நானிருக்கேன்... பாத்து நடந்துக்கச் சொல்லு... ஏன்னா... நாளைக்கு பொண்ணோ... பையனோ காது குத்துறதுக்கு நான்தான் வரணும்" என்று சிரித்தான்.

"காது தானே... அது தான் நீ நல்லா குத்துவீயே..." என்றாள் தங்கை.

"பாத்தியா... ஒரே நாள்ல அவன் கட்சிக்கு போயிட்டா... அவனுக்கு சப்போர்ட் பண்ணி பேசறா... அம்மா இங்க பாருங்க... அப்பா இங்க பாருங்க..." என்று அவன் கலாட்டா செய்தான்.

"என்னப்பா..." என்று அம்மா கேட்க, "நான் காது குத்துறேனாம்... இப்ப வந்தவன் நல்லவனாப் போயிட்டான். நான் இவளுக்கு காது குத்தறேனாம். கேளும்மா" என்று பெரிய ரகளைபோல அவன் பேசவும் எல்லாரும் சிரித்தார்கள்.

அங்கே மகிழ்ச்சிகரமான சூழ்நிலை நிலவியது.

இரவெல்லாம் அவனுக்குத் தூக்கம் வரவேயில்லை.

இரவிலேயே இரண்டு மூன்று முறை எழிலிக்கு மெசேஜ் அனுப்பி இருந்தான்.

பத்து மணிவாக்கில் அவளை அழைத்து தியாகு வந்து பேசிவிட்டுப் போன விபரம் சொன்னான்.

தியாகு அதோடு நிற்கவில்லை. இரவு எட்டு மணிவாக்கில் அவனது பெற்றோரை விட்டு அவர்களிடம் பேச வைத்தான். இரண்டு குடும்பங்களுமாக அடுத்த இரண்டு நாட்களுக்குள்ளாக நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ளலாம் என்று பேசிக் கொண்டார்கள்.

இது எல்லாவற்றையும் கனகாரியமாக எழிலியிடம் ஒப்பித்து விட்டான் ராம்பிரசாத். அந்தப்பக்கம் உடனே நாடகத்தனமாக ஒரு பெருமூச்சு விட்டாள்.

"என்ன பெருமூச்சு..." என்று கேட்டான்.

"குடுத்து வச்சவங்க. அவங்களுக்கெல்லாம் டக்கு டக்குன்னு நடக்குது" என்றாள் அவள்.

"வேணாம். உசுப்பாதே... அப்புறம் நாளைக்கு காலையில ஒரு மஞ்சள் கயிறை வாங்கி மஞ்சக்கொம்பை கட்டி எடுத்துட்டு வந்துடுவேன்" என்றான்.



"சிம்பிளா செலவில்லாம முடிச்சுக்கலாம்னு பார்க்கிறீங்களே..." என்றாள் அவள்.

"அதுக்கெல்லாம் கவலைப்படாதே. எங்கம்மா ஆறு பவுன் கொடி ரெடியா வச்சுருக்காங்க – வரப்போற மருமகளுக்கு... அதே போல அதற்கு சமமாக தங்கைக்கு... எல்லாம் செட்டா வச்சுருக்காங்க... கவலைப்படாதே" என்று சிரித்தான் அவன்.

அவள் அந்தப் பக்கம் இருந்து, "நகையா முக்கியம்? இப்ப நீங்க சிரிக்கிறீங்களே கலகலன்னு... இது தான் முக்கியம். இந்த மாதிரி நீங்க சிரிச்சு எவ்வளவு நாளாச்சுத் தெரியுமா?" என்று கேட்டாள்.

"எவ்வளவு நாளாச்சு... ?" என்று கேட்டான் அவன்.

"ஒரே ஒரு தடவை இந்த மாதிரி சிரிச்சுருக்கீங்க... அது உங்க தங்கைக்கு வேலை கிடைச்ச அன்னைக்கு...அதுக்கப்பறம் எப்பவும் முரட்டுத் தனமாத்தான் பேசினீங்க... சிரிப்பே இல்லை. இன்னைக்குத்தான் மனசாரச் சிரிக்கிறீங்க" என்றாள்.

அவன் பெருமூச்சு விட்டான். "உனக்குத் தெரியாது எழிலி. ரமணி மாதிரி ஒரு நல்ல பெண்ணுக்கு ஒரு நல்ல ஹஸ்பெண்ட் கிடைக்கணும்றது எவ்வளவு பெரிய கவலை தெரியுமா? அந்த மாதிரி ஒரு கவலை மனசுல அழுத்திகிட்டு இருக்கும்பொழுது நான் எப்படி சிரிக்க முடியும்?" என்று கேட்டான் அவன்.

"அது உண்மை தாங்க" என்றாள் அவள்.

"இதுல என்ன கொடுமை தெரியுமா, உன்னை மாதிரி ஒரு நல்ல ஃபிரண்ட்ஷிப் கிடைச்சும்கூட அதை என்னால என்ஜாய் பண்ண முடியாமப் போச்சு" என்றான் வருத்தத்துடன்.

"பரவாயில்லைங்க. இனிமே என்ஜாய் பண்ணிடுங்க" என்றாள்.

"ம்... பின்னே... விடுவேனா... அய்யா சான்ஸை... இனிமே பாரு. அநேகமா ரமணி கல்யாணம் முடிஞ்சவுடனே... மூணு நாலு மாசத்துல நம்ம கல்யாணம் வைக்கிற மாதிரி பேசிடணும். ஆமா... இந்த விட்டதைப் புடிக்கறது... விட்டதைப் புடிக்கறதுன்னு சொல்றதைக் கேட்டிருக்கியா... எல்லாத்தையும் அந்த நிச்சயதார்த்தத்துக்கும் நம்ம கல்யாணத்துக்கும் இடையில இருக்கிற நாள்ல நான் காம்பன்சேட் பண்ணியே தீருவேன்" என்றான்.

அவள் அந்தப்பக்கம் ஒன்றும் பேசவில்லை.

"என்ன சத்தத்தைக் காணோம்" என்று கேட்டான்.

"இன்னைக்கு நீங்க என்னவேணா... பேசுங்க. நான் கேட்கிறேன். ஏன்னா... இப்படி ஒரு சந்தோஷமான குரலைக் கேட்கிறதே எனக்கு நல்லாயிருக்கு. எனக்குப் பேச்சே வரமாட்டேங்குது" என்றாள் அவள்.

"அப்படியெல்லாம் விட்டுற மாட்டோம். சரிக்குச் சரியா பேசணும்" என்று அவன் மேலும் மேலும் கிண்டல் பேச – அவள் அதை ரசித்துக் கொண்டாள்.

அன்றைக்கு இரண்டு பேருமே உறங்குவதற்கு வெகுநேரமாகி விட்டது. அடுத்த நாள் காலை – அதாவது இன்று காலை – பத்து மணிக்கே வீட்டுக்குள் நுழைந்ததைப் பார்த்தவுடனே ஆச்சரியமாகி நின்றாள் எழிலி.

"தெரிஞ்சுகிட்டு தான் வந்திருக்கேன்" என்றான் அவன்.

"என்ன தெரிஞ்சுகிட்டு...?." என்றாள் அவள்.

"உங்க அப்பா, அம்மா ரெண்டு பேரும் வெளியே போயிருக்காங்க. வரதுக்கு மத்தியானம் ஆகும்னு எனக்குத் தெரியும்" என்றான் அவன்.

"ஹலோ... அப்படியெல்லாம் இங்கவந்து ஒண்ணும் சாதிச்சிட முடியாது" என்றாள் அவள்.

அவன் சுற்றுமுற்றும் பார்த்து விட்டு அவளிடம் நெருங்கி நின்றான்.

"ஏய், நீ தானே சொன்னே, 'எட்டு மாசமா சந்தோஷமே படல...நேத்து தான் சந்தோஷமா பேசினேன்'னு சொன்னியா இல்லையா... அப்படி நேர்லயும் கொஞ்சம் பேச வேண்டாமா? அதுக்குகூட பெர்மிட் பண்ண மாட்டியா... இந்த மாதிரி பண்டிகை லீவு எப்ப கிடைக்கும்? நான் கொஞ்ச நேரம் உங்கிட்ட உட்காந்து பேசிட்டு தான் போவேன்" – என்று பிடிவாதம் பிடிக்கும் குழந்தையைப் போல அவன் நிற்கவும் அவள் சிரித்து விட்டாள்.

"நல்லா பேசுங்க. அது வேண்டாம்னு சொல்லலை. ஆனா... எங்க அம்மா, அப்பா..." என்று அவள் இழுக்க...

"உனக்கு ஒரு ரகசியம் சொல்லட்டா... உங்கப்பாகிட்ட பேசி பெர்மிஷன் வாங்கிட்டுத் தான் வந்திருக்கேன்" என்றான் அவன்.

"அட ஆண்டவா... இப்படியும் செய்வாங்களா... என்ன" என்று அவள் திகைத்துப் போய் நிற்கையிலேயே அவன் பேச ஆரம்பித்தான்.

அவளும் கேட்க ஆரம்பித்தாள்.,,,!





## 13

"நல்லா சேர்ந்து உட்காருங்க" என்றார்கள் பெரியவர்கள்.

ரமணியும் தியாகுவும் அருகருகே அமர்ந்திருந் தார்கள்.

அவர்கள் இருவருக்கும் திருமண நிச்சயதார்த்தம் நடந்து கொண்டிருந்தது.

பொய்யாமொழியும் ராஜேஸ்வரியும் ஒருபக்கம் அமர்ந்து அதை ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந் தார்கள்.

பெண்ணுக்குத் தேவையான அலங்காரம்... அவளுக்கு அவ்வப்போது கொடுக்க வேண்டிய பொருட்களை எடுத்துக் கொடுப்பது என்று எல்லாவற்றையும் விழுந்துவிழுந்து செய்து கொண்டிருந்தது யார் என்றால் எழிலி தான்.

ஆமாம், எழிலியே தான்.!

ரமணிக்கு நிச்சயதார்த்தத்துக்கு நாள் குறித்த உடனேயே எழிலியின் அப்பா... சற்றும் தயங்காமல் 'நேரடியாகவே வந்து பேசுகிறேன்' என்று சொன்னார்.

அப்பொழுது ராம்பிரசாத் மறுத்து விட்டான். "வேண்டாங்க. திடீர்னு வந்து சொன்னீங்கன்னா அவங்களுக்கு ஷாக் ஆகும். நானே டைம் பார்த்துச் சொல்லிட்டு உங்களைக் கூப்பிடறேன். அப்புறம் நீங்க வந்தால் போதும்" என்று சொன்னான்.

"இல்லை தம்பி, எதா இருந்தாலும் லவ் மேரேஜ்னா முதல்ல வீட்ல எதிர்ப்பு வரத்தானே செய்யும்" என்று தன்னுடைய அனுபவத்தின் அடிப்படையில் பேச ஆரம்பித்தார் அமிர்தலிங்கம்.

"இருக்கும். ஆனா... நான் சொல்லாம நீங்க நேரடியா வந்து சொன்னீங்கன்னா... இன்னும் சங்கடம் அதிகமாகும். 'ஏன், அவனே சொல்லியிருக்கலாம்ல...' அப்படீன்னு நினைப்பாங்க. அதனால முதல்ல நான் பேசிடறேன்" என்று உறுதியாக மறுத்து விட்டான் ராம்பிரசாத்.

அமிர்தலிங்கம் மகளிடம் ஆலோசித்தார். "அப்பா, அவர் சொல்றது தான் சரி" என்றாள்.

வாய்ப்புக்காக காத்துக் கொண்டிருந்தான் ராம்பிரசாத். அந்த வாய்ப்பை தியாகுவின் பெற்றோர்கள் அவனுக்குத் தந்தார்கள்.

நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்ளும் நாள் என்றைக்கு என்று பேசி முடித்தார்கள். அப்பொழுது ராம்பிரசாத் கேட்டான்.

“நகை எவ்வளவு போடணும்னு ஒண்ணும் சொல்லலையே...” என்று கேட்டான். தியாகு அமர்த்தலாக அமர்ந்திருந்தான்.

தியாகுவின் பெற்றோர்கள் இரண்டு பேரும் பதறிப்போனார்கள்.

“தம்பி... அதைப்பற்றி மட்டும் பேசாதீங்க. தியாகுவுக்குக் கோபம் வந்துரும்” என்றார்கள்.

“இல்லை... இல்லை... அவர் அப்படித்தான் சொல்லுவாரு. நாங்க செய்ய வேண்டிய கடமையைச் செய்யணுமில்லே... நாளைக்கு ஏதும் பேச்சு வந்துடக்கூடாதுங்கறதுக்காக மட்டுமில்லை... எங்க பொண்ணை நாங்க அனுப்பும்பொழுது அவளுக்குன்னு ஏதாவது செஞ்சு வச்சுருப்போம்ல... சரி... விடுங்க. நீங்க கேட்க வேண்டாம். நானே சொல்லிடறேன்” என்று சொல்லி விட்டு அப்பாவைப் பார்த்தான்.

அப்பா மகனைப் பார்த்தார். இரண்டு பேருமாக எழுந்து அந்தப்பக்கமாகச் சென்று பேசினார்கள்.

“டேய், ஒரு முப்பத்தைந்து பவுனுக்கு நான் ரெடி பண்ணி வச்சிருக்கேண்டா...” என்றார் அப்பா.

“சரிப்பா... நான் ஒரு இருபத்தைந்து பவுன் போடறேன். அறுபது பவுனா போட்றலாம்” என்றான் மகன்.

“இருபத்தைந்து பவுன் நீ ரெடி பண்ணி வச்சுருக்கியா... ?” என்று அப்பா ஆச்சரியமானார்.

“ஆமாம்ப்பா...” என்று சொல்லிவிட்டு வந்தான்.

“நாங்க அவளுக்கு அறுபது பவுன் போடறோம்ங்க... கல்யாணச் செலவு எப்படி?” என்றான்.

“ஆளுக்குப் பாதி போட்டுக்கலாங்க...” என்றார்கள் அவர்கள்.

“இல்லைங்க. கல்யாணச் செலவையும் நாங்களே செஞ்சுடறோம். ஜவுளி... அவங்கவுங்க செலவுல எடுத்துடலாம்” என்று பேசி முடித்தார்கள்.

தியாகுவின் பெற்றோர்கள் விளையாட்டுப் போல, “சரி. தங்கச்சிக்கு எல்லாம் பாத்துட்டீங்க. நீங்க எப்ப கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க..சொல்லுங்க நாங்களே பொண்ணு பார்த்துத் தர்றோம்” என்றார்கள்.

எப்பொழுதுமே கல்யாண பேச்சு எடுத்தால், ‘அந்தப் பேச்சு மட்டும் இப்பொழுது பேசாதீங்க’ என்று சொல்கிற மகன், “அது பாக்கலாம் சார்,



முதல்ல ரமணியின் கல்யாணம் முடியட்டும்” என்று பதில் சொன்னதை பொய்யாமொழியும் ராஜேஸ்வரியும் கூர்ந்து கவனித்துக் கொண்டார்கள்.

ரமணியின் மாப்பிள்ளை வீட்டுக்காரர்கள் சென்றதற்குப் பின்பு, ரமணி கூட கேலி செய்தாள்.

“அண்ணா, ‘இப்போதைக்கு கல்யாணத்தைப் பற்றி பேசாதீங்க’ன்னு சொல்வேன்னு பார்த்தேன். ‘ரமணி கல்யாணம் முடியட்டும்’னு சொன்னே... அப்ப பொண்ணு கிண்ணு பார்த்து வச்சுருக்கியா...” என்று கலாட்டா செய்தாள்.

அவன் அழுத்தமாக புன்னகைத்தான். அதையும் பொய்யாமொழியும் ராஜேஸ்வரியும் கவனித்தார்கள்.

ரமணி விளையாட்டாக எடுத்துக் கொண்டு அடுத்த வேலையைப் பார்க்கச் சென்றுவிட்டாள்.

ரமணியிடம் ஏதோ சொல்லிவிட்டு வந்த ராம்பிரசாத் காதுகளில், பெற்றோர்கள் பேசிக் கொண்டிருந்தது விழுந்தது.

“ஏன் ராஜேஸ்வரி... ‘இப்போதைக்கு கல்யாணப் பேச்சு பேசாதீங்க’ன்னு கடிப்பான்... இன்னைக்கு என்னவோ ‘ரமணி கல்யாணம் முடியட்டும்’ அப்படீங்கறான். ரமணி கூட ‘ஏதும் பொண்ணு பாத்து வச்சிருக்கியா அண்ணா’ன்னு கேட்டப்போ அழுத்தமா சிரிச்சானே... ஏதும் பொண்ணு கிண்ணு பாத்து வச்சிருப்போனோ...” என்று கேட்டார்.

உடனே ராஜேஸ்வரி, “எனக்கும் அப்படித்தாங்கத் தோணிச்சு. ஆனா... எப்படி கேட்கறது. அதனாலதான் நான் கேட்கலை” என்றாள்.

“கேட்டோ... கேட்காமலோ விஷயத்துக்கு ஒரு முடிவைக் கொண்டு வரணுமே ராஜேஸ்வரி. கேட்டர்லாமா” என்று சொல்லிக் கொண்டிருந்த பொழுதே அவன் முடிவெடுத்துக் கொண்டான்.

‘இன்றைக்கு இரவு அப்பாவிடம் பேசிவிட வேண்டியது தான்’ என்று!

மகளின் திருமணப் பேச்சு முடிந்த மகிழ்ச்சியிலே பாரதியாருடைய கவிதைகளை வைத்துக் கொண்டு படித்துக் கொண்டிருந்தார் பொய்யாமொழி.

“அப்பா..!” என்றபடி அவரது அறை வாசலில் வந்து நின்றான் ராம்பிரசாத்.

“என்னப்பா...” என்று கேட்டார்.

“உங்ககிட்ட பேசணும்பா...” என்றான்.

"வா... வா..வா... என்ன பேசணும்? ரமணி கல்யாண விஷயமாவா... ஏற்பாடுகள் விஷயமாவா..." என்று உற்சாகமானார் தந்தை.

"அதுவும் தான் பேசணும்பா..." என்று உள்ளே வந்தான்.

"இந்த பாரதியார் கவிதைகள்ல பாருங்கப்பா... அதுல காற்றுன்னு ஒரு பகுதி வருதப்பா... அந்தப் பகுதியில் பார்த்தீங்கன்னா... ரெண்டு கயிறு... கணவன், மனைவின்னு கற்பனை பண்ணிப் பேசறாரு. பாருங்களேன் அவருடைய கற்பனையை... காதலை அவரு சொன்னமாதிரி யாரும் சொல்லியிருக்க முடியாதுப்பா... இல்லப்பா..." என்றான் மகன்.

பொய்யாமொழி மெல்ல மீசையை நீவி விட்டுக் கொண்டார். மகன் எதற்கோ அடி போடுகிறான் என்பது தெரிந்தது.

"என்னடா சொல்லணும். நேரடியாகச் சொல்லு" என்றார்.

அப்பாவைப் பார்த்தான். பிறகு தலையைக் குனிந்து கொண்டான். "அம்மாவையும் வச்சு பேசிடலாமாப்பா..." என்றான்.

"இல்லை இல்லை... முதல்ல நேரடியாக எங்கிட்டச் சொல்லு. அது என்ன விஷயம்னு பார்த்துட்டு அப்புறம் அம்மாகிட்ட சொல்லலாம்" என்றார்.

"அதுவும் நல்ல யோசனை தான். அம்மா அரண்டுருவாங்க..." என்றான்.

"அப்பா, வந்து நம்ம பக்கத்துல ஹையர் செகண்டரி ஸ்கூலு... அங்க அமிர்தலிங்கம்னு ஒரு வாத்தியாரு இருக்காரு... தெரியுமா?" என்று கேட்டான்.

"அடேடே... நல்லாத் தெரியுமே... இந்த ஏரியாவில நல்ல பேருப்பா... அவருக்கு. ரொம்ப நேர்மையான மனுஷன். குழந்தைகளுக்கு உயிரைக் கொடுத்துச் சொல்லித் தருவாரு" என்றார் அப்பா.

மெதுவாக அவருக்குப் புரிகிறாற் போல இருந்தது.

"அவருக்கு ஒரு பொண்ணு இருக்குப்பா..." என்றான்.

"ஓகோ..." என்று இழுத்தார் அப்பா. அவர் ஓகோ என்று இழுத்ததில் இருந்தே அவருக்கு விஷயம் புரிந்தது என்பது அவனுக்குத் தெரிந்தது.

"நல்ல பொண்ணுப்பா... ஆனால்..." என்று ஏதோ சொல்ல வந்தவன்... "பேரு எழிலி..ப்பா..." என்றான்.

"ம்ஹூம்... அப்படியா, பொண்ணு நல்லாயிருக்குமா? படிச்சிருக்கா?" என்றார் அப்பா.

"டிகிரி முடிச்சிருக்கா. ஏதோ பிரைவேட் கம்பெனியில வேலைக்குப் போறாப்ல. நல்ல பொண்ணு" என்றான் மறுபடியும்.



"ம்.ஹூம்... உனக்குப் பிடிச்சுருக்காக்கும்?" என்றார்.

அவன் இந்தப்பக்கம் அந்தப்பக்கம் பார்த்து விட்டு தலையசைத்தான்.

அவர் முகத்தை இறுக்கமாகவே வைத்துக் கொண்டார்.

"அப்புறம் என்னமோ சொல்ல வந்தீயே..." என்றார்.

"அப்பா, அந்த அமிர்தலிங்கம் சாரு... அந்தக் காலத்துலேயே லவ் மேரேஜ் தான் பண்ணியிருக்காரு. ஏதோ சேம் கேஸ்ட்ல இரண்டு பிரிவாம். ஆனா குடும்பம் நல்ல குடும்பமா இருக்கு. பொண்ணு நல்லாயிருக்கு. நல்லா வளர்த்திருக்காங்க" என்றான்.

"ம். கேள்விப்பட்டிருக்கேன். குடும்பம் நல்ல குடும்பம் தான்ப்பா... ஆனா..இந்த காதல்னு வந்துட்டாலே... என்று இழுத்தவர் – "அது சரி ஜாதகம் கீதகம் ஏதும் பார்க்க வேண்டாமா?" என்றார் அப்பா.

"அப்பா, பஞ்சாங்கத்திலேயே போட்டிருக்கு பார்த்திருக்கீங்களா...? மனப்பொருத்தம் இருந்தா வேறு எந்தப் பொருத்தமும் பார்க்க வேண்டாம்னு" என்றான்.

அப்பா சிரித்து விட்டார்.

"இங்க பாரு ராம்பிரசாத், உன்னைப் பொறுத்தவரைக்கும் நீ பொறுப்பான பையன். நீ ஒண்ணும் சின்னக்குழந்தை இல்லை. வேலைக்குப் போய் நாலைந்து வருஷம் ஆச்சு. வெளியுலகம் உனக்குத் தெரியும். ஏதோ காமா சோமான்னு ஒரு பொண்ணைக் கொண்டு வந்து நிறுத்திட மாட்டேங்கற நம்பிக்கை எனக்கு இருக்கு. ஏன்னா... வேறொரு பையனா இருந்தா... இப்படி தங்கச்சிக்கு கல்யாணம் பண்ணி வச்சுட்டுத் தான் நான் கல்யாணம் பண்ணிப்பேன்னு நிற்க மாட்டான். தங்கைக்கு கல்யாணம் முடிவான மகிழ்ச்சியில நீ வந்து சொல்றே... ஓகே. பொண்ணோட அப்பாவை வந்து பார்க்கச் சொல்லு. மேற்கொண்டு பார்க்கலாம்" என்றார்.

"ஏம்ப்பா... அம்மாகிட்டேயும்..."

"நான் பேசிக்கறேன் அம்மாகிட்டே..." என்றவர் அம்மாவையும் அழைத்துப் பேசினார்.

"ஏங்க இந்த லவ் மேரேஜ்... இதெல்லாம்..." என்று அவர் சந்தேகப்பட ஆரம்பிக்க... அவர் கையை உயர்த்தினார்.

"சரி போ... நீ போப்பா போய் ரெஸ்ட் எடு போ... நீ – நிறைய வேலை உனக்கு. நீ போய் ரமணிகிட்ட விஷயத்தைச் சொல்லு. அவளும் சந்தோஷப்படுவாள்" என்றார்.

இவ்வளவு இலகுவாக அப்பா ஏற்றுக் கொள்வார் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. நம்ப முடியாதவனாக நடந்து ரமணியிடம் பேசப்போனான். அந்த இடைவெளியிலே பொய்யாமொழி தன் மனைவியிடம் சொன்னார்.

"இதப்பாரு ராஜேஸ்வரி. அவன் மனசுக்குப் புடிச்ச பொண்ணைச் சொல்றான். இந்தக் காலத்துல பசங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு தான் வந்து இன்பார்ம் பண்றாங்க. 'எனக்குப் புடிச்சுருக்கு, உங்களுக்குப் புடிச்சுருந்தால் பண்ணிக்கிறேன்' அப்படீங்கற மாதிரிதான் அவன் சொல்றான். இந்த காலக்கட்டத்திலே பிரச்னைகள் பண்ணிப் பிரயோஜனமில்லை ராஜேஸ்வரி. இதெல்லாம் செல்ஃப் சபீஷியன்ஸி – அதாவது பொருளாதார நிறைவு இருந்துட்டாலே யாரும் யாரைப்பற்றியும் கவலைப்படறதில்லை. ரெண்டு பேரும் வேலை செய்யறாங்க. நல்லாப் பொழைப்பாங்க... எத்தனையோ குழந்தைங்க அப்பா அம்மாவை விட்டுட்டு அமெரிக்காவில போய் உட்காந்துக்கிறாங்க. ஆனா இவன், நம்ம கூட இருக்கணுங்கறதுக்காக எத்தனையோ வாய்ப்புகளை வேண்டாம்னு சொன்னவன். அது மட்டுமில்லை, எல்லாத்தைக் காட்டிலும் ரமணிக்கு கல்யாணம் பண்ணிட்டுத் தான் பண்ணுவேன்னு நின்னான் பாத்தியா... அப்படி பிள்ளை கிடைக்கறதுக்கு நாம் குடுத்து வச்சிருக்கோணும்ல..." என்றார்.

"ஆமாங்க..." என்ற ராஜேஸ்வரிக்கும் கண்ணில் ஆனந்தக் கண்ணீர் நிரம்பியது.

"அப்ப அவனோட சந்தோஷம் முக்கியமில்லையா?... அதைப்பாரு" என்று மனைவியிடம் சொன்னார்.

"ஏங்க இவ்வளவு ஈஸியா எடுத்துக்கிட்டீங்க..." என்று ராஜேஸ்வரி கேட்டார்.

"இல்லைம்மா. கொஞ்ச நாளாவே அவன் நடத்தையில ஒரு சேஞ்ச் இருக்கு. முகத்தில அப்பப்ப ஒரு உற்சாகம்... குழப்பம்... ரெண்டும் மாத்திமாத்தி இருக்கு. நான் யோசித்துப் பார்த்தேன். ரமணி கல்யாணம் முடியணுங்கற ஒரு குழப்பம்... அப்பப்ப செல்போன்ல பேசறானே... ரெண்டு மூணு தடவை ஜாலியா பேசிக்கிட்டு இருந்தது காதுல விழுந்தது. நமக்கு என்னப்பா மிச்சம் வாழ்க்கையில... குழந்தைங்களோட சந்தோஷம் தானே! அவனுக்கும் கல்யாணம் பண்ணி வச்சுட்டு நாமும் நிம்மதியா இருப்போம். என்ன சொல்றே...?" என்றார் பொய்யாமொழி.

"நீங்க சொல்றதை என்னைக்கு நான் மாத்தி சொல்லியிருக்கேன்?" என்றாள் ராஜேஸ்வரி.

"அப்படிப் போடு" என்று சிரித்தார்.



அதே நேரத்தில் ரமணியிடம் வெட்கத்துடன் சொல்லிக் கொண்டிருந்தான் ராம்பிரசாத்.

"அண்ணா, நீ பயங்கரமான ஆளு. ம்... நல்லவேளை எனக்குக் கல்யாணம் நிச்சயமாச்சு. இல்லைன்னா நீ கல்யாணமே பண்ணிக்க மாட்டியோ..." என்று கவலையுடன் கேட்டாள் ரமணி.

"நிச்சயமா...! உன் லைஃப் செட்டில் ஆகலைன்னா... நானும் முடிவெடுத்திருக்க மாட்டேன்" என்று அழுத்தமாகச் சொன்னான்.

"நல்லவேளைண்ணா... நான் தப்பிச்சேன். கடவுள் என் மேல் கருணை வச்சாரு. உனக்கும் நல்லது நடக்கட்டும். அதே சமயத்தில என்னால ஒரு காரியம் தடைபட்டு நிற்குது... அதுவும் நடக்கட்டும்னு தான் தியாகுவை அனுப்பிச்சாரோ..." என்றாள் அவள்.

உண்மையில் தியாகுவை அனுப்பியது வேறு யாரோ என்பது அப்பொழுது அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை.

அதற்குப் பிறகு இவர்கள் ஒருமுறை எழிலியின் வீட்டுக்குப் போக... அவர்கள் அங்கிருந்து இங்கே வர – இரண்டு குடும்பங்களும் ஒட்டிக் கொண்டார்கள். அதிலும் பொய்யாமொழியும் அமிர்தலிங்கமும் நேரில் பார்த்து பழகியவர்களாம். மிக நெருங்கிய பழக்கம் இல்லையென்றாலும் அவ்வப்போது பார்த்து பேசும் பழக்கம் இருந்ததால் எல்லாமே எளிதாக முடிந்தது.

எழிலி அவர்கள் குடும்பத்தில் ஒருத்தி ஆனாள்.

ரமணியினுடைய திருமணம் முடிந்ததற்குப் பிறகு இரண்டு மாதத்திற்குள்ளாக அவர்களின் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

அந்த உரிமையில்தான் எழிலி இப்பொழுது வந்து எல்லாவற்றையும் நடத்திக்கொண்டிருந்தாள்.

"ரமணி, இந்த நெத்திச்சுட்டியை போட்டுக்கோங்க. நல்லாயிருக்கும்" என்றாள் எழிலி.

"ம்... எல்லாம் அதைப் போட்டுக்கோங்க... இதைப் போட்டுக்கோங்கன்னு எங்கிட்ட சொன்னாத்தானே நான் நாளைக்கு உங்க கல்யாணத்தில அண்ணி இதைப்போட்டுக்கோங்க... அதைப்போட்டுக்கோங்கன்னு சொல்வேன்" என்று கேலி செய்தாள் ரமணி.

"ம்... அதெல்லாம் நடக்காது" என்று சிரித்தாள் எழிலி.

"ஏன்?" என்று ஆச்சரியமானாள் ரமணி.

"நீ கொடுக்கறதுக்கு முன்னாடியே அள்ளிஅள்ளி மாட்டிக்குவேனே..."

சிரிக்கவும் ரமணியும் சிரித்தாள்.

"...சான், என்ன மச்சான்... ரெண்டு பேரும் சிரிச்சுகிட்டு யாரை கலாட்டாப் ...ணிகிட்டு இருங்காங்கன்னு தெரியலையே..." என்று வந்தார்கள் தியாகுவும் ராம்பிரசாத்தும்.

"நாங்க சிரிச்சா உங்களுக்குப் பொறுக்காதே. என்ன பேசுகிறோம்னு பார்க்கறதுக்கு வந்திருவீங்களே..." என்று பெண்கள் இருவரும் அவர்களை நோக்கிப் பாய்ந்தார்கள்.

"பின்னே எங்களையும் கவனிக்கணும்ல... எங்ககிட்டேயும் பேசணும்ல..." என்றான் தியாகு.

"ஹலோ... பொண்ணைக் கொண்டுபோய் உட்கார வைக்கச்சொல்லி கூப்பிட்டுக்கிட்டு இருக்காங்க. நீங்க ரெண்டு பேரும் இந்த இடத்தை விட்டு காலி பண்ணுவீங்களாம்" என்று பொய்யாக விரட்டினாள் எழிலி.

"சரிப்பா... போறோம்" என்று கிளம்பவும், "தியாகண்ணா...! இங்க வாங்க" என்று அழைத்தாள் எழிலி.

தியாகு பக்கத்தில் வந்ததும், "எல்லா ஃபங்ஷனும் முடியட்டும். தனியா அனுப்பறேன். நீங்க பேசுவீங்களாம்" என்றாள்.

"ஓகோ... இப்படிச் சொன்னா... நாங்களும் உங்களைத் தனியா அனுப்புவோம்னு நினைச்சீங்களா..." என்று அவன் கலாட்டா செய்து விட்டுப் போனான்.

ரமணியை அழைத்துக் கொண்டு நிச்சயதார்த்தத்துக்கு அவளது இருக்கையில் அமர்த்தக் கிளம்பினாள் எழிலி.

அமிர்தலிங்கம் ஒருபக்கம் அமர்ந்திருந்து அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.




**கே**ரளாவின் உள்ளடங்கிய ஒரு பகுதியில் இருந்தார்கள்.

தேனிலவுக்கு மிக ஏற்ற இடம் என்று அந்த இடத்தைத் தேர்வு செய்து கொடுத்திருந்தான் ராமபிரசாத்.

ரமணியும் தியாகுவும் தங்கள் தனிமையை கொண்டாடிக் கொண்டிருந்தார்கள். அந்த கிராமத்துக்கு வருவதற்கு முன்பாக கொச்சின் போய்



கப்பல் பார்த்து விட்டு – கடல் பகுதிகளில் சுற்றிவிட்டு – நேரம் கழித்து விட்டு – இரவானால் அந்தக் கிராமத்துக்கு வந்துவிடுகிற தூரத்தில் அது இருந்தது.

"திருச்சூர் பார்க்கணுங்க" என்று சொல்லிக்கொண்டிருந்தாள்.

"போகலாம். எங்கெங்கு போகணுமோ போகலாம்" என்றவன்...

"கேரளான்னாலே அழகுதான். இந்தப் படகு... பிரயாணம் எல்லாம் ரொம்ப அருமையா இருக்கில்ல" என்று சொல்லிக் கொண்டான் தியாகு.

"ஆமாம். பின்னே... அது மட்டுமா..." என்று அவள் இழுத்தாள்,

"ஆமாம். கேரளா பொண்ணுகளும் அழகுதான்..." என்று அவள் வாயைப் பிடுங்கினான் தியாகு.

"ஓகோ. இதுக்குத்தான் கேரளாவுக்கு வந்தீங்களா..." என்று அவள் பொய்யாக கோபித்துக் கொண்டாள்.

"ஏன், அழகை ரசிக்கக்கூடாதா... தப்பா... ?" என்றான் அவன்.

"தாராளமாக ரசிங்கப்பா... அழகை – இறைவன் படைத்திருக்கிறதே ரசிக்கத் தானே...? ஆனா அதுக்குன்னு உரிமையா யாருடைய அழகை ரசிக்கலாமோ அப்படித் தான் ரசிக்கணும்" என்றாள் அவள்.

"அதெல்லாம் அந்தக் காலத்துல. ராமாயணத்திலே ஒரு கதை சொல்வாங்க, தெரியுமா? சீதையோட நகைன்னு லட்சுமணன்கிட்ட ஏதேதோ நகைகளை எல்லாம் காட்டினாங்களாம். அவனுக்கு சரியாத் தெரியலையாம். ஆனால் அவள் கால்ல போடுற ஏதோ ஒரு அணிகலனைக் காண்பிச்ச உடனே லட்சுமணன் சொன்னானாம். 'இது அண்ணியோடது தான்' என்று. ஏன்னா... அவன் காலை மட்டும்தான் பார்ப்பானாம். அப்படிக் கதை... அந்தக் காலத்துல... தெரியுமா" என்றான் தியாகு.

"ஆமாம். நானும் படிச்சிருக்கேன்." என்றாள் ரமணி.

"இப்ப அப்படி இருக்க முடியுமா, சொல்லு!" என்று அவன் அவளை மடக்கினான்...

"ஆமாமாம். அப்படி இருக்க முடியாது" என்று அவள் ஒத்துக் கொண்டாள்.

"என்ன எல்லாத்துக்கும் 'ஆமாம்' போடறே... கடைசியில எங்காவது நல்லா கொக்கி போடப்போறே..." என்று அவன் எச்சரிக்கையாக சிரித்தான்...

"புரிஞ்சா சரி... பொறாமை... ம்... பொறாமை" என்று சொல்லிவிட்டு அவன் முகம் நோக்கி குனிந்தாள்.

கழுத்தில் தொங்கிய தாலி மணக்க... அவள் அவன் மார்பில் ஒண்டிக் கொண்டாள்.

"நீங்க சொல்றது கரெக்ட் தாங்க. இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் இருக்க முடியாது. ஆனா... வரம்பு மீறாம நாகரிகமா எந்த அழகையும் ரசிக்கிறதுல தப்பில்லைங்க" என்றாள் அவள்.

"ஆமாம். நீ அந்தக்காலத்துப்பெரியவங்களை எல்லாம் பாரு. பத்மினியைப் பிடிக்கும். வைஜயந்தி மாலாவைப் பிடிக்கும்... அப்படீம்பாங்க. அப்படீன்னா பத்மினியையும் வைஜயந்திமாலாவையும் கல்யாணம் பண்ணிக்கணும்னு அர்த்தமா? இப்பவும் யங்ஸ்டர்ஸ் யார் யாரோ நடிகைகளைச் சொல்றாங்க... அப்ப அவங்களைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு அர்த்தமா... அது அந்த லிமிட்டோட ரசிக்கிறோம்."

"சூப்பர் தத்துவம் எட்டாயிரத்து எண்பத்தி மூணு..." என்று சிரித்தாள் ரமணி.

"தப்பா சொல்றே..." என்றான் அவன்.

அவள் விழிக்க.. "எட்டாயிரத்து எண்பது தான்" என்று அவன் திருத்தம் வேறு சொன்னான். இருவரும் கலகலவென்று சிரித்தார்கள்.

"ஏங்க... அண்ணனைப் பார்த்தீங்களா..?" என்று அவள் ஏதோ சொல்ல ஆரம்பித்தாள்

".அண்ணன் இங்க வந்திருக்கானா...? இங்கே எதுக்கு வந்தான்? மச்சான்காரன் இங்கே வந்தா நாம எப்படி தேனிலவு கொண்டாடறது?" என்று அவன் வம்பிழுத்தான்...

"ஐயே... போதுமே..." என்று அவளும் பதில்கொடுத்தாள்.

"என்ன சொல்லு... அண்ணனைப் பத்தி"

"இல்ல. மனசுக்குள்ளேயே பிடிவாதமா இருந்திருக்காரு. இன்னொரு விஷயம் தெரியுமா... எழிலி அண்ணி தான் ப்ரொபோஸ் பண்ணியிருக்காங்க" என்றாள் அவள்.

"பாத்தியா... கேர்ள்ஸ் எல்லாம் இப்போ எவ்வளவு போல்டாயிட்டாங்க... அத வேற உங்கண்ண உங்கிட்டச் சொல்லிட்டாப்லேயா..." என்றான்.

"எங்க அண்ணன் சொல்லலை. அண்ணியே சொன்னாங்க. 'நான் தான் ப்ரோபோஸ் பண்ணினேன்'னு பெருமையாச் சொன்னாங்க" என்று அவள் சிரித்தாள்.

அவனும், "அப்படிப் போடு" என்று சிரித்தான்.

"ஆனால் அண்ணன் வந்து பிடி கொடுக்கவே இல்லையாம்."

"எப்படி பிடி கொடுப்பாரு? நீ தான் பிடி கூடவே இருந்திருக்கியே... எப்படி



பிடி கொடுப்பாரு..." என்றான்.

"ஆமாங்க. நல்லவேளை நீங்க வந்தீங்க. நமக்குக் கல்யாணம் ஆச்சு. இல்லைன்னா அண்ணன், மனசுக்குள்ளேயே வச்சுகிட்டு பாவம், எழிலியை நோகடிச்சுருப்பாரு... ஒருவேளை இந்த பிரச்னையினால கல்யாணமே ஆகலைன்னா என்னாயிருக்கும்" என்று அவள் கவலைப்பட்டாள்.

அவன், அவளது மூக்கைப் பிடித்து ஆட்டிவிட்டு "நடக்காததை எல்லாம் நினைச்சு ஏன் கவலைப்படறே..? ஆண்டவன் எப்படி என்னைக் கொண்டு வந்து சேர்த்தான் பாத்தியா...? ராம்பிரசாத்துக்கு கல்யாண யோகம் வந்திருச்சு... ஆண்டவன் என்னைக் கொண்டு வந்து சேர்த்தான்" என்றான்.

"அது யாருங்க அந்த ஆண்டவன்... பைத்தியக்கார ஆண்டவன்" என்று அவள் கிண்டல் செய்ய...

"ஆண்டவன் இல்லை... ரமணி மனுஷன்..."

அவள் புரியாமல் பார்க்க... "நானாத் தேடி வந்தேன்னு தானே நினைச்சுகிட்டிருக்கே...?" என்றான்.

"ஆமாங்க..." என்று அவள் பார்த்தாள்...

"அட மக்கு.! நீ வேலை செய்யற ஆபீஸ் எனக்கு எப்படித் தெரியும்? அந்த ஆபீஸ்க்கும் நான் வேலைசெய்யற ஆபீஸ்க்கும் என்ன சம்பந்தம்? ஏதோ ஒரு ஆபீஸ்க்கும் நான் வேலைசெய்யற ஆபீஸ்க்கும் என்ன சம்பந்தம்? ஏதோ ஒரு சம்பந்தத்தை ஏற்படுத்திட்டு வந்தேன். எப்படி தெரியுமா?" என்று கேட்டான்.

"எப்படீங்க... ?" என்று அவள் ஆச்சரியமானாள்.

"உங்கண்ணன் கடமை கடமைன்னு சொல்லிட்டு இருந்தான்ல... நீ கல்யாணம் பண்ணினாத்தான் நான் கல்யாணம் பண்ணிப்பேன்னு... அதுமாதிரி எழிலியோட அப்பாவுக்கு ஒரு கடமை இருந்திருக்குமில்லே – தம் பொண்ணு கல்யாணத்தை நடத்தணும்னு" என்று கேட்டான்.

அவளுக்கு அப்பொழுதுதான் லேசாக விளங்குகிறாற் போல இருந்தது.

"ஆமாம் ரமணி. எழிலிகிட்ட அவங்க அப்பா சொன்னாராம். 'லவ் மேரேஜ் பண்ணி நாங்களே ரொம்ப கஷ்டப்பட்டிருக்கோம். நீ லவ் மேரேஜ் பண்றது எங்களுக்கு விருப்பமில்லை' அப்படீன்னு சொல்லீட்டாங்க."

"அய்யய்யோ... அப்புறம்?" என்றாள் ரமணி பதட்டமாக.

"ஆமாம். அப்படி சொன்னதுக்கப்பறம் எழிலி, 'சரிப்பா... உங்களுக்கு விருப்பமில்லைன்னா நான் பண்ணிக்கலை' அப்படீன்னு சொல்லிட்டாங்களாம். உடனே அப்பா, அம்மா ரெண்டு பேருக்கும் உறுத்தலாகவே இருந்திருக்கு. எழிலி, சொன்னதோடு மட்டுமில்லை... உங்க அண்ணன்கிட்ட

திடீர்னு தொடர்பையே கட் பண்ணிக்கிட்டாங்களாம். இதையெல்லாம் கவனிச்சுக்கிட்டிருந்த அவங்க அப்பாவுக்கு வருத்தமாப் போச்சாம். நாம சொன்னதுக்காக அந்தப் பொண்ணு தன்னோட விருப்பத்தையே மாத்திக்கிட்டது. அப்ப அவளோட விருப்பத்தை மதிக்க வேண்டியது நம்ம கடமையில்லையா...? அப்படீன்னு உங்க அண்ணனை ஆபீஸ்ல பாத்திருக்காரு'' என்றான் தியாகு.

''இத்தனை நடந்துருக்கா? இதெல்லாம் அண்ணன் சொல்லவே இல்லை'' என்றாள்.

''ஆமாம். எவனாவது தங்கச்சிகிட்ட வந்து லவ் மேட்டரையெல்லாம் சொல்லிக்கிட்டு இருப்பானா...'' என்று அவன் சிரிக்க... அவளுக்கு வெட்கமாகப் போய் விட்டது.

''ஆமாம். அண்ணன் எப்படி வந்து சொல்லுவாங்க'' என்றாள்.

''அமிர்தலிங்கம் போய் பார்த்திருக்காரு. அதுக்கு முன்னாடி எழிலி மறுபடியும், 'வாங்க பேசுங்கன்'னு சொன்னவுடனே... அவங்க அப்பாவைப் போய் பார்த்துட்டு உங்க அண்ணன் சொல்லிட்டு வந்துட்டான். 'என் தங்கை, திருமணம் முடிஞ்சப்பறம்தான் நான் இதைப்பற்றியே நினைக்க முடியும்' அப்படீன்னு. உடனே அமிர்தலிங்கம்சார் என்ன பண்ணியிருக்காரு – எனக்கு என்ன... ஆகணும்? பெரியப்பா...! பெரியப்பா என்ன பண்ணினாரு... நேரா அவன் ஆபீஸ்க்கே போய் 'என்னைக்கு இருந்தாலும் என் பொண்ணு உன்னைத்தான் கல்யாணம் பண்ணும்' அப்படீன்னு சொல்லிட்டு வந்திட்டாரு. அப்புறமா தான் யோசனை பண்ணியிருக்காரு. இந்தப் பிரச்னைக்கு தீர்வு காணணும்னா எங்கே மையப்புள்ளி அப்படீன்னு யோசிச்சிருக்காரு... உனக்கு கல்யாணம் ஆகணும்... அப்பத்தான் அண்ணன் ஒத்துக்குவான் அப்படீன்னு யோசனை பண்ணி... தரகர் ரங்கசாமியிடம் போய் பேசியிருக்காரு...'' என்றான்.

ஆச்சரியமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் ரமணி.

''ரங்கசாமி, நான் வந்து முதல் தடவை பார்த்துட்டு போனதைச் சொல்லியிருக்காரு. ரங்கசாமி சாரை மறுபடியும் ஒருமுறை சந்திச்சு சொன்னேன். அந்தப் பொண்ணை எனக்கு ரொம்ப பிடிச்சுது. ஆனால் இந்த விஷயத்தை மறைச்சதுல எங்க பேரன்ட்ஸ் ரொம்ப கோபமாக இருக்காங்க. அவங்களை எப்படி கன்வின்ஸ் பண்றதுன்னு தெரியலை. அதுவும் எங்க அப்பா பிசினஸ் மேனாக இருக்கிறதுனால கொஞ்சம் நகை... அதுஇதுன்னு எதிர்பார்ப்பாரு. இப்பப் போய் நகையெல்லாம் கேட்டா அந்தப் பொண்ணோட ஊனத்தைப் பயன்படுத்தி நாம கேட்கிறோம் அப்படீங்கற மாதிரி ஆயிரும்.



என்ன பண்றதுன்னு தெரியலை அப்படீன்னு சொல்லிட்டு வந்துட்டேன். அதுக்கப்பறம்...'' என்றான் அவன்.

அவள் ஆழ்ந்த ஆர்வத்துடன் அவன் முகத்தையேப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நம்பினால் நம்பு ரமணி. அதுக்கப்பறம் வேறு எந்தப் பொண்ணையும் பார்க்கறதுக்குப் பிடிக்கலை, தெரியுமா–?'' என்றவன் அவள் முகத்தை தன் கைகளில் ஏந்தி முகம் நோக்கி குனிந்தான்.

அவளும் இழைந்து கொடுத்தாள். ''இதப்பாரு ரமணி, இந்த முகம் இருக்கே... அது என்னைக் காந்தம் மாதிரி கவர்ந்திருச்சு... தூக்கத்திலும் நடக்கும்பொழுதும் உன் நினைப்பு இருந்துகிட்டே தான் இருந்தது. ஆனா... நான் என்ன காரணம் கற்பிச்சிட்டேன்னா... இது ஒருமாதிரியான குற்ற மனப்பான்மைன்னு நினைச்சிட்டேன். ஆனா... இது ஒருவகையான காதல் தான்... இல்லை?...'' என்று அவன் தனக்குத் தானே சொல்லிக் கொள்வது போல சொல்லிக் கொண்டான்.

தென்னைமரங்கள் அடர்ந்த அந்த தோப்புப்... பக்கத்திலே – கிராமத்திலே இருந்த படகுக்கு முன்னாலே அவர்கள் அமர்ந்து கொண்டிருந்தார்கள்.

அவனோடு அவள் இணைந்து ஒட்டிக் கொண்டிருந்தாள். ''பாத்தியா... எவ்வளவு அருமையான நிலா'' என்று அவன் நிலாவை வேறு காட்டி அவள் மேலே பார்க்கிற நேரத்தில் தன்னுடைய கெஞ்சலையும் கொஞ்சல்களையும் வெளிப்படுத்திக் கொண்டான்.

ரமணி அவன் விருப்பத்துக்கு இழைந்து கொடுத்தாள்.

''ஏங்க... எத்தனை பேரு... இப்படி மகளுக்காக இப்படியெல்லாம் போய் செய்வாங்க...'' என்று கேட்டாள்.

''எத்தனை பேரு செய்வாங்களோன்னு தெரியாது. ஆனா... இவரு செய்வாரு. ஏன்னா... இவரு அந்தக்காலத்திலேயே சுவர் ஏறிக் குதிச்சு எழிலியோட அம்மாவைச் சந்திப்பாராம்'' எனவும் இரண்டு பேரும் சிரித்தார்கள்.

''அந்தக்காலத்துக் காதல். அப்போ பாத்துக்கோ... எவ்வளவு எதிர்ப்பு இருந்திருக்கும். அப்புறம் இன்னொண்ணு சொன்னாரு ரமணி'' என்றான்.

''ம்...'' என்றாள் அவள்.

''எங்களுக்கு வெளியில பிரச்னைகள் இருந்தது. சமூகத்தில எதிர்ப்புகள் இருந்தது. ஆனா நாங்க இரண்டு பேரும் ஒற்றுமையா... சந்தோஷமா வாழ்ந்தோம். ஏன்னா... எங்களுக்கு ஒருத்தரு மேல ஒருத்தருக்கு ஈர்ப்பு இருந்து கல்யாணம் பண்ணினோம். கடனுக்காக பண்ணினா அப்படி

இருந்திருக்குமோ இல்லையோ என்னமோ... தெரியலை. அந்த சந்தோஷம் என் மகளுக்கும் தானே கிடைக்கணும். வற்புறுத்தி எழிலிக்கு வேறொரு மாப்பிள்ளையையோ... ராம்பிரசாத் வேறொரு பொண்ணையோ கல்யாணம் பண்ணினா... அந்த உறுத்தல் இருந்து கிட்டேதானே இருக்கும். இப்படியெல்லாம் யோசிச்சிட்டுத் தான் நான் உங்ககிட்ட வந்திருக்கேன்'' அப்படீன்னு எங்கிட்டே வந்தாரு.

'நான் என்ன செய்யணும்'னு கேட்டேன். 'நீங்க ரமணியை கல்யாணம் பண்ணிக்க முடியுமா' என்று கேட்டார். 'அதான் சார்... முதல் தப்பு... அவங்க இந்த மாதிரி ஒரு ஊனம் இருக்குங்கறத மறைச்சுட்டாங்க... இன்பேக்ட் எனக்கு ஒரு பாலிசி இருந்தது.

'எந்த ஒரு பொண்ணை முதல்ல போய் பார்க்கிறேனோ... அந்தப் பொண்ணை வேண்டாம்னு சொல்லாம கல்யாணம் பண்றது...' அப்படீன்னு ஒரு பாலிசி இருந்தது. ரமணியோட போட்டோவை கொடுத்தாங்க. அது... மார்பளவு... செஸ்ட் அளவு போட்டோ... பார்த்தவுடனே பொண்ணைப் பிடிச்சுப்போய் எங்க பேரன்ட்ஸ் வந்தாங்க. ஆனால் அவங்ககிட்ட முதல்ல பார்க்கிற பொண்ணைத் தான் நான் கல்யாணம் பண்ணுவேன்கிறதை அழுத்திச் சொல்ல முடியல... ஏன்னா... இந்த விஷயத்தை அவங்க மறைச்சிட்டாங்க..என்கிற ஒரே கருத்துலேயே நின்னாங்க... அப்படீன்னு நான் சொன்னேன்.''

''அப்பதான் அவர் சொன்னாரு. 'இப்ப உங்களுக்கு இன்னொரு பிளஸ் பாயிண்ட் கிடைச்சுருக்குங்க... ரமணிக்கு கவர்ன்மெண்ட் வேலை கிடைச்சுருக்கு. அதை வச்சு ஏதாவது பேச முடியுமான்னு பாருங்க...' அப்படீன்னு அவர் தான் ஐடியா கொடுத்தாரு'' என்றான்.

''உண்மையிலேயே நான் அமிர்தலிங்கம் மாமாவுக்கு ரொம்ப நன்றி சொல்லணும்'' என்றாள் ரமணி.

''அவருக்கு சொல்லாதே. உங்க அண்ணனுக்கு சொல்லு'' என்றான்.

''ஏன்?''

''அவருடைய பொண்ணை உங்கண்ணன் லவ் பண்ணப் போயிதானே... இந்த பிரச்னையே வந்தது'' என்றான் அவன்.

''ஆமாமாம்... எப்படி சுத்திவளைச்சு வருது பாருங்க...'' என்றாள் அவள்.

''எப்படி சுத்தி?... இப்படியா சுத்தி வளைச்சு வருது...'' என்று அவன் கைகள் அவள் இடுப்பை வளைத்தன.

''போதுமே... எப்படா சான்ஸ் கிடைக்கும்னு பார்த்திட்டு இருப்பீங்க...''



என்று அவள் அவனைத் தள்ளிவிட்டாள். அவள் தள்ளுகிற வேகத்தில் அவன் அசைந்துகூட கொடுக்காமல் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

''மேடம். நீங்க சும்மா அப்படியெல்லாம் தள்ளி வச்சுட முடியாது. ஏன்னா... நாங்க முழு உரிமையோட உங்களை இங்கக் கூட்டிட்டு வந்திருக்கோம்'' என்றான்.

அவள், வேறு ஏதோ யோசனையில் இருந்தாள்.

''என்ன யோசனை?'' என்றான்.

''இல்லை... அமிர்தலிங்கம் மாமா வந்து கேட்கலைன்னா... நீங்க என்னைக் கல்யாணம் பண்ணிக்க மாட்டீங்களோ...'' என்றாள்.

''போச்சுடா... இந்த லேடீஸை திருப்திப் படுத்துறது இருக்கே...'' என்று அவன் முணுமுணுக்க...

''அதென்ன லேடீஸூ...? ரொம்பப் பேரத் தெரியுமோ... ப்ரண்ட்ஸா... கேர்ள் ப்பிரண்ட்ஸ் இருக்காங்களா...?'' என்றாள்.

அவன் விழுந்துவிழுந்து சிரித்தான்.

''போச்சுடா... டைவர்ட் பண்றாப் பாரு. இல்லை ரமணி. இது நடக்கிறதுக்கு அவர் ஒரு காரணமாக இருந்தாரு. அவ்வளவு தான். மே பீ... இன்னும் ரெண்டு மூணு மாசத்தில... எங்க அம்மா அப்பாவை சமாதானப்படுத்தி... நான் வந்திருப்பேன்... இந்த கவர்ன்மெண்ட் வேலை உனக்கு இல்லாம இருந்தாலும் கூட... அதான் நடந்திருக்கும். என் மனசுக்குள்ள நான் ஒரு சங்கல்பம் செஞ்சிருந்தேன் ரமணி... கண்டிப்பா வேறு எந்தப் பொண்ணையும் கல்யாணம் பண்றதில்லை அப்படீன்னு...'' என்றான்.

அந்தக் கணத்தில் ரமணி நெகிழ்ந்து போனாள்.

''அப்படி என்னங்க எங்கிட்ட இருக்கு? அந்த அளவுக்கு நான் என்ன தகுதி?'' என்று கேட்டாள்.

''என்ன தகுதி வேணும்? இங்க பாரு... அந்த நிலாவைப்பாரு... இந்த நிலா முகத்தைப் பாரு... ஏதாவது வித்தியாசம் தெரியுதா?'' என்றாள்.

''அந்த நிலாவுக்குள்ள ஒரு களங்கம் இருக்குங்க...'' என்று தன் குறையை மறைமுகமாகச் சொன்னாள்...

''அதனாலத்தான் சொல்றேன். நீயும் அந்த நிலாவும் ஒரே மாதிரி தான். **நீ... அந்த நிலவு தெரியுமா?''** என்றான்.

அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

## 15



"டேய்... டேய்... அப்பளத்தை பார்த்து பொரிடா..." என்றார்கள் நண்பர்கள்.

எழிலியும் ராம்பிரசாத்தும் ஒருவர் கண்களை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

ரமணியும் தியாகுவும் பக்கத்திலே இருந்து எல்லாவற்றையும் நடத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரு குடத்தை வைத்து அதற்குள் ஒரு மோதிரத்தைப் போட்டு... இன்னும் ஏதேதோ வெள்ளிச் சாமான்களையெல்லாம் போட்டு... எடுக்கச் சொன்னார்கள்.

எழிலியும் ராம்பிரசாத்தும் அந்தக் குடத்துக்குள் கையை விட்டுத் துழாவினார்கள். மோதிரம் எழிலியின் கையில் கிடைத்தது. அவள் அந்த குடத்திற்குள்ளாகவே அவனது கையில் அழுத்தி வைத்துக் கொடுத்தாள். அவன் அவள் முகத்தைப் பார்க்க... அவள் கண்ணமர்த்தினாள்.

"நீங்க தான் ஜெயிக்கணும்" என்றாள்.

ராம்பிரசாத் சிரித்தவண்ணம் அந்த மோதிரத்தை வெளியே எடுக்க... அங்கே ஒரே கூக்குரல் கிளம்பியது. பால் பழம் கொடுத்தார்கள். அதற்குப்பிறகு 'ஆசிர்வாதம் வாங்கிக்கிங்க' என்றார்கள்.

எழிலியும் ராம்பிரசாத்தும் தங்கள் தாய், தந்தையரிடம் ஆசிர்வாதம் வாங்கிக் கொண்டு, அமிர்தலிங்கத்திடமும் போய் ஆசிர்வாதம் வாங்கினார்கள்.

அமிர்தலிங்கம் கண்களில் ஆனந்தக் கண்ணீர் நிறைந்தது. திரும்பி தியாகுவைப் பார்த்தார். அப்போது ரமணி அருகிலே நின்று, "நீங்க தான் மாமா ரொம்ப சந்தோஷப்படணும். ஏன்னா... எல்லாத்துக்குமே நீங்க தானே காரணம்" என்றாள்.

திடுக்கிட்டுப் போன அமிர்தலிங்கம், தியாகுவைப் பார்த்து "சொல்லிட்டியாப்பா... ?" என்பது போல கேட்டார்.

அவன் அழுத்தமாகச் சிரித்தான்.

"ஆமாம் மாமா... நீங்க தானே காரணம்... நீங்க மட்டும் இந்த அழகான எழிலியை பெத்துக் கொடுக்கலைன்னா எங்க அண்ணன் எவ்வளவு ஏமாந்துப் போயிருப்பாரு..." என்றாள் ரமணி.

அவன் சாமர்த்தியமாக சமாளிப்பதைப் பார்த்து சிரித்தான் தியாகு.



தியாகு ரமணியிடம் சொன்னது மட்டுமில்லாமல்... ராம்பிரசாத்திடமும் லேசாக கோடு காட்டியிருந்தான். ராம்பிரசாத் அதையெல்லாம் கேள்விப் பட்டதற்குப் பின்பு, கொஞ்சம் நெகிழ்ந்து போய் இருந்தான்.

அமிர்தலிங்கம் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. ஒரு தந்தை தன் மகளுக்குச் செய்கிற கடமை என்று தான் அவர் எண்ணிக் கொண்டார்.... இதிலே என்ன இருக்கிறது என்பது போலத்தான் அவர் நடந்து கொண்டார். ஆனால் தான் எடுத்துக் கொண்ட முயற்சியினால் ரமணியினுடைய வாழ்வில் பெரிய மலர்ச்சி ஏற்பட்டது என்பதில் அவருக்கு மகிழ்ச்சி என்றால்... இன்னொரு புறம் இதையெல்லாம் கேள்விப்பட்டதற்குப் பின்பு ராம்பிரசாத் நெகிழ்ந்து போய் இருந்தான்.

தனக்குக் கூட இது தோன்றவில்லையே... என்று கொஞ்சம் வெட்கமும் பட்டுக் கொண்டான். தியாகுவிடம் அப்படிச் சொன்னபொழுது தியாகு தான் அவனைத் தேற்றினான்.

"உங்களுக்கு எப்படி தெரியும்? எனக்கு இந்த மாதிரி ஒரு நினைப்பு இருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்? அதுவும் அன்னைக்கு வெளியே வந்ததற்கு அப்புறம் உங்ககிட்ட தொடர்பே வச்சுக்கலை... எங்களுக்கு இன்ட்ரஸ்ட் இருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்க அதுக்காக வந்து எங்கிட்ட கெஞ்சிகிட்டா நிற்க முடியும்?" என்று விதவிதமாகத் தேற்றினான்.

இந்த இரண்டு மாத காலத்தில் தியாகுவும் ரமணியும் நடத்துகிற குடும்ப வாழ்க்கையைப் பார்த்து ராம்பிரசாத் உண்மையிலேயே நெகிழ்ந்திருந்தான். இந்த அதிர்ஷ்டத்துக்கு காரணமான தனது வருங்கால மாமனாருக்கு மனதுக்குள்ளே நன்றி சொல்லிக் கொண்டே தான் இருந்தான்.

திருமணம் முடிந்து ரமணியும் தியாகுவும் தேனிலவுக்குப் போய் விட்டு வந்து அவர்கள் வீட்டில் இரண்டு நாள் தங்கிவிட்டுக் கிளம்பியபொழுது... ரமணி இந்த விபரங்களையெல்லாம் அவனிடத்திலே சொன்னாள்.

தியாகுவும் ஏற்கனவே சொல்லியிருந்ததால், "எனக்குத் தெரியும்மா... தியாகு மச்சான் எல்லாத்தையும் சொன்னாரு..." என்றான்.

"ஏண்ணா... இந்த ஏழெட்டு மாசமா எழிலி அண்ணிகிட்ட உனக்கு இன்ட்ரஸ்ட் இருந்தும்... ஏன் அதுக்கு முன்னாடி ரெண்டு மாசம்... கிட்டத்தட்ட ஒரு வருஷமா எழிலி அண்ணிகிட்ட இன்ட்ரஸ்ட் இருந்தும் அதை எப்படி மனசுக்குள்ளேயே வச்சுட்டு இருந்திருக்கே... அண்ணா? எல்லாத்துக்கும் நான் தானே காரணம்?" என்று கலங்கினாள்.

அண்ணனும் தங்கையும் பேசட்டும் என்று தியாகு நகர்ந்து விட்டான்.

"இந்தா பாரும்மா... மறுபடியும் ஆரம்பிச்சுட்டியா... இந்த செல்ப்... பிட்டிதான் கூடாதுன்னு நான் எப்பவுமே சொல்லிக்கிட்டு இருக்கேன். இருந்தா ...ம்மா... உனக்கு ஒரு விஷயம் சொல்லட்டுமா..?.இந்த காதல்ங்கிறதுல காத்திருக்கிறதுல ஒரு சந்தோஷம் இருக்கும்மா. அது மட்டுமல்ல... எனக்கு இன்னொரு உத்திரவாதமும் இருந்தது. எழிலி எனக்காக கண்டிப்பாக் காத்திருப்பாள்... அப்படீன்னு. அதனால நான் தைரியமா இருந்தேன். நீ ஏம்மா... வொரி பண்ணிக்கிறே..." என்றான்.

அவள் மறுபடியும், "ஒருவேளை தியாகு ஒத்துக்காம இருந்திருந்தா..."

"அய்யய்யே... நடந்ததுக்கப்பறம்... அது நடந்திருந்தா... இது நடந்திருந்தான்னு ஏம்மா வொரி பண்ணிக்கிறே..." என்றான் அவன் சற்றுக் கோபமாக.

"இல்லைண்ணா... என்னோட குறை உனக்குத் தெரியுமில்லை" என்றாள்.

"இந்தா பாரும்மா... இது ஒண்ணும் உலக மகா குறையில்லை. தியாகுவும் ஒண்ணும் தியாகம் பண்ணிடலை... உன்னைப் பிடிச்சு... உன் குணம் பிடிச்சு... அழகு பிடிச்சுத் தான் உன்னைக் கல்யாணம் பண்ணியிருக்காரு. நீ உன் முகத்தைக் கண்ணாடியில பார்த்திருக்கியா... நிலா முகம்மா... உன் முகம்... அப்படி நிலவு மாதிரியான முகம்... நீ அந்த நிலாவுக்கு சமம்மா... ஏன் நிலா கூட உன்னைப் பார்த்து வெட்கப்படணும்" என்றான் சகோதரன்.

அவள் சிரித்து விட்டாள்.

"என்ன சிரிப்பு?" என்றான் அவன் கோபத்துடன்.

"இல்லை... அவரும் அதே மாதிரி சொன்னாரு..." எனவும் இரண்டு பேரும் அசடுவழிய சிரித்தார்கள்.

"அதிலேயும் எனக்கு முதல் பிரையாரிட்டி இல்லையா... அவன் சொல்லிட்டானா முதல்ல..." என்றான்.

"ஆமாம்மா... ஒரு கண்ணதாசன் பாட்டுக் கேட்டிருக்கியா... தங்கத்திலே ஒரு குறை இருந்தாலும் தரத்தினிலே குறைவதுண்டோ... அந்த மாதிரிம்மா... நீ! .. இனிமேல் இந்தத் தாழ்வு மனப்பான்மையே இருக்கக்கூடாது. கடவுள் எப்பவுமே ஒரு குறை வச்சா இன்னொரு நிறையை வச்சிடறான்... நீ எதைத் தொட்டாலும் நல்லா செய்யறே... கோலம் போடறதாகட்டும்... டிராயிங் ஆகட்டும்... எல்லா விஷயங்களிலும் உங்கிட்ட திறமை இருக்கும்மா. அதைமட்டும் நினைச்சு வளர்த்திக்கோ... இந்தக் குறைகளையெல்லாம் தூக்கி ஒருபக்கம் போடு" என்று அவளைத் தட்டிக் கொடுத்து, "அது மட்டுமில்லைம்மா... என்ன குறை இருந்தாலும் அண்ணன் இருக்கேன். ஞாபகம் வச்சுக்கோ, சரியா? என் வாழ்க்கையில எழிலி முக்கியம்தான். ஆனா... அதைக் காட்டிலும் நீ தான் எனக்கு முக்கியம்" என்று சொல்லவும் ரமணி ஆனந்தக் கண்ணீர் பொங்க அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள்.

சற்றுநேரம் பேசிக் கொண்டு இருந்து விட்டு கிளம்பினார்கள். அந்த நேரத்திற்கு எழிலியும் வந்தாள்.

"அண்ணி, அண்ணனைப் பத்திரமாப் பாத்துக்குங்க" என்று கேலி செய்தாள் ரமணி.

"அண்ணி... இன்னும் ஆகலையே.." என்றாள் எழிலி.

"ம்... அப்படியா... அண்ணன்கிட்ட கேளுங்க..." என்று சொல்லி கலாட்டா செய்து விட்டு தியாகுவும் ரமணியும் கிளம்பினார்கள்.

அதற்குப் பிறகு... தன் தந்தையிடம் அனுமதி வாங்கிக் கொண்டு, எழிலியை ஒரு நல்ல ஹோட்டலுக்கு அழைத்துப் போனான் ராம்பிரசாத்.

"எழிலி..!.உங்க அப்பா நம்ம ரமணி மேரேஜ்க்காக ரொம்ப மெனக்கிட்டிருக்காருன்னு உனக்குத் தெரியுமா..." என்று விபரம் சொன்னான்.

உண்மையில் எழிலிக்கே அது தெரிந்திருக்கவில்லை.

"அப்படியாங்க..." என்று அவளும் உருகினாள். அதே உருக்கத்தோடு அன்றைக்குப் போய் தந்தைக்கு நன்றி சொன்னாள்.

தந்தை சிரித்தார். "இல்லைம்மா... நீ வேதனைப்படும்பொழுது... நான் எப்படி சும்மா இருக்க முடியும்? நீ எங்ககிட்ட சரின்னு சொல்லிட்டே. ஆனா மனசுக்குள்ளே வேதனைப்பட்டே... அதைப் பார்க்கும்பொழுது... அந்தக்கால நினைவுகள் எல்லாம் நினைவுக்கு வந்துடுச்சும்மா... அன்னைக்கு எங்க பெற்றோர்களுடைய ஆதரவு எங்களுக்குக் கிடைக்கலை... ஆனா உனக்கு அந்த நிலை வரக்கூடாதுன்னுதாம்மா நான் இறங்கி வேலை செஞ்சேன்..." என்றார்.

இப்பொழுது அதெல்லாம் நினைவில் வர எழிலியும் ராம்பிரசாத்தும் சிரித்துக் கொண்டார்கள். ஏனென்றால்... இப்பொழுது அவர்கள் தேனிலவில் இருந்தார்கள். ஆனால் த்ரீ டேஸ்தான் என்று நிபந்தனை போட்டு இருந்தான் ராம்பிரசாத்.

"ஏனாம்?" என்றாள் எழிலி.

"எழிலி! அம்மா, அப்பா... ரெண்டு பேரும் இப்ப லோன்லியா ஃபீல் பண்ணுவாங்க... ரமணி இருந்தாலாவது வீட்ல நல்லாயிருக்கும். ரமணியும்

கிளம்பிட்டா. நாமளும் வெளியே சுத்திக்கிட்டு இருந்தோம்னா... அவங்களுக்கு கஷ்டமாக இருக்கும். கொஞ்சநாளைக்கு... அவங்களுக்கு தெளிவாகிற வரைக்காவது... நானும் நீயும் மாத்திமாத்தி அவங்ககூட இருக்கணும்'' என்றான்.

"அதுக்கென்ன... நிச்சயமா... !'' என்றாள் எழிலி.

"முதல்ல... ரமணி வீட்லேயே இருப்பாளா... இப்ப வேலைக்கு போய்கிட்டு இருக்காளா... இந்தப் பகல்நேரத் தனிமைக்கு பழகிட்டாங்க. ஆனா சாயங்காலம் ஆனா நானும் ரமணியும் எப்ப வருவோம்னு காத்துக்கிட்டு இருப்பாங்க'' என்றான்.

சொல்லச் சொல்லத்தான் அவனுக்கு இன்னொரு விஷயம் நினைவுக்கு வந்தது.

"ஏன்... எழிலி... உங்க பேரன்ட்ஸ் கூட அப்படித்தானே...'' என்றான்.

அவள் கணவனைப் பெருமையாகப் பார்த்தாள்.

"தேங்க்ஸ்ங்க...'' என்றாள்.

"ஏன்... ?''

"இல்லை... பெரும்பாலும் பிள்ளைவீட்டுக்காரங்க வந்து பெண்களுக்கும் அந்த மாதிரி இருக்கட்டும்ங்கறதை உணர்றதில்லையோன்னு எனக்கு இருந்தது. நீங்க உடனே இதக் கேட்டீங்கில்லையா–...'' என்றாள்.

"எனக்குப் புரியும் எழிலி. எங்க வீட்லையாவது இரண்டு பேரு... உங்க வீட்ல நீ ஒருத்தி தான். நல்லவேளை அடுத்த தெருவாப் போச்சு. எப்பவேணும்னாலும் போய்க்கலாம், வந்துக்கலாம். தங்கிக்கலாம். நானும் வேணும்னாலும் வந்து தங்கறேன். அதெல்லாம் ஒரு பெரிய குறையே இல்லை'' என்று அவளுக்கு ஆறுதல் சொன்னான்.

"ஏங்க... எங்கப்பாவைப் பற்றிப் பாராட்டினீங்கல்லை... அவரு ஒரு பொண்ணுக்கு செய்ய வேண்டிய கடமையைத்தான் செஞ்சாரு. ஆனா... எனக்கு இரண்டு விதத்திலே பெருமை தெரியுமா?'' என்று அவள் பெருமையடித்துக் கொண்டாள்.

"அப்படியா?'' என்று சிரித்த அவன், "எப்படி?'' என்று கேட்டான்.

"எங்க அப்பாவும் கடமை வீரர் தான். எனக்கு வாய்ச்ச கணவரும் கடமை வீரர் தான்'' என்று அவள் ஏதோ பள்ளிக்கூட குழந்தை பாடம் சொல்வது போல நடித்துக் காட்டினாள்.

"எப்படி?'' என்றான் அவன்.



"பின்னே... தங்கைக்காக காதலையே தியாகம் செய்யத் துணிஞ்சவராச்சே... நீங்க...'' என்றாள் அவள்.

"அங்க தான் நீ தப்பா புரிஞ்சுகிட்டே...'' என்றான் ராம்பிரசாத்.

"என்ன தப்பா புரிஞ்சுகிட்டேன்?'' என்று கேட்டாள்.

"நான் ஒண்ணும் தியாகமெல்லாம் பண்ணலை. காத்துக்கிட்டு இருந்தேன். அவ்வளவுதான். என் தங்கை கல்யாணம் முடியட்டும். அப்புறம் பண்ணிக்கிறேன்...அப்படீன்னு காத்துக்கிட்டு இருந்தேன்'' என்றான்.

"ஒருவேளை உங்க தங்கைக்கு ரொம்ப லேட்டாகிஇருந்தா?'' என்று கேட்டாள்.

அவன் வேதனையுடன் அவளைப் பார்த்தான்.

"அப்போ உங்க அப்பாகிட்டே பேசி, உனக்கு கல்யாணம் பண்ணச் சொல்லியிருப்பேன், வேற மாப்பிள்ளையோட...'' என்றான்.

அவள் முறைத்துப் பார்த்தாள்.

"நான் மட்டும் பண்ணியிருப்பேன்னு பார்த்தீங்களா... ?'' என்று கேட்டாள்.

"தெரியலை எழிலி. ஆனால் எனக்காக நீ காத்துக்கிட்டு இருந்தா அதுவும் எனக்கு ஒரு உறுத்தலாக இருந்திருக்கும். நல்லவேளை தியாகு வந்ததுனால எல்லாமே நல்லபடியா முடிஞ்சது'' என்றான்.

"என்ன முடிஞ்சதுன்னு சொல்றீங்க. இப்பத் தான் ஆரம்பம்'' என்றாள் அவள்.

"என்ன ஆரம்பம்?'' என்று இவன் கேட்க...

"நிறைய பேருக்கு நாம் நன்றி சொல்லணும். எங்கப்பாவுக்கு நீங்க சொல்ற மாதிரி... இவ்வளவு அன்பா பாத்துக்கிற உங்க அப்பா, அம்மாவுக்கு நான் நன்றி சொல்லணும். தியாகண்ணாவுக்கு நன்றி சொல்லணும்...'' என்று அவள் பட்டியல் போட...

"அதெல்லாம் ஊருக்குப் போய் பார்த்துக்கலாம். இப்ப எனக்கு நன்றி சொல்லு'' என்றான்.

"எதுக்கு?'' என்று அவள் கேட்க...

"நான் உன்னைக் காதலிச்சுத் தொலைச்சுருக்கேனே... அதுக்கு நன்றி சொல்ல வேண்டாமா?...

"சொல்லட்டுமா?'' என்று அவள் அவனைக் காதலுடன் பார்த்தாள்.

"பழைய பாட்டு ஒண்ணு இருக்கு தெரியுமா? 'காதலுக்கு நன்றி

சொல்வேன் கட்டிலின் மேலே... அந்தக் கருணைக்கு நான் பரிசு தந்தேன் தொட்டிலின் மேலே...' பாட்டு இருக்கு தெரியுமா?'' என்றாள்.

''அம்மணி, தொட்டில் எல்லாம் வேண்டாம். ஒரு ரெண்டு வருஷத்துக்கு நாம ப்ரீயா இருப்போம். ஓகேவா... ?''

''இந்த ரெண்டு வருஷத்துக்கு என்னென்ன பாடம் சொல்லித் தரணுமோ... அதையெல்லாம் நான் சொல்லித் தர்றேன். இப்ப ஆரம்பிக்கலாம்'' என்று அவன் அவள்முகம் நோக்கிக் குனிந்தான்,

தனக்காக... தன் காதல் வெற்றி பெறுவதற்காகப் போராடிய தந்தைக்கு அவள் மானசீகமாக நன்றி சொல்லிவிட்டு, இந்த உலகிற்கு வந்தாள்.

அப்பொழுது அவன் அவளிடத்தில் சொல்லிக்கொண்டிருந்தான்.

''ஏன், எழிலி... அது ஏன் எல்லா ஆம்பளைங்களும் பெண்களை நிலாவுக்கு ஒப்பிடறாங்க...'' என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

''ஏன்னா... நிலா குளிர்ச்சியா இருக்கு. தன்னோட ஒளியை எல்லா இடங்களுக்கும் சமமாப் பாய்ச்சுது. அது மாதிரி பெண்ணும் குளிர்ச்சியா இருக்கணுமாம். எல்லா இடத்துக்கும் சமமா தன் அன்பைக் காட்டணுமாம்'' என்று சிரித்தாள் அவள்.

''நல்லா பொழிப்புரை சொல்றே'' என்றான் அவன் , .

''**நீ அந்த நிலவு**. அப்படீன்னு ரமணிகிட்ட சொன்னேன் தெரியுமா?'' என்றான்.

அவள் ஆச்சரியமாகப் பார்க்க...

''ஆமாம். அவ எப்பப்பாரு குறையச்சொல்லி சங்கடப்பட்டுக்கிட்டு இருப்பா... அதனால சொன்னேன். குறையிருந்தா என்ன? நிலா கூட அழகாத்தான் இருக்கு. அந்த களங்கமே நிலாவுக்கு அழகாத்தானே இருக்கு... அது மாதிரி தான் உனக்கும் அப்படீன்னு சொன்னேன். ஆனா..அவள் என்ன சொல்லிட்டா தெரியுமா...'' என்று சொல்லிச்சிரித்தான்.

''என்ன சொல்லிட்டா... ?''

'இதே டயலாக்க தியாகு ஏற்கனவே சொல்லிட்டார்' அப்படீன்னு சிரிக்கிறா...'' என்றான்.

இப்பொழுது சிரிப்பது எழிலியின் முறை.

''எழிலி, உனக்கு அப்பா கரெக்ட்டாத் தான் பேரு வச்சுருக்காரு. இந்த நிலா வெளிச்சத்துலே உன்னைப் பார்க்கும்பொழுது நீ அழகா, அந்த நிலா அழகா என்று எனக்கு ஒரே கேள்வியா இருக்கு'' என்றான்.



''அப்ப ஒண்ணு செய்யுங்க. நிலாவைப் பாத்துக் கேளுங்க...'' என்றாள் அவள்.

அவன் உடனே அவளை நோக்கித்திரும்பி... ''நீ அழகா, அந்த நிலா அழகா?'' என்றான்.

''கேட்டுட்டேன் பாத்தியா... நிலாவைப் பார்த்து...'' என்று சொல்லி விட்டு அவள் முகம்நோக்கிக் குனிந்தான். அவளும் வாகாக இடம் கொடுத்தாள்.

''நீங்க கடமை வீரராம். கடமையை எல்லாம் கரெக்டா செய்வீங்களாம். நானும் அந்தக் கடமைக்கு தகுந்த பதில் கொடுப்பேனாம்'' என்று சொல்லி கலகலவென்று சிரித்தாள்.

அவனும் சிரித்தான். வானத்தின் நிலாவும் அவர்கள் இருவரையும் பார்த்து மகிழ்ந்து சிரித்தாள்.

– முற்றும்–

எனது அன்பார்ந்த
**விநியோகஸ்தர்கள் -**
**விற்பனையாளர்கள் -**
**வாசகர்கள் -**
அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த
**தீபாவளி**
நல்வாழ்த்துக்கள்.